விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005



இல.144,
பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆனி 08 வியாழக்கிழமை (22.06.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 185

## கல்வி, விவசாய அமைச்சுகளை விக்னேஸ்வரன் பொறுப்பேற்பு

ஆளுநர் முன் நேற்று சத்தியப்பிரமாணம்



23☛

## எதிர்பார்ப்புடன் வடக்கு சபை; அமர்வு இன்று

(யாழ்ப்பாணம்)

பல அரசியல் குழப்ப நிலைகளுக்கு மத்தியில் ஏற்படுத்தப்பட்ட சமரசத்துக்கு பின்னதாக பாரிய எதிர்பார்ப்புடன் வடக்கு மாகாண சபை அமர்வு இன்று வியாழக்கிழமை காலை இடம் பெறுகின்றது. (செ)

## ஆளுநரிடம் கையளிக்கப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணை தமிழரசுக் கட்சியால் வாபஸ்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு எதிராக வடக்கு மாகாண சபையில் உள்ள தமிழர 2☛



# காணாமல்போனோர் செயலகம் சான்றிதழ் மாத்திரம் கொடுக்கும் - ரணில்



## வழக்கு தொடர முடியாது!

(கொழும்பு)

காணாமல் போனவர்கள் தொடர்பான செயலகத்தை உருவாக்கும் திருத்தச் சட்ட மூல வரைபை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றியபோது, சான்றிதழை வழங்கும் அதிகாரம் மாத்திரமே இந்த செயலகத்துக்கு இருப்பதாக தெரிவித்துள்ளார். (04-ம் பக்கம் பார்க்க...)

## கார் மோதிய சிறுவன் மரணம்

(முழங்காவில்)

கிளிநொச்சி கரியாலை நாகபடுவான் அந்தோனியார் தேவாலயத்திற்கு முன்பாக கடந்த 17-ம் திகதி காரினால் மோதப்பட்டு படுகாயங்களுக்குள்ளான 04☛

## கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

(மல்லாவி)

கிளிநொச்சி தருமபுரம் 08 ஆம் யூனிட் காட்டுப் பகுதியில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் சுற்றிவளைக்கப்பட்டு கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்க 23☛

## ரூபாய் 100க்கு கடவுச்சீட்டு!

(கொழும்பு)

அனர்த்த நிலைமையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு குறைந்த கட்டணத்தில் கடவுச்சீட்டினை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. 24☛

## வாகன விபத்து சாரதிகள் காயம்

(மல்லாவி)

மாங்குளம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள மாங்குளம் நகரப் பகுதியில் வவுனியாவில் இருந்து யாழ் 23☛

## காணாமல் ஆக்கப்பட்டோர் சட்டமூலத்துக்கு எதிர்ப்பு!

### எதிர்த்து வாக்களிக்க உறவுகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சட்டமூலத்தை எதிர்த்து வாக்களிக்க வேண்டும் என காணாமல் ஆக்கப்பட்டோருடைய உறவுகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும்தமது கோரிக்கை கடிதத்தினை உறவுகள் அனுப்பி வைத்துள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டோர் சட்டமூலம் தொடர்பான விவாதம் பாராளுமன்றில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறித்த சட்ட 23☛

## யானை தாக்கி ஒருவர் பலி

(செட்டிக்குளம்)

வவுனியா செட்டிக்குளம் - அரவிதோட்டம் பிரதேசத்தில் நேற்று காலை காட்டு யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

செட்டிக் குளம் மெனிக்பாம் பிரதேசத்தை சேர்ந்த 50 வயதான 24☛

## சுகாதார அமைச்சு முற்றுகை; பொலிஸ் தடியடி; 80பேர் காயம்

(கொழும்பு)



தனியார் மருத்துவ கல்லூரியான சைட்டத்திற்கு எதிராக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் சுகாதார அமைச்சுக்கு முன்னால் 23☛

## சபை ஆயுள் நிறைவடைகிறது

(கொழும்பு)

வட மாகாணத்தில் ஜனநாயக மேடை விளையாட்டு நிறைவடைந்திருப்பதாக 04☛

## யாழ். விவசாய பீடத்துக்கு புதிய ஆராய்ச்சி கட்டடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய பீடத்தில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கட்டடத் தொகுதியை அமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவி 04☛

## ஞானசார தேரர் நேற்று சரண்... பிணை... விடுதலை...



(கொழும்பு)

நீதிமன்றத்தில் நேற்று முற்பகல் சரணடைந்த பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை முன்பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் லங்கா ஜயரத்ன நேற்று உத்தரவு பிறப்பித்தார்.

பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள ஞானசார தேரர், நேற்று முற்பகல் கொழு 04☛

## அமைச்சர் எஸ்.பி மன்னிப்பு கோரல்

(கொழும்பு)

அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க, அஸ்கிரிய மாநாயக்க தேரர் உட்பட பௌத்த தேரர்களி 23☛

## 12 இலட்சத்து 72 ஆயிரம் நிலக்கண்ணி வெடி அகற்றல்

### அபாயமற்ற மாவட்டமாக மட்டு. பிரகடனம்

(கொழும்பு)

நாட்டில் போர்க்காலத்தில் புதைக்கப்பட்டிருந்த 12 இலட்சத்து 72 ஆயிரம் நிலக் கண்ணி வெடிகள் இதுவரையில் அகற்றப்பட்டுள்ளதாக தகவல் தெரிவித்த புனர்வாழ்வு . மீள் குடியேற்றம் மற்றும் சிறைச்சாலைகள் 04☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்காத நினைவலைகளில்

# எட்டு ஆண்டுகள்...



மலர்வு
18 - 07 - 1930

உதிர்வு
22 - 06 - 2009

# அமரர் சுப்பிரமணியம் நாகராஜா

## (Retired MSO Jaffna Post Office)

திதி: சதுர்த்தசி 22.06.2017

நினைவுகளுடன் நீள்கின்ற நாட்களுக்குள் நீங்கள்
எம்மை விட்டுப் பிரிந்து பல்லாண்டு
சென்றிடினும் ஆறவில்லை எம் துயர்
**என்றும் உங்கள் நினைவுடன்**
**ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்**

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காக நம் குடும்பத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து அனைவரது வாழ்வினையும் பிரகாசிக்கச் செய்த அமரர் சுப்பிரமணியம் நாகராஜா அவர்களது ஆத்ம சாந்திக்காக 22.06.2017 இன்று வியாழக் கிழமை தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று தெல்லிப்பழை மகளிர் இல்லம், கோண்டாவில் சிவபூமி சிறுவர் இல்லம், சுழிபுரம் முதியோர் இல்லம் ஆகிய பராமரிப்பு நிலையங்களிலுள்ள சிறுவர்கள் முதியோர்களுக்கும் கீரிமலை அன்னதான மடத்திலும் உணவு உபசாரமும் 23.06.2017 நாளை வெள்ளிக்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்திலும் அன்னதான நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

**தகவல்: குடும்பத்தினர் சார்பாக**
**மகன் - நாகராஜா விஜயகுமார் - சுவிஸ்**

(9439)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு-முஸ்லிம்கள் இடையே பிளவை ஏற்படுத்த சூழ்ச்சி!

## எதிர்த்தரப்பு மீது ஜனாதிபதி குற்றச்சாட்டு

(கொழும்பு)

**முஸ்லிம்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே பிளவை ஏற்படுத்த எதிர்த்தரப்பினரால் அரசியல் ரீதியாக சதி முன்னெடுக்கப்படுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றம் சுமத்தியுள்ளார்.**

இஸ்லாமியர்களின் புனித இப்தார் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

"அனைத்து இனங்களுக்குமிடையில் சமாதானம் மற்றும் ஒற்றுமையைக் கட்டியெழுப்பி நாட்டில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் பரந்த செயற்றிட்டத்தை முன்னெடுப்பதாக தெரிவித்தார்.



முன்னர் முஸ்லிம்களுக்கு எதிராக செயற்பட்டவர்கள், அரசாங்கத்துக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையில் பேதங்களை ஏற்படுத்துவதற்கு அரசியல் சதியில் ஈடுபட்டிருப்பதாக ஜனாதிபதி குற்றம் சுமத்தியுள்ளார்.

தமது பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு சுதந்திரமாக வாழக்கூடிய சூழலை ஏற்படுத்துவதற்காகவே 2015 ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மை மக்கள் தனக்கு வாக்களித்ததாகவும், அந்த பொறுப்புக்களை உரியவாறு நிறைவேற்ற பாடுபடுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

### பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தேடப்பட்டு வந்த

# ஞானசார தேரர் சரணடைந்தார்

பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தேடப்பட்டுவந்த பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர்-கலகொட அத்தே ஞானசார தேரர் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று சரணடைந்தார்.



இன முரண்பாடுகளை தோற்றுவிப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஞானசார தேரருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், அவரை ஆஜராகுமாறு நீதிமன்றத்தால் விடுக்கப்பட்ட அறிவித்தலை ஞானசாரர் தொடர்ந்தும் உதாசீனப்படுத்தி வந்த நிலையில், அவருக்கு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது.

அத்துடன், சிறுபான்மை இன மக்களுக்கு எதிராக இன ரீதியான முரண்பாடுகளை தோற்றுவிக்கும் செயற்பாடுகளை பொதுபல சேனா முன்னெடுத்து வருவதாக தெரிவித்து அவரை கைது செய்ய பொலிஸார் தீவிர நடவடிக்கை எடுத்து வந்தனர். ஆனால்பொலிஸாரிடம்சிக்காத ஞானசாரர் நேற்று நீதிமன்றில் சரணடைந்தார். (இ-7)

## அவைத் தலைவர் சிவஞானம் இராஜினாமா செய்ய வேண்டும்

### உறுப்பினர்கள் வேண்டுகோள்

வடமாகாணசபையின் மாண்பினைகாக்கவும் தமிழ் அரசியல் போக்கின் முன்மாதிரியாகத் திகழவும் வடமாகாணசபையின் தற்போதைய அவைத்தலைவர் பதவியிலிருந்து சீ.வீ.கே.சிவஞானம் இராஜினாமா செய்ய வேண்டுமென மாகாணசபை உறுப்பினர்களான க.சர்வேஸ்வரன் மற்றும் விந்தன் கனகரட்னம் ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யாழ்.ஊடக அமையத் தில் நேற்று முன்தினம் நடத் திய ஊடகவியலாளர் மாநாட்டி ல் இப்பகிரங்க வேண்டு கோளை அவர்கள் முன்வைத்திருந்தனர். அவையின் ஜனநாயக மாண்பினை தாண்டி தமிழரசுக்கட்சியின் உறுப்பினர்களை தலைமை தாங்கி அழைத்துச் சென்று முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையினை கையளித்தது அனைத்து தரப்பினாலும் அருவருக்கத்தக்கதாக பார்க்கப்படுகின்றது. வழமையாக அமைச்சர்கள் தொடர்பிலோ ஏன் முதலமைச்சர் தொடர்பிலோ பிரேரணைகள், நம்பிக்கையில்லா தீர்மானங்கள் இருப்பின் அதனை அவைத்தலைவரிடமே கையளிக்கவேண்டும். அவர் அதனை சபை நிகழ் ச்சி நிரலில் உள்ளடக்கி விவாதத்திற்கு விடுக்கவேண்டும். அதுவே நடைமுறையாகும். ஆனால் அதையெல்லாம் தாண்டி பதவியாசையில் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களை தலைமை தாங்கி அழைத்துச் சென்று முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையினை கையளித்துள்ளமை மன்னிக்க முடியாததொன்றாகும். அதே பிரேரணையில் பிரதி அவைத் தலைவரும் ஒப்பமிட்டிருப்பதால் அவரும் பதவியினை துறப்பதே பொருத்தமானதாகும்.

இது தொடர்பில் வட மாகாணசபையின் அனைத்து உறுப்பினர்களையும் சந்தி த்து ஆராயவுள்ளோம். தமிழரசுக்கட்சியினருடனும் பேசவுள்ளோம். அவர்களிலும் பலர் தற்போதைய அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்தின் நடவடிக்கைகளினால் அதிருப்தியுற்றுள்ளனர். தனது நடவடிக்கை எவ்வளவு அருவருக்கத்தக்கதென்பது சிவஞானத்திற்கு தெரியும். அதனாலேயே அவராக இராஜினாமா செய்யச் சொல்லி கோருகின்றோம்.

அவைத் தலைவர் மாற்றம் தொடர் பில் முதலமைச்சரின் சம்மதத்தை பெற்றுக் கொள்ளவுள்ளதாக தெரிவித்த அவர்கள் புதிய அவைத்தலைவராக யாரை பிரேரிப்பதென்பது தொடர்பில் இதுவரை முடிவெடுக்கப்படவில்லையென தெரிவித்தனர். இதனிடையே புதிய அவைத் தலைவராக எம்.கே.சிவாஜிலிங்கத்தின் பெயர் பேசப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

# பாதாள உலகக் குழுக்களை ஒழிக்க விசேட வேலைத்திட்டம்

## சட்டம் ஒழுங்கு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த 2015ஆம்ஆண்டை விட 2016ஆம் ஆண்டு நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளதென குறிப்பிட்டுள்ள சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க, பாதாள உலகக் குழுக்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த விசேட குற்றத்தடுப்பு பிரிவொன்றை அரசாங்கம் செயற்படுத்தியுள்ளதென குறிப்பிட்டுள்ளார்.

குற்றச்செயல்களை கட்டுப்படுத்த அரசாங்கம் மேற்கொண்டுள்ள செயன்முறைகள் தொடர்பாக கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே சட்டம் ஒழுங்கு அமைச்சர் மேற்குறித்தவாறு தெரிவித்தார்.

பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் மற்றும் திட்டமிட்ட படுகொலைகள் சம்பந்தமான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு அமைக்கப்பட்டுள்ள குறித்த பிரிவை, பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவரின் கீழ் கொண்டுவந்து அதில் மறுசீரமைப்புக்களையும் மேற்கொண்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.



[illegible] உலகக் குழுக்களின் செயற்பாடுகள் மற்றும் திட்டமிட்ட படுகொலைகளை தடுப்பதற்கான நடவடிக்கைகளில் அரசாங்கம் அதிக சிரத்தையுடன் செயற்படுவதாக சட்டம் ஒழுங்கு அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பிரதேச சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைக்கவும்

### ஜனாதிபதி வலியுறுத்து

புதிய அரசியல் அமைப்பின் பரிந்துரை ஊடாக பிரதேச சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். பிரதமர் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியுடன் நடந்த சந்திப்பின் போதே இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது, புதிய அரசியல் அமைப்பில் பிரதேச சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அரைவாசியாக குறைக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

புதிய அரசியல் அமைப்பின் அடிப்படையில் பிரதேச சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை எட்டாயிரமாக வரையறுக்கப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.விவசாய...

க்கும் செய்தியாளர் மாநாட்டில் பாராளு மன்ற மறுசீரமைப்பு மற்றும் காணி அமை ச்சரும் அமைச்சரவை துணைப்பேச்சாள ருமான கஜந்த கருணாதிலக தெரிவித்தார்.

இதுதொடர்பில் யப்பான் சர்வதேச புரிந்து ணர்வு நிறுவனத்தின் (JICA) நிதியுதவியு டன் உடன்படிக்கை தொடர்பில் ஆலோசனை சேவை கம்பனியுடன் ஒப்பந்தத்தில் கைச் சாத்திட்டுள்ளது.

மேலும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு JICAவினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள வழிகாட்டல்களை பின்பற்றி ஆலோசனை சேவை கம்பனியினால் தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கையொன் றில் கைச்சாத்திடுவதற்கு உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரு க்கு அதிகாரத்தினை வழங்குவது தொடர் பில் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல சமர்ப்பித்த ஆவணங்களுக்கு அமைச்சரவை அங்கீகா ரம் வழங்கியுள்ளது எனவும் தகவல் தெரிவி க்கப்பட்டுள்ளது. (செ-11)

## 12 இலட்சத்து...

மறு சீரமைப்பு அமைச்சகம் தெரிவித்து ள்ளது.

போருக்கு பின்னர் வடக்கு-கிழக்கு மாகா ணங்களில் நிலக்கண்ணி வெடி அபாயமற்ற முதலாவது மாவட்டமாக மட்டக்களப்பு மாவ ட்டம் அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்ப ட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இனம் காண ப்பட்ட 6 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பு தற் போது நிலக் கண்ணி வெடி அபாயமற்ற பகு தியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று புதன்கிழமை மாவட்ட செயலக த்தில் நடைபெற்ற இது தொடர்பான நிகழ் வொன்றின் போது நிலக்கண்ணி நடவடிக் கைக்கான மத்திய மையத்தினால் மாவட்ட செயலாளர் பி.எம்.எஸ்.சார்ள்ஸிடம் இதற் கான சான்றிதழ் கையளிக்கப்பட்டது.(செ-11)

## சான்றிதழ்...

காணாமல் போனவர்கள் தொடர்பான செயலகத்தை ஸ்தாபிக்கும் திருத்தச் சட்ட மூல வரைபை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள் ளார்.

சட்டமூல வரைவை சமர்ப்பித்து உரை யாற்றிய பிரதமர், சான்றிதழை வழங்கும் அதிகாரம் மாத்திரமே இந்த செயலகத்திற்கு இருப்பதாக தெரிவித்துள்ளதுடன்.

காணாமல்போனவர்களுக்கு வேறு சட் டம் கிடையாது என்பதால் காணாமல் போன வர்கள் பற்றி தேடி அறியலாம், வழக்கு தாக் கல் செய்ய முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் பாரிய யுத்தம் நடைபெற்றது. தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்ளும் உரிமை உறவினர்களு க்கு உள்ளது. இந்த பிரச்சினைக்கு முடிவு காண வேண்டும்.

காணாமல்போனவர்களை தேடிப் பார் க்க வேண்டும். அந்த காயத்தை எப்படி குண ப்படுத்துவது? ஒரே நாட்டவர்கள் என்ற மன நிலையை எப்படி ஏற்படுத்துவது? ஆகவே இதனை சரி செய்ய உண்மையை கண்டறி யும் ஆணைக்குழுவை ஏற்படுத்த வேண் டும்.

உண்மையை கண்டறியும் ஆணைக் குழுவை ஏற்படுத்தும் தீர்மானத்தை தற் போது எடுத்தால் அதனை சபையில் சமர் ப்பிக்கின்றோம். அது ஒரு தீர்வை நோக்கி செல்லும் தேவையே எமக்குள்ளது என பிர தமர் ரணில் விக்கிரமசிங்க தனது உரை யில் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## ஞானசார தேரர்...

ம்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியதால் கடந்த 15ஆம் திகதி கோட்டை நீதவான் நீதி மன்றம் தேரரை கைது செய்வதற்கான பிடி யாணையை பிறப்பித்திருந்தது.

2014ஆம் ஆண்டு ஏப்ரல் நான்காம் திகதி வட்டரெக்க விஜித்த தேரரின் ஜாதிக்க பல சேனா அமைப்பு கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் குழப்பத்தை விளைவித்தமை, இஸ்லாம் மார்க்கத்தையும் அல் குர்ஆனையும் அவ மதித்தமை தொடர்பில் கலகொட அத்தே ஞானசார தேரர் உள்ளிட்ட மேலும் ஏழு தேரர்களுக்கு எதிராக கம்பனித்தெரு பொலி ஸாரால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டி ருந்தது.

இந்த வழக்கில் ஆஜராகத் தவறியதன் காரணமாகவே ஞானசார தேரருக்கு பிடி யாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

ஞானசார தேரர் நீதிமன்றத்திற்கு வருகைதந்த சந்தர்ப்பத்தில் கோட்டை நீத வான் நீதிமன்ற வளாகத்தில் விசேட பாது காப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந் தன.

இதன்போது பொது பல சேனா அமை ப்பின் ஆதரவா ளர்களும் நீதிமன்ற வளாக த்தில் கூடியிருந்ததை அவதானிக்கக் கூடிய தாக இருந்தது. (செ-11)

(முன்னர் கிடைத்த செய்தி உள்ளே)

## கார் மோதிய...

சிறுவன் கிளிநொச்சி பொது வைத்தியசா லையில் நேற்று சிகிச்சை பலனின்றி உயி ரிழந்துள்ளார்.

கடந்த 17ஆம் திகதி அந்தோனியார் தேவாலயத்தின் திருவிழாவில் கலந்து கொள்வதற்காக ஏ32 வீதியோரத்தில் சென்று கொண்டிருந்த சிறுவனை பின்புற மாக கார் மோதியதில் முழங்காவில் மகா வித்தியாலயத்தில் தரம் 7இல் கல்வி பயிலும் அ.அபினாஸ் வயது 12 உடைய சிறுவன் படு காயமடைந்த நிலையில் முழங்காவில் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு பின்பு கிளிநொச்சி பொது மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டுமேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டு மீண்டும் கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு குறி த்த சிறுவன் கொண்டு வரப்பட்ட நிலையில் மயக்க நிலை தெளியாமலே நேற்று உயி ரிழந்து உள்ளார்.

பிரஸ்தாப சிறுவனை மோதிய கார் நிறுத்தாமலே தப்பிச் சென்றுவிட்ட நிலை யில் காரின் இலக்கம் தொடர்பாக முழங்கா வில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும் தகுந்த நடவடிக்கையை பொலி ஸார் எடுக்கவில்லை எனக் குற்றஞ்சாட்ட ப்படுகிறது.

இந்நிலையில் பொலிஸாரின் நடவடி க்கையைக் கண்டித்து முழங்காவில் பொது அமைப்புகளினால் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று இன்று முற்பகல் 10.00 மணிக்கு முழங்காவில் நகரத்தில் நடத்தப்படவுள்ளது.

குறித்த கார் நிதானமின்றிய நிலையில் செலுத்தப்பட்டுக் கொண்டிருந்ததை நேரில் கண்ட மக்கள் பொலிஸாரிடம் தெரிவித்திரு ந்ததுடன், காரினால் மோதப்பட்ட சிறுவன் பதினைந்து மீற்றர் தூரம் வரை தூக்கி எறிய ப்பட்டிருந்தார்.

அத்தோடு மோதப்பட்ட வேகத்தில் காரின் இலக்கத் தகடு வீதியில் கழன்று வீழ்ந்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## சபை ஆயுள்...

கூறியிருக்கும் வடமாகாண ஆளுநர் றெஜி னோல்ட் கூரே, வடமாகாண சபையின் ஆயுள் காலம் நிறைவடைய உள்ள நிலை யில் போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்க ளுக்கு மாகாண சபை உதவிகளை வழங்க வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

வடமாகாண விவசாய மற்றும் கல்வி ஆகிய அமைச்சு துறைகளை பொறுப்பேற்ற முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற் றைய தினம் ஆளுநர் றெஜினோல்ட் கூரே முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இதன் நிறைவில் ஊடகங்களுக்கு ஆளு நர் கருத்து தெரிவிக்கையிலேயே மேற் கண் டவாறு கூறியுள்ளார்.

இதன்போது மேலும் அவர் குறிப்பிடு கையில்,

வடமாகாண சபையின் ஆயுள்காலம் நிறைவடையவுள்ளது. இந்நிலையில் மக்க ளுக்கு அபிவிருத்தி திட்டங்களை நடை முறைப்படுத்தும்படி கேட்டிருக்கின்றேன்.

மேலும் வடமாகாண ஜனநாயக விளை யாட்டு நிறைவடைந்திருக்கின்றது. இந்த விடயத்தை நான் மிக உன்னிப்பாக அவதா னித்து வந்திருக்கிறேன்.

அரசியலமைப்பு சட்டத்தின்படி, ஜனநாய கத்தின்படி இந்த விடயத்தில் அநாவசிய தலையீடுகளை நான் செய்திருக்கவில்லை.

தேசியளவில் உள்ள பிரச்சினைகளு க்கும் ஜனநாயக வழியில் தீர்வுகள் காணப் பட வேண்டும். இந்த விடயம் ஜனநாயக வழியில் தீர்க்கப்பட்டதையிட்டு நான் மகி ழ்ச்சியடைகிறேன் என ஆளுநர் கூறியு ள்ளார். (செ-11)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



அதிரடி விலையில் டிஷ் டிவி இணைப்புகள்

| | |
|---|---|
| டிஸ் டிவி ரிசீவர் | Rs.2100/-* |
| டிஷ் ஆண்டெனா | Rs.1200/- |
| LNB | Rs.300/- |
| FULL Set | Rs.4200/- (1 month free) |

அத்துடன் அனைத்து cable டி.வி உபகரணங்களும் மிக குறைந்த விலையில்

| | |
|---|---|
| Rg 6 cable | Rs.1000/- |
| RG 6 GEL CABLE | Rs.2200/- |
| Ofc 6 Core fiber | Rs.35/- |
| Cable amp | Rs.2200/- |




மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்
* அக்டிவேசன் தனி
Dish tv recharge மிக குறைந்த கட்டணத்தில்.
தொடர்பு கொள்ளவும்:-
0710986228/ 0710986224



கறையான் தொல்லையா?



கட்டடங்களில் கறையான்களால் ஏற்படும் அல்லது ஏற்படடிருக்கும் பாதிப்புக்களை உத்தரவாதத்துடன் இல்லாதொழித்து தரப்படும் (Warranty)
ஆலோசனையும் மதிப்பீடும் இலவசமாக வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு :- ந.ரூபகாந்த் (9530) 077 151 5897 21 499 3200








### ஏல விற்பனை

யாகொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலையில் எதிர்வரும் 2017. 07.05ஆம் திகதி காலை 11.00 மணி யளவில் ஏல விற்பனைக்கென அனு மதியளிக்கப்பட்ட மரத்தளபாடங்கள் ஏலத்தில் விடப்படும்.

-அதிபர் (9527)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாலியாற்றை பாதிப்புகளுக்குட்படுத்தாமல் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும்

## டக்ளஸ் எம்.பி.வலியுறுத்து

வடக்கு மாகாணத்தில், பாலியாற்றுக் கரையோரங்களில் இடம் பெற்று வருகின்ற சட்டவிரோத செயற்பாடுகளை உடன் நிறுத்துவதற்கும், தற்போது அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள சேதங்களை நிவர்த்தி செய்து, அதனைப் பாதுகாப்பதற்கும், மேலும் இத்தகைய செயற்பாடுகள் அப்பகுதிகளில் ஏற்படாத வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சர் விஜித் விஜயமுனி டி சொய்சாவிடம் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், வவுனியா மாவட்டத்தின் புளியங்குளம் பகுதியருகே உருவாக்கம் பெற்று, வடக்கு மற்றும் வடமேற்கு நோக்கி வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களினூடாக மன்னார் பாக்கு நீரிணை கடல் பகுதியில் இணையும், வரலாற்று ரீதியிலும் புகழ் பெற்ற, வடக்கின் நீர்த் தேவை யின்னை ஓரளவு பூர்த்தி செய்கின்ற பாலியாற்றினை பாதுகாப்பதற்காக மேற்படி ஆற்றின் இருமருங்குகளிலும் பல கிலோ மீற்றர்கள் தூரம் வரையில் அரசாங்கத்தினால் காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்றும், இந்தக் காணி களில் முதிரை, பாலை, கருங்காலி, மருதம் போன்ற மரங்கள் பாரிய ளவில் வளர்ந்து இயற்கையையும், மண்ணரிப்புகள் ஏற்படாமலும் பாதுகாத்து வருவதாகவும் தெரிய வருகின்ற நிலையில், தற்போது பலர் அப்பகுதிக்குள் அத்து மீறி நுழைந்து, காட்டு மரங் களை வெட்டியும், ஆற்றின் கரையோரப் பகுதிகளை பாரியளவில் சேதப்படுத்தியும், சட்டவிரோதமான முறை யில் பயிர்ச் செய்கைகளை மேற்கொண்டு, ஆற்று நீரைப் பயன்படுத்தி வருவதாகவும், மேற்படி காணிகள் வவுனிக் குளம் நீர்ப்பாசனத் திணைக் களத்திற்கு உட்பட்டது என அடையாளப்படுத்தும் வகை யில் நீர்ப்பாசனத் திணைக் களத்தினால் எல்லைக் கற்கள் நடப்பட்டுள்ள போதிலும், அதனையும் மீறியே மேற்படி சட்டவிரோத செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், இதன் காரணமாக மேற்படி ஆறு பல்வேறு பாதிப்புகளுக்கு உட்பட்டு, அதனை நம்பியிருக்கின்ற மக்களுக்கு நீர்வளம் கிடைக்காமல் போக க்கூடிய அபாயமும் பாரிய இயற்கை அழிவுகளும் ஏற்பட்டுள்ளதாகவும் அம்மக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

வடக்கில் அடிக்கடி ஏற்படு கின்ற வரட்சி காலநிலை முன்பாக இத்தகைய நீராதாரங்களைப் பேணிப்பாதுகா க்க வேண்டிய பொறுப்பு இன்றி யமையாததாக இருக்கும் நிலையில், மேற்படி சட்டவிரோதமான செயற்பாடுகள் உடனடியாக தடுத்து நிறுத்த ப்பட வேண் டிய அவசியமேற்பட்டுள்ளது எனத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# புனர்வாழ்வு அதிகார சபையால் யாழில் சீனித் துளசி அறிமுகம்

மக்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் சீனித் துளசி செடியை வடக்கு மாகாணத்தில் சுய தொழிலாகப் பயன்படுத்துவதற்கு புனர்வாழ்வு அதிகார சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சீனித் துளசியை அறிமுகம் செய்யும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

தமிழில் சீனித் துளசி என்றழைக்கப்படும் "ஸ்டீவியா ரியோடியானா" ஒரு மருத்துவச் செடி. இது சீனிக்கு மாற்றாக உணவில் பயன்படுகிறது. நீரிழிவு நோயாளிகளுக்கு ஒரு பெருமருந்தாக பயன்படுகிறது. இந்த சீனித் துளசியானது சீனியை விட 300 மடங்கு இனிப்புத் தன்மை கொண்டுள்ளது.

லத்தீன் அமெரிக்க நாடான பராகுவேயில் சீனித் துளசி செடி அதிகமாக வுள்ளது. ஜப்பான், கொரியா, சீனா, கனடா மற்றும் தாய்லாந்து, இந்தியாவில் உள்ளோர் சீனிக்கு பதிலாக இச்செடியின் இலைகளையே பயன்படுத்துகின்றனர். அங்கு இந்தச் செடியின் இலைகளை பொடி செய்து சீனிக்குப் பதிலாகப்பயன்படுத்துகிறார்கள்.

இது நீரிழிவு நோய்க்குப் பயன்படும் இயற்கை சீனியாகவும் மிக குறைந்த கொழுப்பு சத்து கொண்ட சீனி உணவாகவும் காணப்படுவதோடு உணவு பொருட்களில் சேர்க்கப்படும் இயற்கை இனிப்பு சுவை இதில் உள்ளது.

இரத்தக் கொதிப்பை கட்டுப்படுத்துகிறது. ஜீரணசக்தியை சீராக்கும், இது சரும நோய்களை தீர்க்கும் மருந்துகளில் சேர்க்கப்படுகிறது. குளிர்பானங்களில் பயன்படுகிறது. இத்தகைய பல பயனுள்ள சீனித் துளசியை தற்போது வடக்கில் பயிரிட புனர்வாழ்வு அதிகார சபை முயற்சி மேற்கொண்டுள்ளது.

விவசாயிகள் சீனித்துளசியை விவசாய நிலங்களிலும், வீட்டுத் தோட்டங்களிலும் குறைந்த செலவில் வளர்க்கலாம். நல்ல வடிகால் வசதியுள்ள செம்மண்ணில் நன்றாக வளரும் தன்மை கொண்டது.

சீனித்துளசியை நடுகை செய்த 4,5 மாதங்களில் அறுவடைக்கு தயாராகிவிடும். அடுத்தடுத்த அறுவடைகளை 3 மாதங்களுக்கு ஒரு முறை என்று 3 ஆண்டுகள் வரை தொடர்ந்து அறுவடை செய்து இலாபம் பெறலாம்.

சீனித்துளசி இலைகளை உலர வைத்து பொடி செய்து இனிப்பு வகைகள், குளிர் பானங்கள், பழச் சாறுகள், ஜாம் ஆகிய பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு சந்தைகளில் அதிகளவு விற்பனை செய்யப்படுகிறது. துளசி செடியை போன்றே, வீடு தோறும் இனிப்பு துளசியை வளர்த்து பயன்படுத்தினால் நோயில் இருந்து பாதுகாக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் புகையிலைக்கு மாற்றீடாகவும் இது பயன்படுத்த முடியும் என ஆராட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த சீனித் துளசி செடியை வடக்கில் பயிரிடுவதற்கு ஆரம்பகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இதனால் பாதகங்கள் உள்ளனவா என ஆராட்சியை மேற்கொள்வதற்கு பேராசிரியர்கள், விவசாய ஆராட்சியாளர்கள் கொண்ட குழு ஒன்று நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களின் ஆராட்சி அறிக்கையின் பின்னரே குறித்த செடி மக்களின் பாவனைக்கு கையளிக்கப்படவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் விவசாய பேராசிரியர்கள், விவசாய திணைக்கள அதிகாரிகள், விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)


அன்பு வாசகர்களே!
உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

நீங்கள் அறிந்த
- செய்திகள்
- புகைப்படங்கள்
- நிகழ்வுகள்
- பேசும் படங்கள்

போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச் செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில் உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.

VIBER செயலி இல
076 636 3378

Viber



பாராட்டி வாழ்த்துகின்றோம்


செல்வி புவித்ரா முரளிதாஸ்
(விவசாய தொழில்நுட்ப முகாமைத்துவம்),


செல்வன் கவீந்திரன் கருணரூபன்
(மருத்துவம்)


செல்வி அபிராமி யோகச்சந்திரன்
(உயிரியல் விஞ்ஞானம்)


செல்வி தஷாந்தினி இராமகிருஷ்ணன்
(கலைத்துறை)

யா/சிதம்பரக் கல்லூரியில் 2016 ஆம் ஆண்டு பல்கலைக் கழகத்திற்கு தெரிவான மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் : பெற்றோர், நலன்விரும்பிகள்
யா/சிதம்பரக் கல்லூரி, வல்வெட்டித்துறை.

(C-8846)


# இராசி பலன்

22.06.2017

(ஆனி 08, வியாழக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு

திரயோதசி பிற்பகல் 2.07 மணிவரை

கார்த்திகை முற்பகல் 9.19 மணிவரை

சுபநேரம் 7.24 - 8.54 மணிவரை

இராகுகாலம் 1.24 - 2.54 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சுக் | சந். | செவ், புத சூரி |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் விசாகம் | | |
| | | | ராகு |
| | சனி | | குரு |

**மீனம்** பகை விலகி பாசம் குடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம்.

**மேடம்** காலைப் பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரும் நாள், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும்,பணத் தேவைகள் பூர்த்தியாகும்.

**இடபம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** எடுத்த செயலை முடிக்க ஒரு முறைக்கு பலமுறை அலையும் சூழ்நிலை உருவாகும், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், ரோக பயமுண்டு.

**கும்பம்** வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பெற்றோர் மீது பிரியம் கூடும், எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**கடகம்** பயணங்கள் கைகூடும், வருமானம் அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், உற்சாகத்துடன் பணி புரிவீர்கள்.

**மகரம்** பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், குடும்பத்தில் சந்தோசமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு, அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**தனுசு** கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், உடல்நலன் சீராகும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், புகழ்மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**விருச்சிகம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பணத் தேவைகள் பூர்த்தியாகும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும்.

**துலாம்** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, மறதியால் ஒருசில பணிகளை தவற விடுவீர்கள், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**கன்னி** பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, மறைமுக எதிர்ப்புகள் அகலும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்லூரியின் நிறுவுனர் தினமும் வருடாந்த பரிசளிப்பு விழாவும்

(சுட்டுடை)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நிறுவுனர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாவலர் துரையப்பாப்பிள்ளை மண்டபத்தில் கல்லூரியின் அதிபர் ம. மணிசேகரன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக லண்டன் பழைய மாணவர் சங்கத்தைச் சேர்ந்த வைத்திய நிபுணர் சீ.நவரட்ணம், சிறப்பு விருந்தினர்களாக கனடா பழைய மாணவர் சங்கத்தைச் சேர்ந்த இ.ஸ்ரீ.அருளாநந்தன், தெல்லிப்பழை கோட்டக் கல்வி அலுவலகத்தின் கோட்டக் கல்வி அதிகாரி மா. ஆனந்தகுமார், கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் ஆறு. திருமுருகன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5-102)

# சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் நிறுவுநர் நாளும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் நிறுவுநர் நாளும், பரிசளிப்பு விழாவும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுப்பையா உடையார் தெய்வானைப் பிள்ளை திறந்தவெளி அரங்கில் இடம்பெறும்.

பாடசாலை அதிபர் திருமதி ச.சிவகுமார் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக அரச பகுப்பாய்வுத் திணைக்கள ஓய்வுநிலைத் தலைவர் விக்ரோறியன், க.சிவராஜா மற்றும் அழகுராணி சிவராஜா, சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்(திட்டமிடல்) சு.தேவமனோகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். இந் நிகழ்வில் நிறுவுநர் நினைவுப் பேருரையினை கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பொது மருத்துவ சிரேஷ்ட பதிவாளர் வைத்திய கலாநிதி திருமதி. அட்சரேஸ்வரி தில்லைநாதன் வழங்குவார். (இ-3)




# போதைப் பொருளுக்கு எதிராக மருதங்கேணியில் விழிப்புணர்வு





யாழ். மருதங்கேணி பிரதேச செயலகமும் சமூக அபிவிருத்தி பிரிவும் இணைந்து நடத்திய சர்வதேச புகைத்தல் மற்றும் போதைப் பொருள் விழிப்புணர்வு ஊர்வலம் நேற்று வடமராட்சி கிழக்கு உடுத்துறையிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு மருதங்கேணி பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தது.

(படங்கள் :- தும்பளை செய்தியாளர்)

# இந்து அமைப்புகளின் ஒன்றிய வருடாந்தப் பொதுக் கூட்டம்

இந்து அமைப்புகளின் ஒன்றிய வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் ஆதீன மண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் இடம்பெறவுள்ளது. (இ-3)

# யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தின் வருடாந்த விளையாட்டு விழா

**பயனாளிகள் பதியலாம்**

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் முப்பதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நிறுவனப் பயனாளிகளிடையே நடத்தப்படும் விளையாட்டு நிகழ்வு எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது மைதான நிகழ்வுகளான கயிறு இழுத்தல், குண்டெறிதல், சைக்கிளோட்டம் மற்றும் கிடுகு பின்னுதல் போன்ற மைதான நிகழ்வுகளும் வீதியோட்ட நிகழ்வுகளான முச்சக்கர வண்டி ஓட்டம், சைக்கிள் ஓட்டம் போன்ற நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

மேற்குறித்த நிகழ்வுகளில் பங்கு பெறவுள்ள நிறுவனப் பயனாளிகள் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் பெயர் விபரங்களைப் பதிவுசெய்யுமாறு ஜெய்ப்பூர் நிறுவனப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (இ-5-105)

# மூவர்ண கழிவுக் கொள்கலன்கள் தென்மராட்சியில் காட்சிப்படுத்தல்

(யாழ்ப்பாணம்)

அவுஸ்திரேலிய எயிட், வேள்ட் விசன் ஆகிய நிறுவனங்களினால் பாதுகாப்பான கழிவகற்றல் மூலம் எம் வளங்களைப் பாதுகாத்து மானிட வாழ்விற்கு பலம் சேர்ப்போம் என்ற வாசகம் பொறிக்கப்பட்ட மூவர்ண கழிவுக்கொள்கலன்கள் தென்மராட்சிப் பகுதியில் வழங்கப்பட்டு வருகின்றன.

இக் கொள்கலன்கள் உக்கக் கூடியவை, பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன்கள், கண்ணாடிக் கழிவுகள் என தரம் பிரிக்கப்பட்டு மக்கள் கூடும் பொது இடங்களில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5-101)

# பொன் விழா நிகழ்வு

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையத்தின் பொன்விழா நிகழ்வு எதிர்வரும் 24 ஆம்,25 ஆம் திகதிகளில் காலை 7.30 மணி முதல் யாழ்ப்பாணம் சத்திய சாயி சேவா நிலையத்தில் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வில் விசேட விருந்தினராக தமிழ்நாடு மாநில இளைஞர் அணித் தலைவர்.ஸ்ரீ.வி.விஜயகிருஸ்ணன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

# வடமராட்சி கிழக்கு எழுத்தாளர்களிடமிருந்து கவிதை, சிறுகதை ஆக்கங்கள் கோரப்படுகின்றன

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச கலாசாரப் பேரவையினரால் பிரதேச ஆக்க இலக்கியக்காரர்களை ஒருங்கிணைப்பதற்காகவும் பிரதேசஎழுத்தாளர்களது இலக்கிய முயற்சிகளை எழுத்துருவில் வெளிக்கொண்டு வருவதற்காகவும் வடமராட்சி கிழக்கு பிரதேசத்தினைச் சேர்ந்தவர்களதும், புலம்பெயர் எழுத்தாளர்களதும் கவிதை, சிறுகதைகளைத் தொகுத்து புத்தகமாக வெளியிடுவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத் தொகுப்பிற்காக கவிதை, சிறுகதைகளை அனுப்புவதற்கு விரும்பு பவர்கள் கீழ்வரும் விதி முறைகளுக்கு அமைவாக ஆக்கங்களினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

வடமராட்சி கிழக்கினை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்கள் அல்லது வடமராட்சி கிழக்கினைச் சேர்ந்த புலம்பெயர் எழுத்தாளர்கள் தமது ஆக்கங்களினை அனுப்பி வைக்கமுடியும்.

ஒருவர் கவிதை, சிறுகதை இரண்டினையும் அனுப்பி வைக்க முடியும். ஆனால் இரண்டிலும் ஒவ்வொன்றினை மட்டுமே அனுப்பி வைக்க முடியும்.

ஆக்கங்கள் அனைத்தும் அவருடைய சொந்த ஆக்கங்களாக இருப்பதுடன் ஏற்கனவே பிரசுரிக்கப்பட்ட அல்லது போட்டிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஆக்கங்களாக இருக்கக் கூடாது, ஆக்கங்கள் அரசியல் கலப்பற்றதாகவும் வேறு ஒருவருடைய சொந்தப் பிரச்சினைகளை நேரடியாகச் சுட்டிக் காட்டாததாகவும் இருக்க வேண்டும், கவிதையாயின் மரபுக் கவிதை, புதுக்கவிதை இரண்டிலும் படைப்பாளிகள் ஆக்கங்களை எழுதி அனுப்பி வைக்கலாம்.

மரபுக் கவிதையாயின் A4 தாளில் ஐந்து பக்கங்களுக்கு மேற்படாதவாறும் புதுக் கவிதையாயின் A4 தாளில் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாததும் 12 Font அளவில் தட்டச்சு செய்து அனுப்பிவைக்க வேண்டும்.

தெரிவுக் குழுவினால் தரமானது எனத் தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் மட்டுமே பிரசுரமாகும்.

ஆக்கங்களை சமர்ப்பிப்பதுபயின் 15.07.2017 இற்கு முன்னதாக செயலாளர் / கலாசார உத்தியோகத்தர், பிரதேச கலாசார பேரவை, பிரதேச செயலகம், மருதங்கேணி என்னும் முகவரிக்கு அல்லது dseb mrk @ gmail. com என்னும் மின்னஞ்சல்முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் ஆக்கங்களுடன் தமது முழுப் பெயர், புனைப்பெயர் இருப்பின் நிரந்தர முகவரி, தற்காலிக முகவரி, தொலைபேசிஇலக்கம், தமது கலையுலக வாழ்க்கை பற்றிய சுருக்கக் குறிப்பு, பாஸ்போட் அளவு புகைப்படம் என்பவற்றினை இணைத்து அனுப்பி வைக்க வேண்டும் எனவும் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (இ-8)

# வடக்கு மருத்துவ மன்ற ஏற்பாட்டில் மருத்துவக் கல்வியூட்டல் நிகழ்வு

வடமாகாண மருத்துவ மன்றம் ஒழுங்கு செய்துள்ள மருத்துவக்கல்வியூட்டல் நிகழ்வு யாழ்.பலாலி வீதி திருநெல்வேலியில் அமைந்துள்ள திண்ணை விடுதியின் மகாநாட்டுமண்டபத்தில் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

1) என்புகளில் மற்றும் மூட்டுகளில் ஏற்படும் கிருமித் தொற்றும் (Bone & Joint infection) அதற்குரிய பரிகாரமும் எனும் விரிவுரையை யாழ்.போதனாவைத்தியசாலை என்பு முறிவுச் சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் ப.சிறிகிருஷ்ணா நடத்தவுள்ளார்.

2) இதயத் துடிப்பில் ஏற்படும் அசாதாரண நிலைமையும் ( Cardiac rhythm abnormalities, management Concepts in General practice) அவற்றை ஆரம்ப சிகிச்சைப் பிரிவின் வைத்தியர்களால் எவ்வாறு கையாள முடியும்என்னும் விரிவுரையை யாழ்போதனாவைத்தியசாலை இதய சிகிச்சை வைத்திய நிபுணர்லக்ஸ்மன்நடத்தவுள்ளார்.

3) ஆரம்ப சிகிச்சைப் பிரிவிலும் ஏனைய பகுதிநேர தனியார் சிகிச்சை நிலையங்களிலும் வைத்தியர்களால் அன்றாடம் எதிர்நோக்கப்படும் மனஅழுத்த நோயாளர்களை எவ்வாறு கையாள்வது (Depression in Day to Day Clinical practice) என்னும் விரிவுரையைஉளநலசிகிச்சை வைத்திய நிபுணர் சி.சிவயோகன்நடத்தவுள்ளார். இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வட மாகாண மருத்துவ மன்றத்தினர் அறிவித்துள்ளனர். (இ-3)







யாழ். நீரிழிவுக் கழகத்தால் யோகா மூலம் நீரிழிவை கட்டுப்படுத்துவோம் எனும் தொனிப் பொருளிலான விழிப்பூட்டல் செயலமர்வு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் இந்து மகளிர் கல்லூரி அதிபர், நீரிழிவுக் கழகத் தலைவர் ... கலந்து கொண்டு யோகா பற்றிய விரிவுரையையும் பயிற்சிகளையும் வழங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

67

# நம்பிக்கையில்லாத் தீர்மானம் நடந்தது என்ன?



## தமிழர் தலைவிதி எப்படியாகும்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கக்கூடிய அத்தனை கட்சிகளும் ஒன்றாக இணைந்து வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் வேட்பாளராக நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களைக் கேட்க அவரும் சம்மதம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருக்கக்கூடிய அத்தனை பேரும் மனம் வாக்கு காயத்தால் விரும்பி தன்னை அழைப்பதாகவே நீதியரசர் விக்னேஸ்வரன் நம்பினார்.

என்ன செய்வது இராமருக்கு பட்டாபிஷேகம் என்றதும் அயோத்தி மாநகர் முழுவதும் மகிழ்ச்சி பொங்கியது. மக்கள் தங்கள் வீட்டில் நடக்கும் மங்கல நிகழ்வு போல களிப்புற்றிருந்தனர். ஆனால் அரண்மனையில் கைகேயியும் அவர் தோழி மந்தரையும் (கூனி) ஊண் உறக்கம் மறந்து பட்டாபிஷேகத்தைத் தடுத்து நிறுத்துவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தனர். இப்படியான ஒரு சூழ்நிலை இங்கும் ஏற்பட்டது.

நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் முதலமைச்சர் வேட்பாளராக வருகின்றார் என்ற செய்தி அறிந்து தமிழ் மக்கள் அடைந்தனர். நேர்மையான, நீதியான, எவரும் மதிக்கக்கூடிய ஒரு கனவான் வடக்கின் முதலமைச்சராக இருப்பது தமிழருக்குப் பெருமை என்ற நினைப்பே மகிழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தது.

எனினும் தசரதன் அரண்மனையில் இருந்த மந்தரை , கைகேயி போல சிலர் விக்னேஸ்வரன் அவர்களுக்கும் இருந்தனர் என்பதையும் இவ்விடத்தில் கூறித்தானாக வேண்டும். விக்னேஸ்வரன் அவர்களை எப்படியும் எதிர்க்க வேண்டும். அவர் வடக்கின் முதலமைச்சராக வருவதைத் தடுக்க வேண்டும் அல்லது வந்தாலும் தீராத்துன்பம் கொடுத்து அவரைத் துரத்த வேண்டும் என்ற சதித்திட்டங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் இருக்கக்கூடிய பிரதான கட்சியான தமிழரசுக் கட்சிக்குள் இருந்தது.

தமிழரசுக் கட்சிக்குள் எல்லோரும் இந்த மனநிலையில் இருக்கவில்லையாயினும் விக்னேஸ்வரன் அவர்கள் முதலமைச்சராகினால் அது தமது செல்வாக்கை, தமது எதிர்காலத்தை இலங்கை அரசுடன் இணங்கிப் போகின்ற தமது உள்நோக்கத்தை சிதைத்துவிடும் எனப் பயந்தவர்களே விக்னேஸ்வரன் மீது தாங்கமுடியாத கோபம் கொண்டிருந்தனர். இதனால் அவர்கள் அவரைக் கடுமையாக விமர்சித்தனர், எதிர்த்தனர். இருந்தும் தமிழ் மக்கள் அவருக்குப் பேராதரவு கொடுத்தனர். அவரின் உரைகள் பொதுமக்களின் மனநிலையைப் பிரதிபலிப்பதாக இருந்தன.

இதனால் வடக்கு மாகாண சபைத் தேர்தலின் போது நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்கள் ஒரு இலட்சத்து 35 ஆயிரம் விருப்பு வாக்குகளுக்கு மேல் பெற்றிருந்தார்.

சுருங்கக்கூறின் நீதியரசர் விக்னேஸ்வரன் போட்டியிட்டதனால் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்மக்கள் ஆர்வத்தோடும் விருப்பத்தோடும் வாக்களித்தனர்.

திருஞானசம்பந்தரின் திருமண வீட்டிற்குச் சென்ற அத்தனை பேரும் ஜோதியில் கலந்தது போல நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு கிடைத்த வாக்குகளால் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட பலர் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களாகத் தெரிவாகினர்.

உலுத்துப்போன தேர்தல் முறையால் மக்கள் ஆதரவு இல்லாதவர்களும் மக்கள் பிரதிநிதிகளாக வரக்கூடிய ஒரு நடைமுறை பலருக்கு பதவியைக் கொடுத்தது.

இத்தகைய ஒரு தேர்தல் முறையில்தான் இன்றைய மக்கள் பிரதிநிதிகள் மக்களை மதிக்காமல்- தலைகால் தெரியாமல் நடந்து கொள்கின்றனர். முன்னைய தொகுதிவாரித் தேர்தல் முறை, நடைமுறையில் இருக்குமாயின் மக்களைப் பகைத்தால் அடுத்த தேர்தலில் அவுட் என்ற பயம் அரசியல்வாதிகளிடம் இருந்திருக்கும். ஆனால் இன்றைய நிலைமை அதுவல்ல. தேர்தலில் வெற்றி பெறக்கூடிய கட்சியில் ஆசனம் எடுத்துவிட்டால் பதவி கிடைத்துவிடும் என்ற நிலைமையே இருக்கிறது. இதனால் இன்றைய தேர்தல் முறையில் கட்சித் தலைமைக்கு காவடி எடுப்பதும் கட்சித் தலைமையை பல்லக்கில் வைத்துத் தூக்குவதுமே முதன்மை பெற்றுள்ளது. இந்த மோசமான ஒரு சூழ்நிலைதான் முதலமைச்சரை எதிர்ப்பதற்கு காரணமாயிற்று.

ஆம், வடக்கின் முதலமைச்சராக சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் இருப்பதை விரும்பாத தமிழ் அரசுக்கட்சியின் முக்கியஸ்தர்கள் முதலமைச்சர் விக்னேஸ்வரனை எப்படியும் வடக்கில் இருந்து வெளியேற்ற வேண்டுமென முடிவு செய்தனர். அதற்காக வடக்கு மாகாண சபையில் இருக்கக்கூடிய இளம் உறுப்பினர்கள் சிலரை ஓரணியாக்கி அவர்கள் மூலம் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு உபத்திரவம் கொடுக்கத் திட்டம் தீட்டப்பட்டது. அதன்வெளிப்பாடுகள் பல இடங்களில் எதிரொலித்ததைக் காணமுடியும். அதன் ஒரு கட்டமாக முதலமைச்சருக்கு எதிராக கையெழுத்துப் பெறுகின்ற ஒரு சதி வேலை நடந்தது.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் எக்காரணம் கொண்டும் வடக்கு மாகாண சபையில் எந்த வேலைத்திட்டத்தையும் அமுலாக்கிவிடக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்த; முதலமைச்சருக்கு எதிரான அணியினர் பல சந்தர்ப்பங்களில் கூட்டங்களைக் குழப்பியும் அதனைப் பெறுமதியற்றதாக்கியும் முதலமைச்சருக்கு உபத்திரவம் கொடுத்தனர். அதுமட்டுமல்ல முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு மதிப்புக் கொடுப்பதில் இவர்கள் மிக மோசமாக நடந்து கொண்டனர் என்பது பலரும் அறியாத உண்மை.

(வளரும்)

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாடகைக்கு விடப்படும் 127 உழவு இயந்திரங்களில் 86 உழவு இயந்திரங்கள் மட்டும் இயங்குகின்றன

## முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் சுட்டிக்காட்டு

(மல்லாவி )

முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத் திற்குட்பட்ட 10 கமநல சேவை நிலையங்களின் கீழ் 127 உழவு இயந்திரங்கள் விவசாயிகளுக்கு குறைந்த கட்டணத்தில் வாடகைக்கு விடப்பட்டு வந்த நிலையில் தற்போது அவற்றில் 86 உழவு இயந்திரங்கள் மட்டும் இயங்கு நிலையில் இருப்பதுடன், மிகுதியாக இருக்கும் 41 உழவு இயந்திரங்களும் பழுதடைந்த நிலையில் இருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் செ.புனிதகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களின் இடப்பெயர்வின் பின்னரான மக்கள் மீள் குடியேற்றத்தின் போது, முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள் குடியேறியுள்ள விவசாயிகளின் வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் நோக்கில் இந்திய அரசாங்கத்தினது நன்கொடை உதவித் திட்டம் ஊடாக 102 உழவு இயந்திரங்களும் மற்றும் அரசாங்கத்தாலும் ஏனைய அரச சார்பற்ற அமைப்புக்களின் மூலமாகவும் வழங்கப்பட்ட 25 உழவு இயந்திரங்களுமாக மொத்தம் 127 உழவு இயந்திரங்கள் கிடைக்கப்பெற்ற நிலையில் அவற்றை விவசாயிகளின் தேவைக்கேற்ப மிகக் குறைந்த கட்டணத்தில் கமநல சேவை நிலையங்களின் ஊடாக வாடகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு எமக்கு கிடைக்கப்பெற்ற உழவு இயந்திரங்களில் முள்ளியவளை கமநல சேவை நிலையத்திற்கு இந்திய அரசினது 13 உழவு இயந்திரங்களும் ஏனைய வழிகளால் கிடைத்த 2 உழவு இயந்திரங்களுமாக மொத்தம் 15 உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்ட நிலையில் தற்போது இவற்றில் 4 உழவு இயந்திரங்கள் பழுதடைந்த நிலையிலுள்ளன.

அளம்பில் கமநல சேவை நிலையத்திற்கு இந்திய அரசினது 4 உழவு இயந்திரங்களும், ஏனைய வழிகளால் கிடைத்த 2 உழவு இயந்திரங்களுமாக மொத்தம் 6 உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்ட நிலையில், தற்போது 6 உழவு இயந்திரங்களும் இயங்கு நிலையிலுள்ளன.

குமுழமுனை கமநல சேவை நிலையத்திற்கு இந்திய அரசினது 8 உழவு இயந்திரங்களும் ஏனைய வழிகளால் கிடைத்த 4 உழவு இயந்திரங்களுமாக மொத்தம் 12 உழவு இயந் திரங்கள் வழங்கப்பட்ட நிலையில், தற்போது இவற்றில் ஒன்று மட்டும் பழுதடைந்த நிலையிலுள்ளது.

இதேபோன்று, கொக்குத்தொடுவாய் கமநல சேவை நிலையத்திற்கு இந்திய அரசினது 7 உழவு இயந்திரங்களும், ஏனைய வழிகளால் கிடைத்த 2 உழவு இயந்திரங்களுமாக மொத்தம் 9 உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்ட நிலையில், தற்போது இவற்றில் 3 உழவு இயந்திரங்கள் பழுதடைந்த நிலையிலுள்ளன.

ஒட்டுசுட்டான் கமநலசேவை நிலையத்திற்கு இந்திய அரசினது 14 உழவு இயந்திரங்களும், ஏனைய வழிகளால் கிடைத்த 2 உழவு இயந்திரங்களுமாக மொத்தம்16 உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்ட நிலையில், தற்போது இவற்றில் 10 உழவு இயந்திரங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளன.

புதுக்குடியிருப்பு கமநல சேவை நிலையத்திற்கு இந்திய அரசினது 12 உழவு இயந்திரங்களும், ஏனைய வழிகளால் 2 உழவு இயந்திரங்களுமாக மொத்தம் 14 உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்ட நிலையில், தற்போது இவற்றில் 6 உழவு இயந்திரங்கள் பழுதடைந்த நிலையிலுள்ளன.

ஒலுமடு கமநல சேவை நிலையத்திற்கு இந்திய அரசினது 6 உழவு இயந்திரங்களும் மற்றும் ஏனைய வழிகளால் கிடைத்த 2 உழவு இயந்திரங்களுமாக மொத்தம் 8 உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்ட நிலையில், தற்போது இவற்றில் அனைத்துமே இயங்கு நிலையில் உள்ளன.


பாண்டியன் குளம் கமநல சேவை நிலையத்திற்கு இந்திய அரசினது 13 உழவு இயந்திரங்களும், ஏனைய வழிகளால் கிடைத்த 3 உழவு இயந்திரங்களுமாக மொத்தம் 16 உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்ட நிலையில், தற்போது இவற்றில் 13 உழவு இயந்திரங்கள் பழுதடைந்த நிலையிலுள்ளன.

துணுக்காய்கமநல சேவை நிலையத்திற்கு இந்திய அரசினது 13 உழவு இயந்திரங்களும், ஏனைய வழிகளால் கிடைத்த 3 உழவு இயந்திரங்களுமாக மொத்தம் 16 உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்ட நிலையில், தற்போது இவற்றில் 2 பழுதடைந்த நிலையிலுள்ளன.

உடையார்கட்டு கமநல சேவை நிலையத்திற்கு இந்திய அரசினது 12 உழவு இயந்திரங்களும், ஏனைய வழிகளால் கிடைத்த 3 உழவு இயந்திரங்களுமாக மொத்தம் 15 உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்ட நிலையில், தற்போது இவற்றில் 2 பழுதடைந்துள்ளன.

இவ்வாறான நிலையில் 127 உழவு இயந்திரங்களையும், கமக்கார அமைப்புக்களிடம் ஒப்படைத்து விவசாயிகளுக்கு வாடகைக்கு விடுவது தொடர்பில் எமது மேல் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பேசி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)



3ஆவது உலக யோகா தினம் கடந்த 17 ஆம் திகதி கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றதைப் படங்களில் காணலாம்.

## வாழ்வாதார நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 102 பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கல்



பனை அபிவிருத்திச் சபையில் விசேட வாழ்வாதார நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பனை சார் உற்பத்தி பயனாளிகளுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 19ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தில் முற்பகல் 10.30 மணியளவில் மாவட்ட முகாமையாளர் திருமதி. யமுனா புவனேசமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் 102 பயனாளிகள் கலந்துகொண்டு தங்களுக்கான வாழ்வாதார உபகரணங்களை பெற்றுக் கொண்டனர். இப்பயனாளிகளுக்கான உபகரணங்கள் சபையின் பொது முகாமையாளர் பா.சுதாகரனினால் வழங்கி வைக்கப்பட்டன.(2)

## அங்குரார்ப்பணக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

ஒட்டுசுட்டான் பிரதேச சித்த ஆயுர்வேத பாதுகாப்புச்சபையின் அங்குரார்ப்பணக் கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் அண்மையில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் அநிருத்தனன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் சித்த ஆயுர்வேத மருத்துவம் தொடர்பான பல விடயங்கள் ஆராயப்பட்டதோடு புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது. புதிய நிர்வாகத்தின் தலைவராக வைத்தியர் நா.வன்னியசிங்கம், செயலாளராக வைத்தியர் சதீஷ் (பிரதேசசபை வைத்தியசாலை, ஒட்டுசுட்டான்), பொருளாளராக வைத்தியர் மணிவண்ணன் (பிரதேசசபை வைத்தியசாலை, ஒட்டுசுட்டான்), உபதலைவராக வைத்தியர் ச.மணிவண்ணன், உபசெயலாளராக வைத்தியர் மதிவதன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். இக்கூட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலர், நிர்வாக உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். (2)

## திருவள்ளுவர் சிலை திறந்து வைப்பு



கிளி/இராமநாதபுரம்மேற்கு அ.த.க. பாடசாலையில் அமைக்கப்பட்ட திருவள்ளுவர் திருவுருவச்சிலை திறப்பு விழா நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணிக்கு பாடசாலை அதிபர் சு.சுதாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது.

பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரும் பாடசாலையின் பழைய மாணவருமான அமரர் வே.செல்வத்துரையின் நினைவாக அவரது குடும்பத்தினரால் அமைக்கப்பெற்று பாடசாலைச் சமூகத்தவரால் முன்னெடுக்கப்பட்ட இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி முதல்வர் ச.லலீசன் கலந்து கொண்டிருந்தார்.

சிலை திறப்பு விழாவையொட்டி பாடசாலை மாணவரிடையே நடத்தப்பட்ட திருக்குறள் தொடர்பான போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி கல்வி வலயத்தில் பாடசாலை ஒன்றில் அமைக்கப்பட்ட முதலாவது திருவள்ளுவர் திருவுருவச் சிலையாக இச்சிலையே அமைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நிகழ்வில் வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், பிரதேச பிரமுகர்கள், அரசியலாளர்கள் எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-312)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவர் சிலையைத் தாங்கியுள்ள உலகப்படத்தில் ஈழம் சொல் அழிப்பு







கிளிநொச்சி கரைச்சி பிரதேசசபை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலையை தாங்கியுள்ள உலக பட மாதிரிப் பீடத்தில் எழுதப்பட்டிருந்த "ஈழம்" எனும் சொல் பயங்கரவாத தடுப்பு பிரிவினரின் அறிவித் தலையடுத்து நேற்று அழிக் கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

கடந்த 17 ஆம் திகதி கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை வளாகத்தில் உலக தமிழ்ச் சங்கம் அன்பளிப்புச் செய்த திருவள்ளுவர் சிலை திரை நீக்கம் செய்யப்பட்டது.

திருவள்ளுவரின் திருக்குறள் உலக பொது மறை என்பதனால் திருவள்ளுவரின் சிலையை உலகத்தின் மீது இருப்பது போன்று சிலை தாங்கியை வடிவமைக்க கிளிநொச்சி தமிழ்ச் சங்கம் தீர்மானித்து அதன்படி உலக நாடுகள், கண்டங்கள், சமுத்திரங்கள் பெயர்கள் எழுதப் பட்டு சிலை தாங்கியும் அமைக் கப்பட்டிருந்தது.

இதில் இலங்கையை அதன் மற்றொரு பெயரான "ஈழம்" என எழுதப்பட்டு அடைப் புக்குறிக்குள் இலங்கை என எழுதப்பட்டிருந்தது.

இந் நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பில் இருந்து வருகை தந்திருந்த பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் சிலையை அமைப்பதற்கு சபையின் வளாகத்தில் அனுமதி வழங்கிய கரைச்சி பிரதேச சபையின் செயலரை சென்று விசாரித்துள்ளதோடு, குறித்த ஈழம் எனும் சொல்லை பயன் படுத்த முடியாது.

திருவள்ளுவர் சிலையின் சிலைதாங்கியில் உள்ள ஈழம்எனும்சொல்லை அழித்து விடுமாறும் தெரிவித்து சென் றுள்ளனர்.

இதனையடுத்து பிரதேச சபை செயலாளர் கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தின் வாழ்நாள் தலைவர் இறைபிள்ளையை தொடர்பு கொண்டு ஈழம் எனும் சொல்லை அழித்து விடுமாறு தெரிவித்துள்ளார் அதன்படி நேற்றுப் புதன் கிழமை காலை 7 மணியள வில் உலக வடிவில் அமைக் கப்பட்ட சிலை தாங்கியில் இலங்கை மீது எழுதப்பட்டி ருந்த ஈழம் அழிக்கப்பட்டுள் ளது. (2-312)

# வழங்கிய காலக்கெடு முடிந்து விட்டது ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க தயார்

## கேப்பாப்பிலவு மக்கள் எச்சரிக்கை

(பனிக்கன்குளம்)

தங்களின் பிரச்சினைகளில் மட்டுமே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தலையிடுவதாகவும் மக்களின் பிரச்சினைகளில் எந்தவித அக்கறையுமின்றி உள்ளதாகவும் முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஆதலால் இதுவரை அமைதியான முறையில் போராட்டத்தை முன்னெடுத்த தமக்கு விரைவில் தீர்வு கிடைக்கவில்லையெனில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கத் தயாராகவுள்ளதாகவும் கேப்பாப்பிலவு மக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவருமான இரா.சம் பந்தன், தமது காணி விடு விக்கப்படும் என வாக்குறுதி யளித்த காலக்கெடு முடிவடைந்த பின்னரும், தமக்கு எந்தவித தீர்வும் கிடைக்கவில்லை என அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

முல்லைத்தீவு கேப்பாப் பிலவு இராணுவத் தலைமையகத்திற்கு முன்பாக தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி, நேற்றுடன் 113 ஆவது நாளாக தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களை கடந்த மாதம் நேரடியாகச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், கடந்த 18 ஆம் திகதிக்குள் காணிகள் விடுவிக்கப்படும் என மக்களிடம் உறுதியளித் திருந்தார்.

எனினும் அவர் வழங்கிய காலக்கெடு முடிவடைந்த நிலையில், காணிகள் விடுவிக்கப்படாமல் பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்களின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் தாம் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கின்றனர்.

எதிர்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தமது காணிகளை விடுவிப்பதாக கூறிய நிலையில் பெரும் மகிழ்ச்சியில் இருந்த தமக்கு தற்போது பெரும் ஏமாற்றமே மிஞ்சியுள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தாயொருவர் கண்ணீருடன் கூறியுள்ளார்.

எனவே அமைதியான முறையில் இதுவரை போராட்டத்தை மேற்கொண்ட தமக்கு விரைவில் தீர்வு கிடைக்கவில்லை எனின் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க தயாராகவுள்ளதாகவும் கேப்பாபிலவு மக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (2-281)




# முல்லை. மாவட்டம் தழுவிய ரீதியில் எச்.ஐ.வி. இலவச பரிசோதனைகள்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு மாவட்டம் தழுவிய ரீதியில் எதிர்வரும் 27 ஆம் திகதி எச்.ஐ.வி தொடர்பான இலவசப் பரிசோதனை நடைபெறவுள்ளதாகவும் மக்கள் இதில் கலந்து கொண்டு பயன்பெறுமாறும் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் தயாளசீலன் பூங்கோதை தெரிவித்தார்.

எச்.ஐ.வி தொடர்பான விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பு ஒன்று நேற்றையதினம் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் தயாளசீலன் பூங்கோதை மேற்படி இலவச பரிசோதனையில் பங்கு கொண்டு நீங்களும் எச்.ஐ.வி தொற்று அற்ற ஒருவர் என்பதனை உறுதிப்படுத்துமாறு கோரியுள்ளார். இதற்கு மக்கள் அனைவரும் அருகிலுள்ள வைத்திய நிலையங்களுக்கு சென்று இந்த பரிசோதனையில் பயன்பெறுமாறும் கோருகின்றனர்

இதனடிப்படையில் முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கிராமிய சுகாதார நிலையம்-சிலாவத்தை, கிராமிய சுகாதார நிலையம்-கள்ளப்பாடு, கிராமிய சுகாதாரநிலையம், பூதன்வயல், கிராமிய சுகாதார நிலையம் -குமுழமுனை, பிரதேச வைத்தி யசாலை-அளம்பில், பொதுநோக்கு மண்டபம்- முள்ளியவளை, வடக்கு கிராமிய சுகாதார நிலையம்-முள்ளியவளை, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை-முல்லைத்தீவு, பிரதேச வைத்தியசாலை - கொக்கிளாய் போன்ற இடங்களிலும்.

இதனடிப்படையில் ஒட்டு சுட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பொது நோக்கு மண்டபம்-சின்ன சாளம்பன், பிரதேச செயலகம்- ஒட்டுசுட்டான், ஆதார வைத்தியசாலை -மாங் குளம், கிராமிய சுகாதார நிலையம் -முத்தையன்கட்டு, பொது நோக்கு மண்டபம் - இத்திமடு, பிரதேச வைத்தியசாலை- ஒட்டு சுட்டான் போன்ற இடங்களிலும்.

புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கிராமிய சுகாதார நிலையம்-விசுவமடு, கிழக்கு கிராமிய சுகாதார நிலையம்-மாணிக்கபுரம், பிரதேச வைத்திய சாலை-மூங்கிலாறு, கிராமிய சுகாதார நிலையம்-சுதந்திரபுரம், கிராமிய சுகாதார நிலையம்-வள்ளிபுனம், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை -புதுக்குடியிருப்பு, பிரதேச வைத்தியசாலை - புதுக்குடியிருப்பு CSD சென்டர் - பாரதிபுரம், ஆடைத் தொழிற்சாலை-புதுக்குடியிருப்பு போன்ற இடங்களிலும்

மணலாறு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பொலிஸ் நிலையம் -சம்பத் நுவர கிராமிய சுகாதார நிலையம்-ஜனகபுர, தேசிய பாடசாலை - சம்பத்நுவர, பாடசாலை எத்தாவெட்டுனுவெவ பிரதேச வைத்தியசாலை - சம்பத்நுவர போன்ற இடங்களிலும்

மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கிராமிய சுகாதார நிலையம்- பாண்டியன்குளம், கிராமிய சுகாதார நிலையம்-தேராங் கண்டல், கிராமிய சுகாதார நிலையம் - கல்விளான், பொதுநோக்கு மண்டபம்- மன்கைநகர், கிராமிய சுகாதார நிலையம்-பாலிநகர், ஆதார வைத்தியசாலை- மல்லாவி, பிரதேச வைத்தியசாலை- நட்டாங்கண்டல், ஆரம்ப சுகாதார மருத்துவ பராமரிப்பு நிலையம்- துணுக்காய், ஆரம்ப சுகாதார மருத்துவ பராமரிப்பு நிலையம்- ஐயன்கன்குளம் போன்ற இடங்களிலும்நடைபெறுமென வும் மக்களை கலந்து கொண்டு எச்.ஐ.வி தொற்று அற்ற ஒருவர் என்பதனை உறுதிப்படுத்துமாறு அவர் மேலும் கேட்டுள்ளார். (2-281)

# மலசலகூடத்திலிருந்து குழந்தை சடலமாக மீட்பு; நடந்தது என்ன?

## பொலிஸார் தீவிர விசாரணை

வவுனியா ஈச்சங்குளத்தில் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் மலசலகூடத்திலிருந்து சடலமாக குழந்தையொன்றினை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா ஈச்சங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்மடு, ஈஸ்வரிபுரத்தில் வசித்து வரும் பிரபாகரன் டில்சியா (வயது - 27) என்பவர் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் அவரின் வீட்டிலிலுள்ள மலசலகூடத்தில் ஆண் குழந்தையொன்றை பிரசவித்துள்ளார்.

குழந்தை பிரசவிக்கும் கூடத்தில் வீழ்ந்து இறந்துள்ளது என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரிய வருகின்றது.

குழந்தையின் சடலம் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் குறித்த தாயார் அதிக குருதி வெளியேற்றம் காரணமாக வைத்தியசாலையின் 7 ஆம் விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இக் குழந்தையின் மரணத்தில் சந்தேகம் இருப்பதனால் வவுனியா குற்றவியல் அதிகாரிகளின் உதவியுடன் ஈச்சங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரு

# விடுதலைப்புலி போராளியின் அடையாளத் தகடு மீட்பு



(முல்லைத்தீவு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் போராளி ஒருவரின் அடையாளத் தகடு ஒன்று நந்திக்கடல் வெளி பிரதேசத்தில் இருந்து மீட்கப் பட்டுள்ளது.

இந்த தகட்டில் அகவீரன் என்று எழுதப்பட்டுள்ளது. [illegible]

குறித்த தகடு விடுதலைப் [illegible] னாய்வு பிரிவைச் சேர்ந்த ஒருவருக்கு சொந்தமானதாக இருக்கும் என நம்பப்படுகின்றது.

அத்துடன், குறித்த விடுதலைப்போராளி தனது பெயரை தனது தகட்டு இலக்கத்தின் பின்னே பதிவு செய்திருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

முள்ளிவாய்க்கால்-நந்திக்கடல் வெளிப்பிரதேசத்தில் 2009 ஆண்டு தமிழீழ விடு[illegible] கைப் படையினருக்கும் இடையில்இறுதியுத்தம்நடைபெற்றது.

குறித்த இறுதிப்போர் முடிவுக்கு வந்து நேற்று முன் தினத்துடன் எட்டு வருடங்கள் கடந்த நிலையில் ஒரு போராளியின் அடையாளத் தகடு கையெழுத்துடன் காணப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

# மன்னாரில் இரத்ததான முகாம்

(மல்லாவி )

மன்னார் மறை மாவட்டத்தில் பல்வேறு மனித நேயப் பணிகளை ஆற்றி வரும் கரித்தாஸ்-வாழ்வுதயப்பணியகத்தின் "உதவிக் கரம்" பிரிவின் ஏற்பாட்டில் இன்று வியாழக்கிழமை மன்னாரில் இரத்ததான முகாம் இடம் பெறவுள்ளதாக மன்னார் கரித்தாஸ் வாழ்வுதய இயக்குநர் அருட்பணி ம.ஜெயபாலன் அடிகளார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மாலை பிற்பகல் 3மணி வரை மன்னார் வயல் வீதியில் அமைந்துள்ள "உதவிக்கரம்" நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இரத்த தானம் செய்ய முன்வரும் இருபாலாரும் இரத்ததான முகாமில் கலந்து கொண்டு இரத்ததானம் செய்வதன் ஊடாக குருதி இழப்பால் உயிரிழக்கும் மனித உயிர்களைக் காக்க முடியும் என மன்னார் கரித்தாஸ் வாழ்வுதய இயக்குநர் அருட்பணி ம.ஜெயபாலன்அடிகளார்மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல்போனோருக்கான பணியகம் மிகவும் அவசியம்

## அமெரிக்கத் தூதுவர் வலியுறுத்து

(கொழும்பு)

காணாமல் போனோருக்கான பணியகம் மிகவும் அவசியமானது என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் தெரிவித்துள்ளார்.



இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப் நேற்று முன்தினம் கிழக்கு மாகாணத்துக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது. பல்வேறு தரப்பினரையும் அவர் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களையும் அமெரிக்கத் தூதுவர் சந்தித்துள்ளார். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக அவர்களின் அன்புக்குரிய தாய்மார் பதிலைத் தேடுவதாகவும், அதற்கு காணாமல் போனோருக்கான பணியகம் மிகவும் அவசியமானது என்றும் அமெரிக்க தூதுவர் கருத்து வெளியிட்டுள்ளார். (இ-7)

# பிரெஞ்சுப் போர்க்கப்பலில் இராஜாங்க அமைச்சர் ருவான்





நல்லெண்ணப் பயணமாக கொழும்பு துறைமுகத்துக்கு வந்துள்ள பிரெஞ்சுப் போர்க்கப்பல்களை, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன நேற்று முன்தினம் சென்று பார்வையிட்டார்.

பிரெஞ்சுக் கடற்படையின் மிஸ்ரால் ('Mistral') எனப்படும் பாரிய தரையிறக்க மற்றும் உலங்கு வானூர்தி தாங்கி கப்பலும் கோர்பெட் (Courbet) என்ற போர்க் கப்பலும் நேற்று முன்தினம் கொழும்பு வந்தன.

இந்தக் கப்பல்களுக்கு நேற்று முன்தினம் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன சென்று பார்வையிட்டதுடன், பிரெஞ்சு கடற்படை அதிகாரிகளுடனும் பேச்சு நடத்தினார்.

இதன்போது பிரெஞ்சுக் கடற்படையினர் தமது போர்க் கப்பலில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருக்கு அணிவகுப்பு மரியாதையை அளித்திருந்தனர். (இ-7)

# அடுத்த ஜனாதிபதி ஞானசார தேரரே



## அவருக்கு இராஜயோகம் என்கிறது சிங்கள ராவய

(கொழும்பு)

பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு அதிவிசேட இராஜயோகம் உள்ளதாகவும், அவர் இந்த நாட்டின் ஜனாதிபதியாக வருவார் என சிங்கள ராவய அமைப்பின் பொதுச் செயலாளர் மாகல்கந்தே சுதத்த தேரர் தெரிவித்தார்.

நாம் நினைத்துக் கூடப் பார்க்காதவர்கள் நாட்டின் ஆட்சிப் பீடத்துக்கு வந்திருக்கின்றார்கள். ஞானசார தேரரின் இராஜயோகம் எப்படி சுற்றிவரும் என்பதை நாம் எதிர்காலத்தில் பார்ப்போம். இதைச் சொன்னதிலிருந்து குறித்த அந்த நபர்களுக்கு தூக்கத்திலும் வியர்த்துக் கொட்டும்.

ஞானசார தேரர் அவரின் வீட்டில் இருக்கின்றார். இவரின் வீட்டில் இருக்கின்றார் என்று அரசியல்வாதிகள் பல்வேறு விதமாக கருத்துக்கள் கூறுகிறார்கள். நாம் பார்ப்போம் அவர் எங்கிருந்து வருகிறார் என்று.

ஞானசார தேரருக்கான பாதுகாப்பு வழங்கப்படுமாயின் மாத்திரமே, அவர் இன்று 22 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுவார் எனவும் ராவணா பலய அமைப்பின் தேரர் மேலும் கூறினார்.

பொதுபல சேனாவின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே தேரர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# உள்ளூராட்சி தேர்தல் வெகு விரைவில்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற தேர்தலை வெகு விரைவில் நடத்துவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கூடிய ஆளும் கட்சி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் இதன்போது எல்லை நிர்ணய அடிப்படையில் 8 ஆயிரம் ஆக நிர்ணயிக்கப்பட்ட தொகுதிகளின் எண்ணிக்கையை 4 ஆயிரத்து 500 ஆக குறைக்கவும் தீர்மானித்ததாக சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று முன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### எப்போது பரிந்து பேசுவீர்கள்

உங்களவர் என்ன தவறு செய்தாலும் அவர்களுக்காக நீங்கள் மற்றவர்களிடம் பரிந்து பேசுவீர்களா?

உங்கள் வீட்டுப் பிள்ளை கிரிக்கெட் ஆடி எதிர் வீட்டு ஜன்னல் கண்ணாடியை உடைத்து விட்டான். நீங்கள் இல்லாத நேரத்தில் விடயம் பெரிய விவகாரமாகி விட்டது.

அடிப்படைத் தவறு பையன் மீது என்பதால் அடங்கிப் போவீர்களா? இல்லை என் பையன் அப்படித்தான்யா செய்வான். உன்னால் முடிந்ததைப் பார்த்துக்கையா என்பீர்களா?

ஒரு சிறு பாதையை யார் முதலில் கடப்பது என்கின்ற போட்டியில் உங்கள் மோட்டார் சைக்கிளை எதிரே வந்த ஸ்கூட்டர் சற்றே பதம் பார்த்து விட்டது. ஸ்கூட்டர்காரர் ஹெட்லைட் விளக்கை போட்டுக் கொண்டு வந்ததால் உங்கள் வாகனத்தை செலுத்திய உங்கள் நண்பர் தான் வாகனத்தை நிறுத்தி விபத்தைத் தவிர்த்திருக்க வேண்டும். தவறு உங்கள் நண்பர் மீது என்பது தெளிவாகத் தெரிந்த பிறகும் உங்கள் வாகனம் பாதிப்புக்குள்ளாகி விட்டது என்கின்ற கோபத்திலும் நண்பர் வேண்டுமே என்கின்ற சுயநலத்திலும் உங்கள் நண்பருக்காகப் பரிந்து பேசுவீர்களா? அல்லது கடிந்து கொள்வீர்களா?

இவ்விரண்டு விடயத்திலும் இதுபோன்ற சம்பவங்களிலும் நீங்கள் யாருக்காகப் பரிந்து பேசுகிறீர்கள் என்பதை பொறுத்து உங்கள் மனநிலை எப்படிப்பட்டது என்பதை சுயமாக உங்களை நீங்களே எடைபோட்டுக் கொள்ளலாம். எது எப்படியாயினும் தவறு உங்களவர் மீது என்கின்ற நிலையிலும் அவர்களுக்காக நீங்கள் பரிந்து பேசுவது நாளடைவில் விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தி விடுகின்றது.

நான் என்ன தவறு செய்தாலும் சரி, நமக்குப் பரிந்து பேச ஆளிருக்கிறது, நம்மை ஆபத்திலிருந்து காப்பாற்ற ஆளிருக்கிறது என்கின்ற உணர்வு நம்மைச் சுற்றிலும் இருப்பவர்களிடம் ஒருபோதும் வளர நாமே காரணமாக இருந்து விடக் கூடாது.

ஐயையோ! நம்ம ஆளை நம்ப முடியாதப்பா. செம்மையாக காலை வாரி விட்டு விடுவார் என்கின்ற உணர்வோ, நம்ம ஆள் சொன்னால் அதில் நியாயம் இருக்கும் என்கின்ற உணர்வேதான் மற்றவர்களுக்கு ஏற்பட வேண்டும். எல்லோர் முன்னிலையிலும் நம்மவர்களை விட்டுக் கொடுக்காமல் பேச நேரும் சூழ்நிலைகளிலும் கூட தனிப்பட்ட முறையில் அழைத்து நீர் செய்தது தவறு. இருந்தாலும் உன்னை நான் விட்டுக் கொடுக்காமல் பேசக் காரணம் இனி இந்தத் தவறை நீ செய்யக் கூடாது என்கின்ற அக்கறையில் தான் என்று அறிவுறுத்த வேண்டும். இந்த குறைந்தபட்ச செயலைக் கூட செய்யாவிட்டால் நம்மைச் சுற்றி இருப்பவர்கள் செய்யும் பொல்லாத் தனங்களுக்கு எல்லையே இல்லாமல் போய்விடும்.

**லேனா தமிழ்வாணன்**

# டெங்குக் காய்ச்சலால் உயிரிழந்தவர்களில் 25 வீதமானவர்கள் சிறுவர்கள் - அரசு

(கொழும்பு)

டெங்குக் காய்ச்சலில் உயிரிழந்தவர்களில் 25 சதவீதமானவர்கள் சிறுவர்களென அடையாளம் காணப்பட்டுள்ளதாக, டெங்கு ஒழிப்புப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் பிரசீலா சமரவீர தெரிவித்துள்ளார்.

அத்துடன், 20 சதவீதமான சிறுவர்கள் டெங்குக் காய்ச்சல் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின்போது பயன்படுத்தப்படும் புகையானது. விஞ்ஞான ரீதியில் பயன்படுத்தாமையினால் பல பிரச்சினைகள் தோன்றியுள்ளதாகவும் தவறான புகை விசுறுதல் மூலம் டெங்கு நோய் அதிகரித்துச் செல்வதாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குற்றஞ் சுமத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளின் போது, டெங்குத் தொற்றுக்கு மாணவர்கள் இலக்காவதைத் தடுப்பதற்காக, கல்வி அமைச்சுடன் இணைந்து, தேசிய டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டமொன்று முன்னெடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இவ்வருடத்தின் கடந்த ஆறு மாதங்களில் 65 ஆயிரம் பேர் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டுள்ள நிலையில் 200 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வாகன பாதுகாப்புத் தரிப்பிடம் அமைக்க வாசகர்கள் கோரிக்கை

(வரணி)

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட வரணி பொது நூலகத்திற்கு வாகன பாதுகாப்பு தரிப்பிடம் இல்லாமையால் தாம் அவதிப்படுவதாக மாணவர்கள், வாசகர்கள் தெரிவித்தனர்.

வெளியிடங்களில் துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள்களை நிறுத்துவதனால் திருட்டுப்போய்விடுமோ என்று பதற்றப்படுவதாகவும் மழை, வெயில் காலங்களில் வாகனங்கள் பழுதடையும் வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்தனர்.

எனவே இது தொடர்பில் உரிய தரப்பினர் நடவடிக்கையெடுத்து நூலகத்திற்கு வாகன பாதுக்காப்புதரிப்பிடம் அமைத்துத் தருமாறு வாசகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5-103)

## நல்லைக்குமரன் மலருக்கான ஆக்கங்கள் அனுப்பும் காலம் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

சைவ சமய விவகாரக் குழுவினால் வருடந்தோறும் நல்லூர் உற்சவகாலத்தில் வெளியிடப்படும் நல்லைக்குமரன் மலர் வெளியீட்டிற்கான ஆக்கங்கள் கோரப்படும் இறுதித் திகதியும், பாடசாலை மாணவர்களுக்கு நடத்தப்படும் பரீட்சை விண்ணப்பத்துக்கான முடிவுத் திகதியும் எதிர்வரும் 2017.06.25 ஆம் திகதிவரைகாலநீடிப்புச்செய்யப்பட்டுள்ளது என யாழ். மாநகர சபை ஆணையாளர் அறிவித்துள்ளார். (இ-3)

# 2017 இல் அரசு ஒதுக்கிய நிதியில் ஒரு சதம் கூட வந்து சேரவில்லை

## கிழக்கு முதல்வர் குற்றச்சாட்டு

இவ்வாண்டுக்கான நிதி ஒதுக்கீடு மத்திய அரசிலிருந்து ஒரு சதமேனும் கிழக்கு மாகாண சபைக்கு வந்து சேரவில்லை. கிழக்கு மாகாணத்துக்கான நிதி ஒதுக்கீடுகளை வழங்குவதில் மத்திய அரசு கையாளும் மந்தகதி நிலைமையினால் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதில் பல்வேறு தடங்கல்களை எதிர்கொள்வதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை ஜனாதிபதியின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் மத்திய அமைச்சர்கள், முதலமைச்சர்கள் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள் கலந்து கொண்ட கூட்டத்தின் போதே கிழக்கு முதலமைச்சர் இதனை ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

மாகாணத்தில் எதிர்நோக்கப்படும் பொதுவான விடயங்களை ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்த முதலமைச்சர் மத்திய அரசினால் மாகாண சபைகளுக்கு வழங்க வேண்டிய நிதி தாமதித்துக் கிடைப்பதால் பொது மக்களே பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாகிறார்கள்.

கிழக்கு மாகாணத்திற்கு கடந்த வருடத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் அபிவிருத்திப் பணிகள் நிறைவடைந்து அவற்றின் பல மில்லியன் ரூபாய்களுக்கான பற்றுச்சீட்டுக்களுக்கு இதுவரை நிதி விடுவிக்கப்படவில்லை.

அத்துடன் 2017 ஆம் ஆண்டுக்கு வரவு- செலவுத் திட்டத்தினூடாக ஒதுக்கப்பட்ட நிதியில் ஒரு சதமேனும் இது வரை கிழக்கு மாகாண சபைக்கு வழங்கப்படவில்லை.

எனவே ஒதுக்கப்பட்டுள்ள நிதியினை உரிய நேரத்தில் வழங்க ஆவன செய்ய வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார்.

இவ்வேளையில், நிதிய மைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கிழக்கு மாகாணத்திற்கான நிதியை வழங்குவதை துரிதப்படுத்துமாறு உத்தரவிட்டார். (இ-3)


நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை

கலைமாமணி

Dr.S.S.சர்மா குருஜீ

82/4 கலட்டி அம்மன் கோவிலடி, வண்ணார்பண்ணை.

077 784 1558

(சி.8817)



கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>சூரிசெவ் 6 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/6701 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: செவ் 4 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/6704 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>உயரம்: 6'1"<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/6702 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 13 செவ் 4 இல்<br>உயரம்: 150 cm<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/6706 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 17<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:O/L/வியாபாரம்<br>தொ.இ: B/6703 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 26<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்<br>தொ.இ: G/6707 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 36 சூரிசெவ் 7இல<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:O/L/மெக்கானிக் அரச தொழில்<br>தொ.இ: B/6705 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 9<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:தாதி பிரான்ஸ்<br>தொ.இ: G/6708 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.



கவிஞர் த. நாகேஸ்வரன் அவர்களின்

"இதயக் கனல்"

(கவிதை நூல்)

வெளியீட்டு விழா



காலம் :
22.06.2017 வியாழக்கிழமை
பி.ப 3.00 மணி
இடம் : தென்மராட்சி இலக்கிய அணி
" தமிழ்க் கோட்டம்"
(கம்பன் கல்லூரி வளாகம், சங்கத்தானை, சாவகச்சேரி)

தலைமை
திரு.அ.வாசுதேவா அவர்கள்
(அமைப்பாளர், தென்மராட்சி இலக்கிய அணி)
மங்கல விளக்கேற்றல்
திரு. ந.சர்வேஸ்வரன் ஜானகி தம்பதியர் (அதிபர் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
கடவுள் வாழ்த்து
திரு.தெ.திருவேரகன் அவர்கள் (திருவேரகம் கலைக் கல்லூரி, சாவகச்சேரி)
வரவேற்புரை :
சமுக ஜோதி கா.சிவஞானசுந்தரம் அவர்கள் (முகாமையாளர், திருக்கணித பதிப்பகம்)
தலைமையுரை : தலைவர் அவர்கள்
ஆசியுரைகள் : கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்கள்
(அமைப்பாளர், அகில இலங்கைக் கம்பன் கழகம்)
கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்
(தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)
வாழ்த்துரைகள் : திரு.ந.விஜயசுந்தரம் அவர்கள்
(பிரதம ஆசிரியர், வலம்புரி நாளிதழ்)
கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன் அவர்கள்
(சிரேஷ்ட விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்)
கவிஞர் இ.த.ஜெயசீலன் அவர்கள் (பிரதேச செயலர், வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை)
இதயக் கனல் நூல் வெளியீடு
வெளியீட்டுரை : திரு.க.அருந்தவபாலன் அவர்கள்
( ஓய்வுநிலை அதிபர், யா/ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி )
வெளியீட்டு வைப்பவர் : கம்பவாரிதி திரு.இ.ஜெயராஜ் அவர்கள்
(அமைப்பாளர், அகில இலங்கைக் கம்பன் கழகம்)
முதற் பிரதி பெறுபவர் : திரு.சின்னத்தம்பி சிவயோகன் அவர்கள்
(ஸ்ரீ முத்துமாரியம்மன் றேடர்ஸ், யாழ்ப்பாணம், சாவகச்சேரி )
கௌரவப் பிரதி பெறுவோர்: பேராசிரியர் க.கந்தசாமி அவர்கள்
(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
திரு.வ. ஸ்ரீபிரகாஸ் அவர்கள் (உரிமையாளர், குகன் ஸ்ருடியோ)
திரு.வி.மயூரன் அவர்கள்
(ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயம், கல்வயல்)
திரு.ந.சிவபாலன் அவர்கள் (தலைவர், கைத் தொழில் வணிகர் மன்றம், சாவகச்சேரி)
திரு.சிவமுகுந்தன் அவர்கள்
(கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம் )
நயப்புரைகள் : செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் அவர்கள்
( பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை )
பேராசிரியர் தி.வேல்நம்பி அவர்கள்
(பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம், யாழ். பல்கலைக்கழகம்)
நன்றியுரை : கவிஞர் த.நாகேஸ்வரன் அவர்கள் (நூலாசிரியர்)
( சிறப்புப் பிரதிகள் சபையில் அனைத்து அன்பர்களுக்கும் வழங்கப்படும்)
இந் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.
விழா ஒழுங்கமைப்பு
தென்மராட்சி இலக்கிய அணி
அன்புரிமையுடன் த.நாகேஸ்வரன்
(C-8647)


## ஸ்ரீலங்கன் குறித்து முடிவெடுப்பதற்கு ஜனாதிபதி தயார்

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் மோசடிகள் குறித்து விசாரிப்பதற்காக, சட்டத்தரணி ஜே.சி.வெலி அமுனவின் தலைமையில் நியமிக்கப்பட்டிருந்த குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்ற, அரசாங்கம் நேற்று முன்தினம் தீர்மானித்தது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில், ஜனாதிபதி செயலகத்தில், நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின் போது, ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் மோசடிகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, பிரதேச அபிவிருத்தி அமைச்சர் சரத் பொன்சேகா உள்ளிட்ட அமைச்சர்கள், மேற்படி குற்றச்சாட்டுகள் குறித்து, தீர்க்கமாக ஆராய்ந்தனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காரைநகர்-களபூமி-திக்க
# (ஸ்ரீ சிவசுப்பிரமணி
# தேர்த்திருவிழா சிறப்

### வடம் பிடிக்க வாரீர்



புண்ணிய பூமியென போற்றப்படும்காரைநகரில் எழுந்தருளி அடியவருக்கு வேண்டும் வரம் தரும் திக் கரை முருகப்பெருமானது இரதோற்சவ நிகழ்விற்கு ஆசியுரை வழங்குவதில் உவகையடைகின்றேன்.

தேவர்களுக்கு துன்பம் விளைவித்த சூரனை வதம் செய்து அவனை வேலும் மயிலுமாக்கி தன்னுடனேயே இணைத்து மகாதத்துவத்தை வழங்கும் முருகப் பெருமான் அருள் மழையில் நனைந்து திக்கரை முருகமூர்த்தி பெருமானின் இரதோற்சவத்தில் இணைவோமாக. அறிவின் மூலமாய் விளங்கும் வேலுடன் வள்ளி தெய்வானையோடு வீற்றிருக்கும் முருகப் பெருமான் அடிய வருக்கு வேண்டும் வரம் தருவான்.

திக்கரையில் இரதோற்சவம் காணும் முருகப்பெருமானின் வடம் பிடித்து மாயையை அழித்து அறிவைப்பெற அவன் தாள் பணிவோமாக

**சுபமஸ்து ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், நல்லை ஆதீனம்**

### செஞ்சொற் செல்வரின் ஆசிச் செய்தி



காரை திருவூரில் எழுந்தருளியிருக்கும் திக்கரை கந்தப்பெருமான் தேரேறி வரும் திருநாள் குறித்து வணங்கி வாழ்த்துவதில் ஆனந்தமடை கின்றேன். தூய சைவப் பண்பாட்டை இன்றுவரை காத்து வரும் காரைநகர் மக்கள் தனித்துவமானவர்கள். அவர்களது வாழ்வில் திருக் கோவில்களை உயிருக்கு நிகராக பேணிப் பாதுகாத்து வருகின்றார்கள்.

திக்கரை முருகப் பெருமான் திருக்கோவிலை காலத்திற்கு காலம் புதுப்பித்து புது மெருகூட்டிக் காத்து வருகிறார்கள். இவ்வாலய மஹோற்சவம் ஆரம்பமாகி விட்டால் எங்கு வாழ்ந்தாலும் இவ்வூர் மக்கள் திருவிழாக் காண்பதற்கென்று கூடி விடுவார்கள்.மிகவும் அழகான அலங்காரத்தோடு முருகப் பெருமான் திருவிழாக்காலத்தில் கண்ணுக்கினிய காட்சி நல்குவார்.திக்கரை முருகனின் தேர்த்திருவிழா சிறப்புற நடைபெற அனைவரும் பிரார்த்திப்போம்.எம் மண்ணில் அஞ்ஞான இருள் போய் மெஞ்ஞான ஒளி தென்பட முருகா நீ அருள் செய்ய வேண்டும் என வேண்டுகின்றோம்.

**கலாநிதி ஆறு.திருமுருகன் தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம்,தெல்லிப்பழை.**

### வினை தீர்க்க வருகிறான் வேலன்



இலங்கையின் சிகரமாய்த் திகழும் யாழ்ப்பாணத்தின் கலை, கலாசார, சமய பண்பாட்டுக் கருவூலமாய் பலராலும் பாராட்டப்படும் பெருமைக் குரியது எங்கள் காரைநகர் மண். திரும்பும் இடமெல்லாம் தெய்வதரிசனம் கிடைக்கும் வகையில் ஆலயங்கள் பலவற்றை அமைத்து அருள்வழி காட்டியவர்கள் நம் மூதாதையர்கள். அங்ஙனம் காரைநகரில் அமைந்த உயர் அருளாலயங்களில் திக்கரை முருகமூர்த்தி ஆலயத்திற்குத் தனியிடம் உண்டு. அழகனான தமிழ்க்கடவுள் முருகன் இவ்வாலயத்தில் நம் இனத்தின் அடையாளமாய் எழுச்சியுடன்நின்று அருள் வெள்ளத்தைப் பரப்புகிறான்.

அந்த அரும்பெரும் முருகனுடைய இரதோற்சவம் நிகழ் வது ஊரார்க்கு மட்டுமன்றி உல கோர்க்கும் மகிழ்வு தரும் செய்தியாம்.

அம்முருகனின் அருள் பெற்று உயர்ந்தது எங்களது எஸ்.வி.எம். நிறுவனம். முருகனது இரதோற்சவம் நிகழும் இவ்வேளையில் எமது நிறுவனத்தின் ஊழியர்களின் சார்பாகவும் எங்கள் குடும்பத்தார் சார்பாகவும் முருகன் திருவடியை வாழ்த்தி வணங்கி நிற்கின்றேன்.

**இங்ஙனம்**
**முருகேசு**
**குணரட்னம்.**

### ஆலய பிரதம குருவின் ஆசிச்செய்தி



ஓர் ஆலயத்தின் மஹோற்சவத்தில் சிறப்பு உற்சவமாக விளங்குவது இரதோற்சவம் ஆகும். மஹோற்சவம் இறைவனின் ஐந்தொழில்களையும் குறிக்கும். இதில் அழித்தல் தொழிலைக் குறிப்பது இந்த தேர் உற்சவம் ஆகும். அழித்தல் என்பது ஆன்மாக்களின் ஆணவம், கன்மம், மாயை என்கின்ற மும்மலங்களையும் அழித்து எம்மை தூய்மைப்படுத்தி ஆறுமுகப் பெருமானின் கையில் இருந்து ஒளிவீசிக் கொண்டு விளங்கும் ஞானசக்தியாகிய வெற்றி வேலாயுதம் தாங்கிக்கொண்டு ஆறுமுகப்பெருமான் வள்ளி, தெய்வயானை சமேதராய் தேரில் ஏறி பவனி வரும்போது அவருடைய தேர்வடத்தைப்பிடித்து இழுத்து அவரை தேரில் வழிபாடு செய்யும் போது எமக்கு இருக்கின்ற நான், எனது என்கின்ற ஆணவத்தை ஓங்கார வடிவமான வேலாயுதத்தை தாங்கியுள்ள சண்முகப்பெருமான் இல்லாதொழித்து எம்மை ஆட்கொள்வதுடன் இன்றைய தேர் உற்சவத்தில் கலந்து கொண்டுள்ள அனைத்து மெய்யடியார்களும் அனைத்து செல்வங்களும் பெற்று சௌபாக்கியமாக வாழ முருகப்பெருமான் திருவருள் புரிய வேண்டி இன்றைய தேர் உற்சவம் சிறப்பாக நடைபெற எமது நல்லாசிகளைக் கூறி அமைகின்றோம்.

*யாம் இருக்கப் பயம் ஏன்?*

**லோகசமஸ்த்தாசுகினோபவந்து**

**பிரம்ம ஸ்ரீ கு.சரவணபவானந்தசர்மா (B.Sc) (பிரதம குரு, தேவஸ்தானம்) திக்கரை, களபூமி, காரைநகர்.**

### மஹோற்சவ குருவின்ஆசியுரை



ஓம்கார வடிவான ஞானபண்டிதன் முருகமூர்த்தி பெருமான் அருள் ஒளி வீசுகின்ற கதிர்வேலை கையிலேந்தி பேரோளியாக பல வடிவங்கள் உடைய முருகமூர்த்தி பெருமான் கொழுந்து விட்டெரியும் அக்கினியின் அமைப்புக்கு ஒத்திருக்கும் தேரின் மீது ஏறி பவனி வரும் போது தேர் வடத்தைப்பிடித்து இழுத்து உற்சவத்தில் கலந்து கொள்கின்ற மெய்யன்பர்களின் துன்பங்களையும்/ நோய்களையும் தீய எண்ணங்களையும் அக்னி வடிவில் சங்காரம் செய்து பக்தர்களை தூய்மையாக்கி "உய்ய என் உள்ளத்தில் ஓங்காரமாய் நின்ற திக்கரை முருகமூர்த்தி பெருமான் தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெற முருகமூர்த்தி அடியார் எல்லாம் பெருகி வளரும் செந்தமிழால் போற்றி அன்புடன் துதிக்கும் மனநிலையை பெற அருள்புரிய பிரார்த்தித்து நல்லாசி கூறி மகிழ்கிறேன்.

**சிவப்பிரம்மஸ்ரீ வாகீசவாரிதி, கணேச சபாபதிக்குருக்கள், சுன்னாகம்.**

### திருத்தல வரலாறு

ஈழவள நாட்டின் வடபகுதியில் உள்ள சிவ பூமியாகிய காரை வள நாட்டில்பல சைவ ஆலயங்கள் சிறப்புற அமைந்திருக்கின்றன. அவற்றில் களபூமியி லுள்ள திக்கரை எனும் பதியில் வேண்டுவார்க்கு வேண்டுவதையெல்லாம் ஈந்தருளும் கலியுக வரதனாகிய முருகப் பெருமான் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கிறார். பெருமை வாய்ந்த இத் தலத்தின் வரலாறு மிக அற்புதமானது. இற்றைக்கு பல நூற்றாண்டுக்கு முன்னர் (1760 வரையில்) அவதரித்த முருகப்பெருமான் காலத்துக் குக் காலம் பல அற்பு தங்களை புரிந்திருக்கின்றார்.

அரிய மானிடப்பிறவி எடுத்த கனகசபை காசிநாதர் எனும் அன்பருக்கு திடீரென கண் பார்வை மறைந்து விட்டது.அதனால் பெரும் அல்லலுக்கு உட்பட்டு முருகன் காப்பான் எனும் உறுதியுடன் இடையறாது அவர் செந்தாள்களை தழுவிப்பிடித்தமையினால் முருகப் பெருமான் திருவுளம் கொண்டு அந்த அன்பருக்கு கண்ணொளி கொடுத்தார். இதனால் உள்ளம் புளகாங்கிதம் அடைந்த அன்பர் வயல் மேட்டிலிருந்த வேலாயு தத்தை இப்பொழுது புனருத்தாரணம் செய்யப் பட்டிருக்கும் கோயில் இருக்கும் இடத்தில் வைத்து சிறு ஆலயமாக அவரும் ஊரில் உள்ளவர்களும் 1880 இல் அமைத்து நிர்வாகப்



"கார்விளையும் காரைநகர் களபூமித் திக்கரையில்
ஊர்விளங்கக் கோவில்கொண்டு உயிர்க்கருளும்முருகனருள்
சீர்பொழியும் மஹோற்சவத்து தேரோடும் திருவிழாவில்
பார்போற்றப் பணிசெய்த "எம்பர்" பரம்பரைக்கே உரித்தான
தேரோட்டத் திருநாளில் வாய்மையின் வெற்றியோடு
வணங்கிடுவோம் திக்கரை முருகனையே"

"2016 ஆம் ஆண்டு மஹோற்சவம் நடைபெற்ற பின்னரும் 13- 06-2017 வரையான காலப்பகுதியில் இடம்பெற்றிருந்த நித்திய பூசைகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்கோடு தான் இந்த வருட மஹோற்சவம் நடைபெறுகின்றது. வருடாவருடம் நடைபெறுகின்ற மஹோற்சவங்கள் குறைநிறைகளை நிவர்த்தி செய்வதற்காகத்தான் நடைபெறுவது வழக்கம். சிவாச்சாரியார்கள் சமயாசார முறைப்படியே கிரியைகளை தொடர்ந்து விதிமுறைகளுக்கமைய செய்து வருவார்களேயானால் இக்கிராமத்தின் மக்கள் அனைவரும் பசி, பட்டினி, வறுமையிலிருந்து மீண்டு சிறப்பான வாழ்வு வாழ்வதற்கு திக்கரை முருகப்பெருமான் திருவருள் புரிவார் என்பது திண்ணம்" திருமுருகக் கடவுளின் திருவிளையாடலினால் எமது தேசமெல்லாம் ஆர்ப்பரித்து அடங்கியிருக்கிறது. அனைவரும் ஒற்றுமையாக ஓரணியாகவிருந்து எமது மக்களினது நிம்மதியான சுதந்திரமான சுகவாழ்விற்காக பாடுபட வேண்டுமென இத்தேர்த் திருநாளில் இறைவனை வேண்டுகின்றேன்.

வண்ணம் ஷண்முக சக்கரமாக அமையும் "சரவணபவ" என்னும் ஆறெழுத்து மந்திரத்தை தியானத்தில் வைத்துக் கடைத்தேறுவர். பிரம்ம மண்டலத்தை அடைந்து பேரின்ப பெருவாழ்வு பெறுவர்.

குழந்தை அழும்போது சந்திரனைக் காட்டி குழந்தை கூப்பிட்டால் குளிர் மதியும்

### காரைநகர் பிரதேச செ

காரைநகர் களபூமி திக்கரைப் பகுதியி வண்ணம் வாழ அருளாட்சி செய்து கொண் இரதோற்சவ நன்னாளிலே வள்ளிதேவசே தேரிலே எழுந்தருளி வேண்டுவார் வேண்டும் சாந்தியும் சமாதானமும் சுபீட்சமும் உன் பெருமானின் பாதாரவிந்தங்களை இறை

**திரு.ஈ.தயாரூபன் பிரதேச செயல**


**கல்கமுவ ஸ்ரோர்ஸ்**
இல. 133/1, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 021 222 0966,
077 183 6625

**PAPER HOUSE**
NO.100,
HOSPITAL ROAD,
JAFFNA.

**SIVA AINGARAN STORES**
No.356, Hospital Road,
Jaffna.
TP:021 221 9771

**சண்முகன் ஸ்ரோர்ஸ்**
308,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
Tel :- 021 222 9500

**RUBA VERSATILE TRADERS**
104 - A, Stanley Road, Jaffna.
Tel :- 021 222 8330

**S.V.MURUGESU**
இல.154,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**சரவணாஸ் ரேடேர்ஸ்**
இல.3. நவீனசந்தை
வெளிப்புறம், யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 021 222 2742

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
இல.4, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. [illegible]


மலரமைப்பு:- ஆலய நிர்வாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பொறுப்பை ஏற்றனர். அக் கோயிலை மேலும் கற்களால் கட்டி 1902 இல் கும்பாபிஷேகம் செய்தனர்.

1925 இல் இவரது மறைவுக்குப் பின்னர் சிதம்பரப்பிள்ளை கனகசபை ஆலய நிர்வாக பொறுப்பை ஏற்று 1928, 1948களில் கும்பாபிஷேகத்தை நடத்தினார்கள். 35 ஆண்டுகள் இந்த ஆலயத்தை செவ்வ[illegible]பரிபாலித்து 1960இல் சிவபதம் அடைந்த பின்னர் அவரது மகன் வைத்தியகலாநிதி கனகர் திருநாவுக் கரசு அவர்கள் கோயில் நிர்வாகப் பொறுப்பை ஏற்று 1974 இல் கும்பாபிஷேகத்தை நடத்தினார்கள்.

1979 இல் இவர் சிவபதம் அடைய சிதம்பரப்பிள்ளை கந்தையா நிர்வாகப் பொறுப்பை ஏற்று 1990 இல் கும்பாபிஷேகம் நடத்தினார்கள். 1990 இல் இவர் சிவபதம் அடைய மூத்தமகன் கந்தையா நடராசா நிர்வாகப் பொறு ப்பை ஏற்று நடத்தி 2000 இல் இவர் சிவபதமடைய இளைய மகன் கந்தையா பொன்னம் பலம் நிர்வாகப் பொறுப்பை ஏற்று 2008 இல் கும்பாபிஷேகத்தை நடத்தினார்கள். 2012 இல் இவர் சிவபத மடைய மூத்தமகன் பொன்னம் பலம் உமா சங்கர் நிர்வாகப் பொறுப்பை ஏற்று நடத்தி வரு கின்றார். அன்று தொடக்கம் இன்று வரை ஆல யத்தில் சிறப்பான முறையில் நித்திய பூசைகள் இடம்பெற்று வருகின்ற மை குறிப்பிடத்தக்கது.

அதனோடு குலாவ வரும் என்று வேடிக்கை காட்டி அதன் அழுகையை மாற்றுவர். அந்த வகையில் பிள்ளைத் தமிழில் தோன்றிய பருவம் அம்புலிப் பருவம். சந்திரனிடம் சாம, பேத, தான, தண்டம் என்னும் நான்கு வகை உபாயங்களைப் பயன்படுத்திப் பேசி அதனைக் குழந்தையோடு விளையாட வரும்படி அழைப்பர் கவிஞர். புகழிக் கூத்தர் தானோபாயத்தைப் பயன்படுத்தி பாடும் அழகிய பாடல் நமக்கு ஞானோபயமாகவும் விளா[illegible]ின்றது. இங்கே கவிஞர் தான் தாயாக நின்று பேசுகின்றார்.

"செந்தமிழ் வளர்க்கும் திருச் செந்தில் வேலனை
சிறு தேர் உருட்டி யருளே
சேவல் பாதகைக் குமார கம்பீரனே
சிறு தேர் உருட்டி யருளே"

தேவர் சிறைமீட்டுத் தேரில் உலாவந்து வெற்றிவிழாக் கொண்டாடிய வேலவனை. சிறு தேரை - நடை வண்டியை - உருட்டி விளையாடும்படி வேண்டுகின்றார் புகழிக் கூத்தர்.

தேர் செல்லும் வழி எல்லாம் செந்தமிழ் மணக்கிறதாம் பொதிகை மலை அமைந்த தென்பாண்டி சீமை அல்லவா? முருகன் தமிழ்க் கடவுள் அல்லவா? பொதிகையில் பிறந்த தமிழ் அதன் அழகு குறையாமல் சர்வதேசமெல்லாம் பரவி வியாபித்து வரவேற்பு அளிப்பதைப் போல திக்கரை முருகனின் தேர்த் திருவிழாவிலும் தேரேறும் முருகனுக்குச் சீரேறும் வீதியெல்லாம் தமிழ் மணம் கலந்த வரவேற்பும். காரைநகர் கிராமந்தனில் தமிழ்த் தேசியமும் சிறப்போடு வாழ்கின்றது.

**தம்பி மு.தம்பிராசா, "பாண்டியன் இல்லம்"**
**தேர்த்திருவிழா உபயகாரர்**
**பாலாவோடை, களபூமி, காரைநகர்.**

### திக்கரை முருகன் திருத்தேர் வடம் பிடித்து நாம் கந்தகிரியில் இடம் பிடிப்போம்



சந்தனம், பச்சைக் கற்பூரம், குங்குமம் ஆகிய வாசனைகளை அணிந்து மகிழ்ச்சியைத் தருவதாய், சண்பக மலர் மாலையும் வீரகடகமும் அணிந்து விளங்கும் திருத்தோள்களை உடையவரும் போர் புரிவதில் வல்லவரும் கருணையின் வடிவமாகிய குமாரக் கடவுளே! திக்கரை ஆறுமுத்து அண்ணலே! சரவணப்பொய்கையில் தோன்றியவரே! வேடர் குல மகளாம் பழையவளான வள்ளிநாயகியின் கணவரே! ஐராவத யானையால் வளர்க்கப்பெற்ற தளிர்போன்ற ஒளியுள்ள தேவசேனை (முருகன்) தழுவும் கந்தமூர்த்தியே! விக்கினங்களை நீக்குபவரும் விநாயகப்பெருமானின் சகோதரரே!

ஸ்கந்தகிரியில் இடம்வேணும் என திக்கரை முருகன் திருத்தேர் வடம் பிடித்து அரகர முருகா அரகர கந்தா அரகரகுமரா அரகரசிவசிவ குகா என ஆனந்தக்குரல் எழுப்பி மனம் உருக சிந்தையெல்லாம் சிவ நினைவுடன் இருக்கும் பிறவிப்பெருங்கடலில் வீழ்ந்து நெடுங்காலமாக இடர்ப்படும் அடியார்களுக்கு, ஆன்மாக்களுக்கு உமது குளிர்ந்த திருவடியை தந்து திருவருள் புரிவீராக.

**க.கு.க.சிவபாலன் (K.K.K)**
**அடியாருக்கு அமுதூட்டும் அண்ணலார்.**

### காரைநகர் திக்கரையில் வீற்றிருந்து அருள்புரிகின்ற திக்கரை முருகப் பெருமானுக்கு இன்று இரதோற்சவம்



திக்கரை முருகன் இரதோற்சவம் ஏறும் நாள் காரைநகர் மக்களுக்கு ஒரு பெரிய விழா. இந்த நாளை எண்ணி எண்ணி காத்து நிற்கும் அளவிற்கு அவன் தேரில் வலம் வரும் காட்சி அவ்வளவு அழகானதாகும்.

வேலாகி, மயிலாகி, வினை தீர்க்கும் முருகப் பெருமானின் அற்புதங்களையும் அருளையும் வார்த்தையால் சொல்லிவிட முடியாது. அறிவின் உருவாய் வேல் கொண்ட எம் தமிழ்க் கடவுளாம் முருகப் பொருமானவன் திக்கரையில் கோயில் கொண்டு வினை என்று வந்தவர்க்கு வினை தீர்த்து வைப்பதில் அவனுக்கு அவனே! எம்பெருமான் இரதோற்சவ வடம் பிடித்து அவன் அருள் நிழலில் திளைத்திட பக்த கோடிகளை ஓடோடி வர அன்புடன் அழைப்பதுடன் அவன் இரதோற்சவம் சிறக்க அப்பன் முருகனை இறைஞ்சுகின்றேன்.

**தி.சிலம்பரசன் தலைவர், திக்கரை இந்து**
**இளைஞர் மன்றம், களபூமி, காரைநகர்.**

### முருகப் பெருமானே தேரேறி வாராய்



திருவருட்செல்வங்கள் பொலிந்து சீரும் சிறப்பும் வாய்ந்த நவ கண்டங்களுள் சிறந்த பூமியாகிய பரத கண்டத் தினை சார்ந்த சிவபூமி எனப்படும் புண்ணிய தேசமாகிய இலங்காபுரியின் வடபால் அமைந்த வீணாகானபுரம் என வியந்து அழைக்கப்படும் யாழ்ப்பாணநன் நகரில் மேற்குத்திசையில் அமைந்திருப்பது காரைநகர். இந் நகரில் சூரியன் உதிக்கும் கிழக்கு திசையில் அமைந்திருப்பது களபூமி எனும் கிராமம். இக்கிராமத்தில் சைவமும் தமிழும் தழைத்தோங்கி உள்ளன. அதனால் கல்வி, விவசாயம், வர்த்தகம், நீதி என்ற வளங்கள் மேம்பட்டு விளங்குகின்றன.

திக்கரை என்னும் பதியில் கோயில் கொண்டு எழுந்தருளி மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் சிறப்புக்களுடன் தன்னை நாடிவரும் அடியவர்களுக்கு வேண்டும் வரங்களை அருளி, அருளாட்சி புரிந்து கொண்டு விளங்கும் திக்கரை ஸ்ரீ சிவசுப் பிரமணிய பெருமானின் வருடாந்த பிரம்மோற்சவம் நிகழும் மங்கலகரமான ஏ விளம்பி வருடம் ஆனி 8 ஆம் நாளாகிய (22.06.2017) இன்றைய நன்நாளில் தாங்கள் விரும்பிக் கேட்கும் வரங்களை ஈந்தருளும் திக்கரை முருகப் பெருமான் தம்மிடம் நாடி வரும் பக்தர்களின் குறைகளை தீர்ப்பவர். அவர் தம் பதார விந்தங்களை பணிந்து அவர் தேரேறி வரும் இந்நாளில் இவ்வாலய வளர்ச்சிக்கு உதவி புரியும் ஆலய முகாமையாளர் மற்றும் அனைவருக்கும் மேலும் இம் மலர் சிறப்பாக வெளிவர ஒத்துழைப்புச் செய்த அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் அவரருளை அனைவரும் பெற்றுய்ய எல்லாம் வல்ல முருகப் பெருமானை வாழ்த்திப் பிரார்த்திக்கின்றேன்.

**P.உமாசங்கர், ஆலய அறங்காவலர்.**

### திக்கரையில் தேர் இவர்ந்தால் எங்கள் ஐயன்!



உலகுய்ய வேல் கொண்டு முருகன் வந்தால்
ஒப்பற்ற தேவர்களும் உவகை கொள்வர்
நலம் தந்து சூரனையே வதைத்து ஆண்ட
நம் தலைவன் இவனென்று பணிந்து நிற்பர்
தலமெங்கும் தோன்றிடினும் எங்கள் ஐயன்
தான் நிற்கும் திக்கரையில் தேர் இவர்ந்தால்
நிலமெங்கும் வியந்திடுமே அழகன் என்ற
நிகரில்லாப் பெரும் பெயர்க்கு ஈடு என்னே!

**கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்.**

### தேச செயலரின் ஆசிச்செய்தி



பகுதியில் எழுந்தருளி மக்கள் மண்ணில் நல்ல
கொண்டிருக்கும் சுப்பிரமணியப் பெருமானின்
ீதேவசேனா சமேத சுப்பிரமணியப் பெருமான்
வண்டும் வரங்களை நல்க வேண்டியும் நாட்டிலே
ும் உண்டாக எல்லாம்வல்ல சுப்பிரமணியப்
இறைஞ்சி நிற்கின்றேன்.

செயலர், பிரதேச செயலகம், காரைநகர்.

கிருஷ்ணா நகை மாளிகை
இல. 09, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
TP: 021 222 5046

உ
சிவமயம்
ஓம் நமசிவாய
க.கு.க.சிவபாலன்
அடியார்க்கு அமுதூட்டும் அண்ணலார்
இல. 318, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

KS KANNAN STORES
268, Hospital Road,
Jaffna.

K.S.M. Communication
No.146, New Market
Jaffna.
T.P :- 021 222 3079

SRI RAMAJEYAM
SRI SIVARAM TRADERS
No.248, Hospital Road,
Jaffna. Tel:-021 222 8629
077 756 0760

VISAGAN TRADERS
No. 133/10, K.K.S.Road,
JAFFNA.
TP: 021 222 3032

INKARAN STORES
354, Hospital Road,
Jaffna.

NEC
Navalar Education Centre.
Point Pedro Road, Anaipanthi.
Clock Tower Road, Jaffna.
T.P:- 077 469 6695

YARL TRADES CENTRE
Agents for Bata
11, Modern Market-
Hospital Road, Jaffna.
Tel :- 021 222 3152

அன்னை புத்தகசாலை
இல. 07, நவீன சந்தை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 9881

சங்கீதா மல்ரிசென்ரர்
இல. 05, நவீன சந்தை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை குறித்து

# ஐங்கரநேசன் தன்னிலை விளக்கம்

(தொடர்ச்சி...)

• திரு. இராசநாயகம் ரஞ்சன் அவர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட்டாலும் இரண்டு வருட காலத்தின் பின்னர் 2016ஆம் ஆண்டிலேயே அவருக்கு எதிரான குற்றச்சாட்டுப்பத்திரம் வழங்கப்பட்டதை அதிகார துஷ்பிரயோகத்தை மூடிமறைப்பதற்காக செய்யப்பட்ட செயலாக விசாரணைக்குழு கருதியுள்ளது.

இவர்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பில் கூட்டுறவுச் சட்டத்தின் 46-1 பிரிவுக்கு அமைய முறைப்படி விசாரணைகள் இடம்பெற்றுள்ளன. பொதுவாகவே 46-1 விசாரணை நீண்டகாலம் எடுக்கும் ஒரு விசாரணை முறைமையாகும். இவர்மீது அதிக எண்ணிக்கையிலான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டதால் விசாரணையை முடிவுறுத்தி குற்றச்சாட்டுப் பத்திரம் கையளிக்க இரண்டு வருடகாலம் நீடித்தது என்பதே கூட்டுறவு உதவி ஆணையாளர் தெரிவித்த கருத்தாகும்.

இவர் மீதான குற்றச்சாட்டுகள் பொதுச்சபையில் சமர்ப்பிக்கப்பட்டு பொதுச்சபையில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதன் அடிப்படையில் 5 வருட காலங்கள் முடியும் வரையில் இக் குறிப்பிட்ட சங்கத்தில் இயக்குநராகவோ ஊழியராகவோ இவர் பதவி வகிக்க முடியாது என அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுத்துறையின் அண்மைகால வரலாற்றில் 46-1 விசாரணையை பொதுச்சபை ஏற்றுக்கொண்டு குற்றம் சாட்டப்பட்டவரை பதவி விலக்கியது இதுவே முதல்முறையாகும்.

### குற்றச்சாட்டு இல 4.9

2015இல் யாழ்கோ பாற்பண்ணை கூட்டுறவுச்சங்கத்துக்கு தலைவராக முன் அனுபவம் இல்லாதவரும் அரச அதிபரால் முன்சிபார்சு செய்யப்படாதவருமான திரு.இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா என்பவரை குடும்ப நண்பர் என்ற அடிப்படையில் கூட்டுறவு ஆணையாளர் மூலம் தலைவராக நியமித்தமை தொடர்பில் அதிகார துஷ்பிரயோகம் செய்தமை

நான் திரு.இரத்தினசிங்கம் சர்வேஸ்வராவை அவர் யாழ்கோவின் தலைவராக நியமிக்கப்பட்ட பின்னர்தான் தெரியும் என்று சாட்சியம் அளித்து திரு.இ.சர்வேஸ்வராவுக்கும் எனக்கும் இடையிலான முன் உறவை மறைக்க முயற்சித்ததாகவும்,திரு.இ.சர்வேஸ்வரா SLAS உத்தியோகத்தர் என்று உண்மைக்குப்புறம்பாக நான் சாட்சியம் அளித்ததாகவும் விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

திரு.இ.சர்வேஸ்வரா எனக்கு கற்பித்த ஆசிரியர் ஒருவரின் மகனின் மகளை மணம் முடித்தவர். இவர் யாழ்கோவில் நியமிக்கப்பட்டு, பொதுநிகழ்ச்சிகளில் இவரை சந்திக்கத் தொடங்கும்வரை இவருடன் நான் நெருங்கிப் பழகியதில்லை. தெரியும் என்ற அளவிலேயே தொடர்பு இருந்தது. யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் இவரைப் பரிந்துரை செய்ததன் அடிப்படையிலேயே நான் பரிந்துரை செய்தவர்களின் பெயர்ப்பட்டியலில் இவரையும் ஒருவராகக் குறிப்பிட்டிருந்தேன். மாடுவளர்ப்பில்அனுபவம்உடையவர்என்றதகுதி அடிப்படையில் அன்றி, யாழ்கோவை நிர்வகிப்பதற்கு ஒரு நிர்வாகி தேவை என்பதன் அடிப்படையிலேயே இவர் நியமனம் செய்யப்பட்டார். யாழ்.பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் உதவிப் பதிவாளராக இருக்கும் இவர் பல்கலைக்கழக நிறைவேற்று உத்தியோகத்தர் ஆவார். அத்தோடு, 2013 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாகசேவைக்கு(SLAS)நியமனம் செய்யப்பட்டவர். எனினும்,அவர் தனிப்பட்ட சில காரணங்களுக்காக அப்பதவியைப் பொறுப்பேற்றிருக்கவில்லை. நான் விசாரணைக்குழுவின் முன்னால் இத்தகவலைத் தெரிவித்தேனே தவிர அவர் SLAS அதிகாரி என நான் பொய் உரைக்கவில்லை.

### குற்றச்சாட்டு இலக்கம் 4.10

மருதங்கேணி கடற்றொழில் சமாசத் தலைவரை நியாயமான காரணங்கள் இன்றிக் கூட்டுறவு ஆணையாளர் மூலம் 2015 மார்கழி மாதம் அளவில் பதவிநீக்கம் செய்தமை மூலம் அதிகார துஷ்பிரயோகம் செய்தமை

• கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்துக்கு எதிராகச் செயற்பட்டமை காரணமாக வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சங்கத் தலைவரை தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி கூட்டுறவுத்துறை அமைச்சர் பதவி நீக்கம் செய்துள்ளார் என விசாரணைக்குழு தனது அறிக்கையில் பதிவு செய்துள்ளது. கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்துடன் இவரது பதவி நீக்கத்தைத் தெரியப்படுத்துவது உண்மைக்குப் புறம்பானது ஆகும். சமாசத்தலைவர் சமாசத்தின் கடிதத் தலைப்பைப் பயன்படுத்தி கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றுக்கு அழைப்பு விடுத்த காரணத்துக்காகவே பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என விசாரணைக்குழு தனது அறிக்கையில் நிறுவ முற்படுகின்றது. இவரது பதவி நீக்கத்தை முற்றுமுழுதாக கடிதத்தலைப்பு



விடயத்துடன் தொடர்புபடுத்துவது தவறானது.

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் தொடர்பாக 12.09.2015 அன்று கூட்டம் ஒன்றை நடத்தியுள்ளது. இக்கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்ட முறை தொடர்பாக அச்சங்கத்தின் பொதுமுகாமையாளர் முறைப்பாட்டுக் கடிதம் ஒன்றை எனக்கு அனுப்பிவைத்துள்ளார். இக் கடிதத்தின் பிரதியை உரிய நடவடிக்கைக்காக என்று குறிப்பிட்டு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிடம் அனுப்பியிருந்தேன்.

இக்காலப்பகுதியில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர், சமாசத்தலைவர் தொடர்பாக வேறு முறைப்பாடுகளையும் செய்திருந்தார். சமாசத்தலைவர் தனது தலைவர் என்ற பதவியைப் பயன்படுத்தி, இயக்குநர் சபைக்குத் தெரியாமல் சுண்டிக்குளத்தில் இளைப்பாற்று மண்டபம் ஒன்றை அமைப்பதற்கான ஒப்பந்தம் ஒன்றை பிரதேச செயலகத்துடன் செய்திருந்தார். அத்தோடு, இளைப்பாற்று மண்டபத்திலும் பல குறைபாடுகளைப் பிரதேச செயலாளர் சுட்டிக்காட்டி ஆணையாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்திருந்தார். இக் குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே சமாசத் தலைவர் மீது 46-1 விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்விசாரணையில் கடித விவகாரம் உள்ளடங்கப்படவில்லை. இவ் விசாரணைக்கு ஏதுவாகவே இயக்குநர் சபைக்கு மூவர் நியமனம் செய்யப்பட்டார்கள். இதில் தலைவராக வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் க.கனகேஸ்வரன் நியமிக்கப்பட்டதையடுத்து சமாசத்தலைவர் தனது தலைவர் பதவியை இழக்கவேண்டி வந்தது. எனினும் அவர் இயக்குநர் சபை உறுப்பினராகவே தொடர்ந்து செயற்பட்டு வந்துள்ளார்.

### விவசாய அமைச்சின் செயலாளர் பற்றிய விசாரணைக் குழுவின் பதிவு

• அமைச்சர் தனது செயற்பாடுகளுக்குத் துணையாக இலங்கை நிர்வாக சேவையில் மற்றைய செயலாளர்களுடன் ஒப்பிடும் போது இளம் உத்தியோகத்தரை அமைச்சின் செயலாளராக நியமித்து அவரது துணையுடன் மற்றைய திணைக்களத் தலைவர்களைப் பயமுறுத்தி இச்செயற்பாடுகளை அரங்கேற்றியுள்ளார் என விசாரணைக்குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இக்கூற்று, அமைச்சராகிய என்னையும் செயலாளரையும் இழிவுபடுத்தும் நோக்கிலானது என்பதையும் உண்மைக்குப் புறம்பானது என்பதையும் அழுத்திப் பதிவு செய்ய விரும்புகின்றேன். விவசாய அமைச்சின் செயலாளராக இருந்த யு.எல்.எம்.ஹால்டீன் அவர்களின் மறைவுக்குப் பின்னர் அமைச்சின் செயலாளர் பதவி ஏறத்தாழ நான்கு மாத காலம் நிரந்தர செயலாளர் இன்றி வெற்றிடமாகவே இருந்தது. மேலும் உரிய பதவியணிகளுக்குரிய ஆளணியினர் இல்லாத சந்தர்ப்பத்தில் அதற்கு அடுத்த தர நிலையில் உள்ள ஆளணியினர் அப்பதவிக்கு நியமிக்கப்படுவது நிர்வாக நடைமுறைகளில் ஒரு சாதாரண விடயமாகும். வடக்கு மாகாணசபையின் நியமனங்கள் உட்பட அரச நிறுவனங்களின் பல நியமனங்கள் இதற்குச் சான்றாக உள்ளன. மேலும் அப்போதும் வடக்கு மாகாணசபையில் நிர்வாக சேவையின் விசேட தர பதவிகளில் தரம் 1 ஐ சேர்ந்த அலுவலர்களும் கடமையாற்றிக் கொண்டிருந்தார்கள். இதனடிப்படையிலேயே, அப்போதைய கௌரவ ஆளுநராக இருந்த எச்.எம்.ஜி.என். பளிகக்கார அவர்களினால் திரு.ம. பற்றிக் டிறஞ்சன் எனது அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

ஏனைய செயலாளர்களுடன் ஒப்பிடும்போது அவர் நிர்வாக சேவையில் இளையவராக இருந்தபோதும், நிர்வாக ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவும், சுற்றுநிருபங்களுக்கு அமைவாகவும் பணிகளை முன்னெடுத்துச் செல்வதில் வினைத் திறன் [illegible] நிர்வாக நடைமுறைகளில் கண்டிப்பு [illegible] தெரியவில்லேனும் நிர்வாக விடயங்களில் தவறிழைத்துவிடக்கூடாது என்பதில் விழிப்பாக இருந்தார். இத்தகைய இயல்பு கொண்ட ஒருவரை, அவரது எதிர்கால வளர்ச்சியைப் பாதிக்கும் வகையில் அமைச்சருக்காக அதிகாரிகளை மிரட்டி முறைகேடுகளுக்குத் துணை போனார் என்று குறிப்பிட்டிருப்பதை விசாரணையாளர்களின் உள் நோக்கத்துடன்கூடிய பதிவாகவே நான் கருதுகின்றேன்.

### விசாரணைக்குழுவின் நம்பகமற்ற தன்மையும் பக்கச்சார்பும்

அறிக்கையைக் கண்ணுறும்போது விசாரணைக்குழுவின் நம்பகத் தன்மையிலும் நடுநிலைமைத் தன்மையிலும் எனக்குப் பலத்த சந்தேகம் ஏற்பட்டுள்ளது. விசாரணைக்குழுவில் இடம்பெற்றிருந்தவர்களின் ஒழுக்கவியல் சார்ந்தும், அரசியற் பின்புலம் சார்ந்தும் என்னால் கருத்துகளை முன்வைக்கமுடியுமெனினும், அவைபற்றி இங்கு குறிப்பிடுவ்து தேவையற்றதும் அநாகரிகமானதும் ஆகும். எனினும், நிர்வாக நடைமுறைகள் சார்ந்த விடயங்கள் குறித்து எனது பதிவு இங்கு அவசியமாகின்றது.

விசாரணைக்குழுவில் இடம்பெற்றிருந்த முன்னாள் நீதிபதிகளில் ஒருவரான திரு.என்.பரமராஜா அவர்கள் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் திரு.பிரேமதாஸ் கூட்டுறவுத் திணைக்களத்தால் பதவி நீக்கம் செய்யப்பட்டதற்கு எதிராக திரு.பிரேமதாஸ் சார்பாக நீதிமன்றத்தில் வழக்காடி வருகின்றார். அதேசமயம், அதே பிணக்கு முன்வைக்கப்பட்டுள்ள விசாரணைக்குழுவில் விசாரிக்கும் நீதவானாகவும் இடம்பெற்றிருக்கிறார். இது முரண்நகையல்லவா? இவர் எவ்வாறு பக்கச்சார்பற்ற ஒரு தீர்ப்பை வழங்குவார் என எதிர்பார்க்க முடியும்.

உதாரணமாக, நான் விசாரணைக்குழுவின் முன்னால் தோன்றி எனது தரப்பு நியாயங்களைத் தெரிவித்தபோது பதவி நீக்கப்பட்ட சமாசத் தலைவர் திரு.பிரேமதாஸ் அச்சந்தர்ப்பத்தில் தோன்றி விளக்கம் அளித்ததாக அறிக்கையில் (பக்கம் 50) குறிப்பிடப்பட்டுள்ளது. இது முற்றிலும் தவறான ஒரு தகவல். அவர் என் முன்னால் தோன்றியிருக்கவில்லை.

24.02.2017 அன்று விசாரணைக்குழுவுக்கு முன்னால் நான் தோன்றியபோது, எனக்கு அனுப்பப்பட்ட அழைப்புக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்த சாட்சியமளிக்கவுள்ள சாட்சிகளின் பட்டியலில் இடம்பெற்றிராத, கௌரவ வடமாகாணசபை உறுப்பினர் சி.தவராசா அவர்களும் அங்கு சாட்சியாக சமுகமளித்திருந்தார். இது தொடர்பாக,விசாரணைக்குழுவுக்கு நான் தெரிவித்திருந்தபோது குழுவின் தலைவர் அவ்வாறு அவர் பங்கேற்க முடியாது எனத் தெரிவித்தார். எனினும், திரு.எஸ். பரமராஜா அவர்கள் தன்னிடம் அனுமதி பெற்றுவிட்டே கௌரவ சி.தவராசா அவர்கள் கௌரவ ஜி.ரி.லிங்கநாதன் அவர்களுடன் சேர்ந்து சமுகமளித்திருக்கிறார் என்று குறிப்பிடார். கௌரவ சி.தவராசா அவர்களின் பங்கேற்பை நான் நிராரிக்கவில்லை. எனினும், இவர் சமுகமளிப்பார் என்பது எனக்கு அனுப்பப்பட்ட அழைப்புக் கடிதத்தின் சாட்சிகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தால் இவரின் தர்க்கரீதியான வாதங்களுக்கு அறிவியல் ரீதியான வாதங்களை முன்வைக்கவல்ல நீரியல் நிபுணர் ஒருவரை நானும் அழைத்துச் சென்றிருக்க முடியும். எனவே, இந்த நடவடிக்கையை நான் பக்கச்சார்பானதொன்றாகவே கருதுகின்றேன். விசாரணைக்குழுவில் இடம்பெற்றிருக்கும் இன்னுமொரு உறுப்பினரான திரு.செ.பத்மநாதன் அவர்கள் விவசாய அமைச்சின் செயலாளராகப் பதவி வகித்தவர். பின்னர், செயலாளர் பதவிக்கு திரு.யு.எல்.எம்.ஹால்டீன் நியமிக்கப்பட்டபோது, செயலாளர் பதவியில் இருந்து கீழிறங்கி அமைச்சின் உதவித் திட்டமிடல் பணிப்பாளராகப் பணியாற்றியவர். அமைச்சின் செயலாளராகவும் உதவித் திட்டமிடல் பணிப்பாளராகவும் பணியாற்றிய ஒருவர், அதே அமைச்சு சார்ந்த விடயங்களில் விசாரணைகளில் பங்கேற்பது இயற்கை நீதிக்கும் நிர்வாக நடைமுறைகளுக்கும் முரணானதாகும்.

### நீதியான தீர்ப்பின் அவசியம்

என்மீது சுமத்தப்பட்ட இலஞ்சம், நிதிமோசடி மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை என விசாரணைக்குழுவினர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர். எனினும், தங்களது விதப்புரையில் சந்தேகத்துக்கு அப்பாற்பட்ட விதத்தில் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டு என்னை அமைச்சுப் பொறுப்புகளில் இருந்து நீக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளனர். எவ்வித ஆதாரங்களும் இல்லாது நீதிக்குப் புறம்பாக இவர்கள் வழங்கிய பரிந்துரை ஊடகங்களில் பெருத்தூதப்பட்டு எனது கௌரவத்துக்குப் பாரிய சரிவை ஏற்படுத்தியுள்ளது. கௌரவ முதலமைச்சர் அவர்கள், ஒரு நீதியரசர் என்ற வகையில் எனக்குத் திட்டமிட்டு இழைக்கப்பட்ட இந்த மிகப்பெரும் அநீதிக்கு உரிய தீர்வைப் பெற்றுத் தருமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**பொ.ஐங்கரநேசன்**
அமைச்சர்,விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி,உணவுவழங்கல், நீர் வழங்கல், நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு, வடமாகாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை குறித்து

# குருகுலராசா தன்னிலை விளக்கம்

(தொடர்ச்சி...)

பெரிய கண்காட்சி ஒன்றிற்கான காட்சிப் பொருட்கள் செய்வதற்கு மட்டுமே எம்மால் ஒதுக்கப்பட்ட ரூபாய் 2 மில்லியன் போதாதென்பதே உண்மையாகும். ஏனெனில் எல்லா பாடசாலைகளும் தமது காட்சிப்படுத்தலை மேற்கொள்ள சந்தர்ப்பம் வழங்கி அதே நேரம் எல்லாப்பாட விடயங்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கி அவற்றை செயற்படுத்துவற்கு ஏற்பட்ட செலவை பாடசாலைகளுக்கு வழங்கி குறித்த நாளில் காட்சிப்படுத்திய பொருட்களை கண்காட்சி நடைபெறும் இடத்திற்கு கொண்டு செல்லுதல், அதற்கான மண்டபங்களை ஒழுங்குபடுத்தல், உணவு, மின்சார வசதிகள் வழங்கல், நிகழ்வு நிறைவெய்திய பின் குறித்த பொருட்களை மீளவும் கொண்டு செல்லல் என பல செயன்முறைகளுக்குட்பட்டதாகும்.

இதே போன்று சஞ்சிகை வெளியீடு செய்வதற்கு ஆய்வுக் கட்டுரைகள் பெறப்பட்டு அவை சரி பார்க்கப்பட்டு அச்சேற்றி வெளியிடுவதற்கு பலரின் பல நாட்கள் கடின உழைப்பும் தேவைப்பட்டது.

கலை நிகழ்வுகள் பாடசாலைகளில் பல நாட்கள் ஒத்திகை பார்க்கப்பட்டு பல ஆசிரியர்கள், மாணவர்கள், வாத்தியக் கலைஞர்கள் ஒன்று சேர்ந்து செயற்பட்டு இறுதி நிகழ்வை ஆசிரியர் மாநாட்டில் அரங்கேற்றியிருந்தனர். மண்டப ஒழுங்கு பேருரைகள் ஒழுங்குபடுத்தல் போன்றனவும் பல நாள் செயன்முறைகளின் ஊடாகவே ஒழுங்குபடுத்தப்பட்டது.

இச்செயற்பாட்டில் ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி, கல்வி சாரா அலுவலர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் என பல தரப்பட்டவர்களின் உழைப்பின் வெளிப்பாடே இரண்டு நாள் ஆசிரிய மாநாடாகும்.

இவ்வாறு பல நாட் செயன்முறையிலும் கடின உழைப்பிலும் நடைபெற்ற இந்நிகழ்வை இரண்டு நாட்களில் பெரும் தொகைபணம் செலவு செய்யப்பட்டு வீண்விரயமாக்கப்பட்டது என அறிக்கையிடுவது இம்மாநாட்டினை கொச்சைப்படுத்தும் ஒரு கருத்தாகவே கருத வேண்டியுள்ளது. இவ்விடயம் தொடர்பான எவ்விதமான கள ஆய்வினையும் விசாரணைக்குழு மேற்கொள்ளவில்லை. இந்நிகழ்வில் பங்குபற்றுநர்கள், ஒழுங்கமைப்பாளர்கள் ஆகியோரின் கருத்துக்களை கேட்டறியாமலும் கள ஆய்வினை மேற்கொள்ளாமலும் அறிக்கையிட்டிருப்பது அறிக்கையின் நம்பத்தகு தன்மையற்றது என்பதனையே காட்டுகிறது.

மொத்தமாக நோக்கின் 12 வலயங்களுக்கும் 23.5 மில்லியன் ரூபாவே செலவிடப்பட்டுள்ளது. ஆசிரியர்களின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு சராசரியாக ஒரு வலயத்திற்கு இரண்டு மில்லியன் ரூபாய் செலவில் தூர நோக்குடன் இச்செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு முடிவுறுத்தப்பட்டது மிகப்பெரிய சாதனை என்றே நான் கருதுகிறேன்.

மிகவும் சிக்கனமான முறையில் நிதி நடைமுறைகளை பின்பற்றி இதற்கான செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இத்தகைய நிகழ்வுகள் ஆசிரியர்கள், அதிபர்கள் மத்தியில் தொடர்ச்சியாக மாற்றமுறும் கல்விப்புலம் சார் போக்குகளுக்கு ஏற்ப தொழில்சார் அபிவிருத்தி செய்முறைகளை முன்னேற்றும் நோக்குடன் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்த மாநாட்டில் பின்வரும் விடயங்கள் கொண்டிருக்கப்பட வேண்டும் என நிதி ஆணைக்குழு வலியுறுத்தியிருந்தது.

- ஆசிரியர்கள் மத்தியில் தொடர்ச்சியான கற்றல் செயன்முறைகளை முன்னேற்றுதல்
- மாறுகின்ற கல்விப்புலம்சார் போக்குகளுக்கு ஏற்றவாறு தம்மை தயார்படுத்தி சீராக்கிக் கொள்வதற்கு எல்லோருக்கும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கல்
- ஆசிரியர்கள் தமது நோக்கங்கள் அறிவு மற்றும் புலமைகளை ஒருவரோடொருவர் பகிர்ந்து கொள்ள சந்தர்ப்பத்தை வழங்கல்
- ஆசிரியர்களை கல்விப்புலம் சார்ந்த ஆய்வுக்கற்கைகளில் ஊக்குவித்தல்
- கற்றல் கற்பித்தலில் உள்ள சவால்களை வெல்வதற்கு அவர்களை தொழில் தகைமைக்கு வலுவூட்டல்

மேலும் இதனோடு இணைந்த பல்வேறு விடயங்களையும் நிதி ஆணைக்குழு பரிந்துரை செய்திருக்கிறது. இது ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட வழிகாட்டியில் உள்ளது. இதனை நிவர்த்தி செய்யும் வகையில் மாநாடு வடிவமைக்கப்பட்டது.

மேலும் இவ்வழிகாட்டியில் இம்மாநாடு மாகாண மட்டத்திலும் கல்வி நிர்வாக மட்டத்திலும் நடத்தப்பட வேண்டும் எனவும், மாகாணக்கல்விப் பணிப்பாளர் இணைப்பாளராக செயற்பட வேண்டும், எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு வருடமும் இத்தகைய ஒரு மாநாடு நடத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பாடசாலை விடுமுறை நாளில் இரண்டு நாட்கள் தொடர்ச்சியாக நடத்தப்படவேண்டும் எனவும் ஒரு ஆசிரியர் மாநாட்டில் ஆகக்கூடியது ஐந்நூறு பேர் வரை பங்குபற்ற முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.



இவ்விதியின் பிரகாரம் மாநாடு நடத்தப்பட்டிருந்தால் பல வலயங்களில் ஒரு மாநாடு என அல்லாமல் பல மாநாடுகள் நடத்த வேண்டியிருந்திருக்கும். ஆனால் நிதிப்பற்றாக்குறை காரணமாகவும் கல்விப்புலத்தில் பல்வேறு நிதித்தேவைகள் இருப்பதனாலும் அவற்றிற்கு கூடுதல் நிதியினை ஒதுக்க வேண்டியிருந்ததனாலும் மிகவும் சிக்கனமான முறையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இச்செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டது. நிதி ஆணைக்குழுவின் வழிகாட்டியின் பிரகாரம் ஒவ்வொரு வலயங்களிலும் நடத்தியிருக்க வேண்டிய, நடத்தப்பட்ட ஆசிரியர் மாநாட்டின் விபரம் பின்வருமாறு.

நிதி ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் வட

| வலயம் | வலயங்களில் ஆசிரியர்களின் எண்ணிக்கை | சுற்றறிக்கையின் படி ஆகக் கூடியதாக மாநாட்டில் பங்குபற்றக்கூடிய ஆசிரியர்களின் எண்ணிக்கை | நடாத்தப்பட்டிருக்க வேண்டிய ஆசிரிய மாநாட்டின் எண்ணிக்கை | நடத்தப்பட்ட ஆசிரிய மாநாட்டின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 2920 | 500 | 6 | 1 |
| வலிகாமம் | 2240 | 500 | 5 | 1 |
| தென்மராட்சி | 887 | 500 | 2 | 1 |
| வடமராட்சி | 1461 | 500 | 3 | 1 |
| தீவகம் | 718 | 500 | 2 | 1 |
| கிளிநொச்சி | 1818 | 500 | 4 | 1 |
| முல்லைத்தீவு | 1006 | 500 | 2 | 1 |
| துணுக்காய் | 474 | 500 | 1 | 1 |
| வவுனியா வடக்கு | 679 | 500 | 2 | 1 |
| வவுனியா தெற்கு | 1544 | 500 | 3 | 1 |
| மன்னார் | 1123 | 500 | 3 | 1 |
| மடு | 454 | 500 | 1 | 1 |
| மொத்தம் | | | 34 | 12 |

மாகாணத்தில் மொத்தமாக 34 ஆசிரிய மாநாடு நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ஏனைய தேவைகளின் நிதி ஒதுக்கீட்டு முக்கியத்துவம் கருதி 12 ஆசிரிய மாநாடுகள் மட்டுமே எம்மால் நடத்தப்பட்டது.

உண்மையில் சுற்றறிக்கையின் பிரகாரம் எம்மால் மாநாடு நடத்தப்பட்டிருந்தால் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட 80 மில்லியன் ரூபாவும் போதாமல் இருந்திருக்கும். ஆனால் 23.5 மில்லியன் ரூபாய் நிதியினை மிகவும் சிக்கனமானதும் இறுக்கமானதுமான முறையில் செலவு செய்து வெற்றிகரமாக இவ் ஆசிரியர் மாநாட்டை 12 வலயங்களில் 12 நிகழ்வுகளுடன் நடத்தி முடிந்திருந்தோம்.

முப்பது வருட காலமாக போரால் பாதிக்கப்பட்டு அடிமட்டத்திலும் பார்க்க கீழ் நிலைக்கு வீழ்த்தப்பட்ட ஒரு பிரதேசத்தின் வளர்ச்சிக்கு பாரிய நிதி தேவைப்படுகிறது. அந்த நியாயாதிக்க அடிப்படையில் மாநாட்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் மிகுதியை அத்தியாவசிய தேவையான தளபாடம் மற்றும் கட்டுமானங்களுக்கு பயன்படுத்தியிருந்தோம்.

இதிலிருந்து ஆசிரிய மாநாட்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதி அறிக்கையில் குறிப்பிட்டவாறு சரியாக திட்டமிட்டு பயன்படுத்தப்படவில்லை வீண்விரயம் செய்யப்பட்டது என்ற குற்றச்சாட்டு ஏற்க முடியாத ஒன்று என்பதுடன், சரியான முறையில் ஆய்வினை மேற்கொள்ளாத ஒரு அறிக்கையாகவே நாம் கருதுகிறோம். இவ்விடயங்கள் அடங்கிய கோவையை விசாரணையின் போது சமர்ப்பித்திருந்தும் இவ்விடயங்களை கவனத்தில் எடுக்காது மீள அளித்திருந்தமை அறிக்கை சரியான ஆய்வுக்குட்படுத்தி வழங்கப்படவில்லை என்பதையே எடுத்துக்காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் இவ் ஆசிரிய மாநாடு தனியே வடமாகாணத்தில் நடத்தப்பட்ட ஒன்றல்ல. இலங்கையின் ஒன்பது மாகாணங்களிலும் நடத்தப்பட்ட ஒரு நிகழ்வாகும். வடமாகாணத்தில் நடத்தப்பட்டதை மட்டும் வீண் விரயமாக்கப்பட்டதாகக் கூறுவது ஒட்டுமொத்தமாக இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மொத்த ஆசிரிய மாநாடுகளையும் வீண் விரயம் என்று கூறுவதாக அமைவதுடன் நிதி ஆணைக்குழு, மத்திய கல்வி அமைச்சு ஆகியவற்றின் மாநாடு தொடர்பான தீர்மானம் தவறென்ற கருத்தினையும் வலியுறுத்துவதாகவே அமையும்.

ஆசிரியர்கள் எமது வருங்கால சமுதாயத்திற்கு அத்திபாரமாக இருப்பவர்கள். பாடசாலை நேரத்தில் கற்பிப்பதுடன் மட்டுமல்லாது பாடசாலை நேரத்தின் பின்னரும் விளையாட்டுத்துறை,இணைபாடவிதானம், மெல்லக்கற்போர் கற்பித்தல் மேலதிக வகுப்புக்கள் என பல்வேறு நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர். எமது பிள்ளைகளை கண்காணித்து கல்வி புகட்டுபவர்கள். இப்பணியுடன் சேர்த்து கற்றல் நடவடிக்கைகளை ஆவணப்படுத்த வேண்டியுள்ளது. இதனால் தற்போது ஆசிரியப் பணி விரும்பப்படாத ஒரு தொழிலாக கருதப்பட்டு பல பட்டதாரிகள் ஆசிரியத் தொழிலுக்கு வரத் தயங்குகின்றனர். முக்கியமாக கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களை கற்ற பட்டதாரிகள் ஆசிரிய தொழிலிலுள்ள நெருக்கடி காரணமாக வேறு தொழிலை நாடிச் செல்கின்றனர். இதனைப் போக்கி ஆசிரியர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் தான் இவ் ஆசிரிய மாநாடு மத்திய அரசின் கொள்கையாக அறிமுகப்படுத்தப்பட்டது.

வருடத்தில் ஒருமுறை ஆசிரியர்கள் ஒன்றுகூடி தமது அனுபவங்களை பகிர்ந்து கொள்ள வாய்ப்பளிப்பதாக இது அமையும். ஆசிரியர் மாநாட்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகையில் குறைக்கப்பட்ட நிதியானது பாடசாலைத் தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆசிரியர் கதிரை, மேசைகள் மற்றும் பாடசாலை மாணவர் கதிரை, மேசைகள் என்பன பற்றாக்குறையாக காணப்பட்டதால் இந் நிதியினைப் பயன்படுத்தி பின்வரும் தளபாடங்கள்,பாடசாலைகள், ஆசிரியவள நிலையம், முறைசாரா கல்விப் பிரிவிற்கான பயிற்சி உபகரணங்கள் என ரூபாய். 24,417,760 பெறுமதியான பொருட்கள் பாடசாலை அலுவலகங்களுக்குமாக விநியோகம் செய்யப்பட்டிருந்தன. விபரம் வருமாறு.

| No | School | Activity | Expenditure |
|---|---|---|---|
| 1 | Teacher centre, Jaffna | Computers 04 Nos | 405,960.00 |
| | | Photocopier 01 | 415,000.00 |
| | | Multimedia Projector 01 | 59,000.00 |
| | | Laptop Computer 01 | 88,900.00 |
| | | Camera | 30,500.00 |
| | | | 999,360.00 |
| 2 | Teacher centre, Vadamaradchi | Duplo machine | 250,000.00 |
| 3 | Teacher centre,Thenmaradchi | Desktop Computer 01 | 101,490.00 |
| | | Laptop Computer 01 | 89,500.00 |
| | | Photocopier 02 | 830,000.00 |
| | | Multimedia Projector 01 | 59,000.00 |
| | | Scanner | 9,900.00 |
| | | Desktop Computer 02 | 199,800.00 |
| | | Laptop Computer 01 | 88,900.00 |
| | | Ceiling Fan -10 | 44,191.51 |
| | | Water Dispenser-01 | 6,500.00 |
| | | Laminating Machine | 10,000.00 |
| | | | **1,439,281.51** |
| 4 | Teacher Centre-Mannar | Desktop Computer 05 | 507,450.00 |
| | | Desktop Computer 04 | 399,600.00 |
| | | Laptop Computer 01 | 88,900.00 |
| | | | |

(தொடரும்...)

# கொங்கோவில் உள்நாட்டுக் கலவரம் எட்டு மாதங்களில் 3,300 பேர் பலி

(கின்ஷாசா)

ஆபிரிக்க நாடான கொங்கோவில் நடைபெற்று வரும் உள்நாட்டு கலவரத்தில் கடந்த 8 மாதங்களில் மட்டும் 3 300 பேர் பலியானதாக அதிர்ச்சிகர தகவல் வெளியாகியுள்ளது.


மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோ குடியரசில், கஸாய் பிராந்தியத்தில் அரசுப்படையினருக்கும், பழங்குடியின கிளர்ச்சியாளர் படைக்கும் இடையே தொடர்ந்து சண்டை நடந்து வருகிறது. கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதல் இச் சண்டையில் சிக்கி 3300-க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளதாக அங்குள்ள கத்தோலிக்க தேவாலயம் தெரிவித்துள்ளது.

இச் சண்டையில் கஸாய் பிராந்தியத்தில் உள்ள சுமார் 20 கிராமங்கள் முழுமையாக அழிக்கப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த பகுதியில் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டு மொத்தமாக ஒரே குழிகளில் புதைக்கப்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளதாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக ஐ.நா.மனித உரிமைகள் ஆணையம் விரைவில் வாக்கெடுப்பு நடத்தவுள்ளது. (3-8)

# பூமியைப் போலுள்ள 10 கிரகங்கள் கண்டுபிடிப்பு

## நாசா விஞ்ஞானி தகவல்



(வோஷிங்டன்)

10 கிரகங்கள் பூமியைப் போன்று வாழ்வதற்கான சூழலை கொண்டிருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது குறித்த தகவல்களை 'நாசா' விஞ்ஞானி மரியோ பெரஸ் பகிர்ந்துகொண்டார். அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி அமைப்பான 'நாசா' வேற்று கிரகங்கள்பற்றி ஆராய்வதற்கு விண்வெளியில் கெப்லர் விண்வெளி தொலைநோக்கியை நிறுவி, ஆராய்ச்சி செய்து வந்தது.

இதன் முடிவுகள் நேற்று முன்தினம் வெளியிடப் பட்டிருந்தது.

அதன் முக்கிய அம்சங்களாவன, கெப்லர் விண்வெளி தொலைநோக்கி மூலம் சூரிய மண்டலத்துக்கு வெளியே மேலும் 219 கிரகங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த கிரகங்களுடன் சேர்த்து, இப்படி கண்டுபிடிக்கப்பட்டுள்ள மொத்த கிரகங்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 34 ஆகும்.

இவற்றில் 2,300 மட்டும் கிரகங்கள் என்று உறுதி செய்யப்பட்டுள்ளன. எஞ்சியவை, கிரகங்கள்போன்றவை.

இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள 219 கிரகங்களில் 10 கிரகங்கள் மட்டும் பூமியைப் போன்று வாழ்வதற்கான சூழலை கொண்டிருக்கின்றன. அவற்றில் ஒரு கிரகம், பூமிக்கு வெகு அருகில் உள்ளது.

இந்த 10 கிரகங்களின் மேற்பரப்பில் தண்ணீர், திரவ நிலையில் இருப்பதற்கான வாய்ப்புகள் இருப்பது தெரியவந்துள்ளது.

வேற்றுக் கிரகங்கள் பற்றிய தகவல்களை விஞ்ஞானி மரியோ பெரஸ் வெளியிட்டாலும், பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருந்த வேற்று கிரகவாசிகள் குறித்து மூச்சு விடவில்லை. எனவே வேற்று மனிதர்கள் பற்றிய எதிர்பார்ப்பு இன்னும் புதிராகவே உள்ளது. (3-8)

# மோடி, ஆதித்யநாத் தலைமையில் பிரமாண்டமான யோகா நிகழ்ச்சி

## 51 ஆயிரம் பேர் பங்கேற்று சாதனை



(லக்னோ)

உத்தரபிரதேச மாநிலம் லக்னோ நகரில் சர்வதேச யோகாதினத்தை முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடி, முதலமைச்சர் யோகி ஆதித்ய நாத் தலைமையில் நடைபெற்ற பிரமாண்ட யோகா நிகழ்ச்சியில் 51 ஆயிரம் பேர் பங்கேற்று சாதனை படைத்தனர்.

உடல் நலத்துக்கும், மன நலத்துக்கும் உதவுகிற யோகா கலை உலகமெங்கும் பரவும் வகையில் ஆண்டுதோறும் ஜூன் மாதம் 21 ஆம் திகதி சர்வதேச யோகா தினம் கடைப்பிடிக்கப்படும் என ஐ.நா. சபை அறிவித்தது.

2014ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதி வெளியிடப்பட்ட அந்த அறிவிப்பைத் தொடர்ந்து, 2015 ஆம் ஆண்டு முதல் யோகா தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. அந்த வகையில், மூன்றாவது சர்வதேச யோகா தினம் நேற்று புதன்கிழமை காலை 6.30 மணிக்கு அம்பேத்கர் மைதானத்தில் ஆரம்பமாகியது.

அதேபோல், நாடு முழுவதும் பல்வேறு நகரங்களிலும் யோகா தின நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தன. தலைநகர் டில்லியில் நடைபெற்ற யோகா நிகழ்ச்சிகளில் முதல மைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், பா.ஜ.கவின் ஜனாதிபதி வேட்பாளரான ராம்நாத் கோவிந்த் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் இமாச்சல பிரதேசத்தில் உள்ள சுஜான்பூர் திராவிலும், வீதிப் போக்குவரத்து அமைச்சர் நிதின் கட்காரி மராட்டிய மாநிலம் நாக்பூரிலும், மனித வள மேம்பாட்டு அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் மணிப்பூரி லும், ரயில்வே அமைச்சர் சுரேஷ் பிரபு மும்பையிலும் நடந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்று யோகா பயிற்சி செய் தனர்.

வங்களா விரிகுடாக் கடலிலுள்ள ஐ.என்.எஸ். ஜலஷ்வா மற்றும் ஐ.என்.எஸ். கிர்ச் ஆகிய கப்பல்களிலும் யோகாப் பயிற்சி நடைபெற்றது.

லக்னோ நகரில் நடைபெற்ற யோகா நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பிரதமர் மோடி அங்கு உரையாற்றும் போது,

யோகா செய்வது உங்கள் உடல் நிலைக்கு எந்த செலவும் இல்லாமல் காப்பீடு செய்வது போல் ஆகும். 24 மணி நேரமும் யோகா செய்ய வேண்டிய அவசியம்இல்லை. 50 முதல் 60 நிமிடங்கள் செய்வதே பலன் அளிக்கும். ஏனெனில் உடல் மனது, அறிவுக்கு யோகா நல்லிணக்கத்தை அளிக்கிறது. உணவுக்கு சுவை அளிப்பது மட்டும் அல்லாமல் உடல் நலனுக்கு பயன் அளிக்கவும் உப்பு எவ்வளவு முக்கியமோ அதுபோல யோகாவும் வாழ்க்கைக்கு அவசியமான ஒன்றாகும்" என்று அவர் தெரிவித்தார். (3-8)

# பேரத்தில் ஈடுபட்ட எம்.எல்.ஏக்கள் மீது நடவடிக்கை – ஓ.பன்னீர்செல்வம்

(தஞ்சாவூர்)

பேரத்தில் ஈடுபட்ட எம்.எல்.ஏ.க்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் வலியுறுத்தி உள்ளார். தஞ்சை மாவட்டம் பாபநாசத்தில் நடைபெற்ற திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்க வருகை தந்த முன்னாள் முதலமைச் சர் ஓ.பன்னீர்செல்வம் நிருபர்களுக்கு பேட்டி அளிக்கும் போது,

குதிரை பேரத்தில் ஈடுபட்ட எம்.எல்.ஏ.க்கள் மீது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் கட்சி பணியில் ஈடுபட மாட்டேன், ஈடுபடுவேன் என டிடிவி.தினகரன் தனது கருத்தை மாறி மாறி கூறி வருகிறார்.

தற்போது சசிகலாவை தினகரன் சந்தித்துள்ளார். இதற்கு அவர் தான் பதில் கூறவேண்டும். குறுவையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணத்தை தாராளமாக வழங்க வேண்டும் என்று தெரிவித்தார். (3-8)

# ஐ.எஸ்.தீவிரவாதிகளின் பிணைக்கைதிகளாக பிலிப்பைன்ஸ் பாடசாலை மாணவர்கள்



(மிடானவ்)

தெற்கு பிலிப்பைன்சில் பாடசாலை ஒன்றில் புகுந்த ஐ.எஸ். ஆதரவு தீவிரவாதிகள், பாடசாலை மாணவர்களை சிறை பிடித்துள்ளதால் அங்கு பதற்றம் நிலவுகிறது. தனி நாடுகோரி கொடூர செயல்களில் ஈடுபட்டு வரும் ஐ.எஸ்.அமைப்பினர் கடந்த 23 ஆம் திகதி முதல் தெற்கு பிலிப்பைன்ஸிலும் இரா ணுவத்துடன் சண்டையிட்டு வருகின்றனர். ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கும் இராணு வத்துக்குமான சண்டை உச்சக் கட்டத்தை எட்டியுள்ள நிலையில நேற்று பிலிப்பைன்ஸ் நாட்டின் பிக்காவயன் என்ற பகுதியில் செயற்பட்டு வரும் பாடசாலை ஒன்றில், ஆயுதம் ஏந்திய சுமார் 300 தீவிரவாதிகள் அதிகாலை புகுந்து அங்கிருந்த மாணவர்களை சிறை பிடித்துள்ளனர். அவர்கள் ஐ.எஸ். ஆதரவு பெற்ற பி.ஐ.எஃப்.எஃப். தீவிரவாதிகள் என பிலிப்பைன்ஸ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தீவிரவாதிகள் பாடசாலையில் புகுந்த தகவலை அறிந்த இராணுவத்தினர், உடனடியாக அங்கு வந்த நிலையில், இருதரப்புக்கும் இடையில் சண்டை நடைபெற்று வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும், தீவிரவாதிகளிடம் பிணைக் கைதிகளாக சிக்கியுள்ளவர்களை மீட்கும் முயற்சிகளையும் ராணுவம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் எத்தனை மாணவர்கள் தீவிரவாதிகளால் சிறை வைக்கப்பட்டுள்ளார்கள் என்ற விபரம் வெளியாகவில்லை. மேலும், பிக்காவயன் நகரின் மேயர் மாணவ, மாணவிகளை தீவிரவாதிகளிடமிருந்து உயிருடன் மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸா தெரிவித்துள்ளனர். (3-8)

# விமானியின் சாமர்த்தியத்தால் 150 பயணிகள் உயிர் தப்பினர்

(ஆலந்தூர்)

சென்னை விமான நிலையத்தில் நேற்று அதிகாலை ஜார்ஜா சென்ற விமானம் இயந்திரக் கோளாறு காரணமாக தரையிறக்கப்பட்டதை அடுத்து 150 பயணிகள் உயிர் தப்பியுள்ளனர்.

சென்னையில் இருந்து நேற்றுக் காலை 5 மணி அளவில் ஜார்ஜா விமானம் 150 பயணிகள் மற்றும் 5 ஊழியர்களுடன் புறப்பட்டது.

நடுவானில் பறந்து கொண்டிருந்த போது இயந்திரத்தில், கோளாறு இருப்பது விமானியால் கண்டு பிடிக்கப்பட்டது. உடனடியாக சாதுர்யமாக செயற்பட்டு விமானி கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் அளித்தார்.

இதையடுத்து அவசரமாக விமானம் தரையிறங்க அனுமதி அளிக்கப்பட்டது. சுமார் 6.45 மணிக்கு விமானம் தரையிறங்கப்பட்டது. 150 பயணிகள் மற்றும் 5 ஊழியர்களும் பாதுகாப்பாக தரையிறங்கினர். (3-8)

# தொடர்கதையாகும் பங்களாதேஷின் சோகம் மின்னல் தாக்கியதில் 48 மணிநேரத்தில் 22 பேர் பலி

(டாக்கா)

பங்களாதேஷத்தில் 18, 19 ஆகிய இரு திகதிகளில் மின்னல் தாக்கியதில் 22 பேர் உடல் கருகி உயிரிழந்தனர் என்று பங்காளதேச அரசு நேற்று முன்தினம் அறிவித்துள்ளது. பங்களாதேஷத்தில் ஆண்டுதோறும் மின்னலுக்கு நூற்றுக்கணக்கானோர் பலியாவது தொடர்கதையாகி ஆகிவருகிறது. கடந்த ஆண்டு அங்கு மின்னலுக்கு 200 பேர் பலியாகினர். குறிப்பாக கடந்த ஆண்டு மே மாதம் ஒரே நாளில் மின்னலுக்கு 82 பேர் பலியாகினர். ஆனால் பலி இன்னும் அதிகம், இது குறித்த தகவல்கள் முறையாக பதிவு செய்யப்படவில்லை என்று அறிவிக்கப்படுகின்றது.

இப்போது பருவ நிலை மாற்றம், இந்த மின்னல் தாக்குதலை மேலும் அதிகரிக்கச் செய்து வருகிறது. காடுகளை அழித்ததும், பனைமரம் போன்ற உயரமான மரங்களை வெட்டியதும் மின்னல் தாக்குதலுக்கு மேலும் காரணங்களாக சொல்லப்படுகின்றன.

இந்நிலையில் கடந்த 18, 19 ஆகிய இரு திகதிகளில், 48 மணி நேரத்தில் மின்னல் தாக்கியதில் 22 பேர் உடல் கருகி உயிரிழந்தனர் என்று பங்களாதேஷ அரசு நேற்று முன்தினம் அறிவித்தது.

ஒரு தம்பதியர் தங்களுடைய மகளுடன் வயலில் வேலை செய்தபோது மின்னல் தாக்கி உயிரிழந்திருப்பது பெருத்த சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த வாரம் பங்களாதேஷத்தில் ஏற்பட்ட நிலச்சரிவுகளில் சிக்கி 160-க்கு மேற்பட்டோர் பலியான நிலையில், இப்போது மின்னல் தாக்கி 22 பேர் பலியாகி இருப்பது மக்கள் மத்தியில் மிகுந்த சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் நேற்று ஆளுநர் அலுவலகம் முன் கவனயீர்ப்பு




வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் தமக்கான நிரந்த நியமனத்தை வழங்குமாறு கோரி நேற்றைய தினம் வடமாகாண ஆளுநர் அலுவலக முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த விடயம் தொடர்பில் அவர்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் கடந்த 2011 ஆம் ஆண்டில் இருந்து பகுதி நேர ஆங்கில பாட ஆசிரியர்களாக 56 பேர் கடமையாற்றி வருகிறோம். ஒரு நாளைக்கு 150 ரூபாய் வீதம் 3 ஆயிரம் ரூபாய் சம்பளத்துக்கு தான் நாம் கடமையாற்றுகிறோம். ஏனைய ஆசிரியருக்குரிய அனைத்து செயற்பாடுகளையும் பாடசாலைகளில் மேற்கொண்டு வருகிறோம்.

நாம் இச் சேவைக்கு பத்திரிகை வாயிலாக விண்ணப்பம் கோரப்பட்ட எழுத்துப் பரீட்சை மூலமே ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு நேர்முகத்தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்டோம். ஆனால் தொண்டர் ஆசிரியர்களையும் ஒப்பந்த ஆசிரியர்களையும் நிரந்தரமாக்குவதற்கு எடுத்த முயற்சிகளை எமக்கான நிரந்தர நியமனத்துக்காக யாரும் எடுக்கவில்லை.

எமது எதிர்காலம் கேள்விக்குறியாய் உள்ளது. இத்தனை வருடங்களாக நாம் ஆற்றிய சேவைக்கு என்ன பலன் தரப்போகிறார்கள்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுடனும் கலந்துரையாடி இருந்தும் எந்தவிதப் பதிலும் எமக்குவழங்கப்பட வில்லை.

குறித்த விடயம் தொடர்பாக வடமாகாண ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு வரும் வகையில் இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தினை மேற்கொண்டிருந்தோம். எம்மை அழைத்து ஆளுநர் பேசியிருந்தார்.

எமது நிலைப்பாடுகள் தொடர்பாக தனக்கு எந்த விடயமும் தெரியாது எனவும் அனைத்து விபரங்களை யும் செயலாளரிடம்சமர்ப்பிக்குமாறு அதன் பின்னர் உரிய நடவடிக்கைகளை தான் எடுப்பதாக உறுதியளித்துள்ளார். என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-9)

# கொஸ்கமவில் பாரிய தீ பரவல்





கொஸ்கம - கனம்பெல்ல சந்தியில் உள்ள இரு வர்த்தக நிலையங்களில் நேற்று முன்தினம் இரவு பாரிய தீ பரவல் சம்பவம் ஒன்று பதிவானது. கொழும்பு - அவிசாவளை ஹை லெவல் வீதியில் உள்ள கட்டடப் பொருட்களை விற்பனை செய்யும் ஹார்ட்வெயார் ஒன்றும் ஹாஸ் சிலிண்டர் விற்பனை நிலையம் ஒன்றுமே இவ்வாறு தீ அனர்த்தத்துக்கு உள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் பரவிய மேற்படி தீயினால் பிரதேசத்தில் பதற்றநிலை தோன்றியதுடன், கனம் பெல்ல சந்தி ஊடான போக்குவரத்தும் பொலிஸாரால் தடை செய்யப்பட்டு மாற்று வீதிகள் ஊடாக வாகனங்கள் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டன.

இந் நிலையில் தீ பரவலை அடுத்து அவிசாவளை நகர சபையின் தீயணைப்பு வண்டிகளின் உதவியுடன் தீயணைப்புப் படையினரும், சாலாவ இராணுவ முகாமின் வீரர்களும் பொலிஸாரும் இணைந்து தீயைக் கட்டுப்படுத்த தொடர்ச்சியாக போராடினர். சுமார் நான்கு மணி நேரத்துக்கும் அதிகமாக இவர்கள் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பாரிய முயற்சிகளை முன்னெடுத்தனர். (இ-7)

# இனவாதிகளுக்கு எதிராக சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டும்- நஸீர்

(ஏறாவூர்)

மதஸ்தலங்கள், பெண்கள், சிறுவர்கள் மீது தாக்குதல் நடத்துவோர் மீதும், இனவாதச் செயற்பாடுகளை முன்னெடுப்போர் மீதும் சட்டம் கடுமையாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டில் தோன்றியுள்ள வெறுப்புணர்வு செயற்பாடுகள் தொடர்பில் நேற்று புதன்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"உலகில் இனவாதத்தை தோற்கடித்த நாடு என்ற பெருமையை இலங்கை பெற வேண்டும்.

அதற்கு அனைவரும், குறிப்பாக சிறுபான்மையினரான தமிழர்களும், முஸ்லிம்களும் அதிக சிரத்தையுடன் செயற்பட வேண்டும்.

பல்லின, சமூக, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை கொண்ட இலங்கையின் அழகை இரசிக்க தெரியாதவர்களும் நாட்டின் மனித மற்றும் இயற்கை வளங்களை பயன்படுத்தி நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல தகுதியற்றவர்களுமே நாட்டை குழப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த ஆரோக்கியமற்ற நிலைமையை மாற்ற எதிர்கால இளைஞர் சமூகம் ஒன்றிணைய வேண்டும். குறிப்பாக சிறுபான்மை இனங்களான தமிழர்களும், முஸ்லிம்களும், மலையக மக்களும் ஒன்றிணைந்து சிறந்த முன்மாதிரியாகத் திகழ வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1109

**கவிஸ்னா**




**முகுந்தன்**




**சுதா**




**குவேனி**




**தயாளன்**




**சர்மி சர்மி**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தின் நீர்வள மேம்பாடும் யாழ். பல்கலையில் நீரியல் துறை அமைய வேண்டிய தேவையும்



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

1996இல் இருந்து வடக்கு மாகாணத்தில் பெரும் செலவில் சர்வதேச நிதி நிறுவனங்களாலும் இலங்கை அரசாங்கத்தாலும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களாலும் நீரியியல் சார்பான பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதற்காக பெருமளவு நிதி செலவிடப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்தில் பின்வரும் திட்டங்கள் பல பிரிவுகளாலும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. எரிக்கலன் சண்முக நாதன் அறிக்கை, கிராப்ற் பியூரோ அறிக்கை, நியாப் திட்டம் ஆகியவற்றைத் தழு வியன.




1. நியாப் திட்டம் – I
2. நியாப் திட்டம் – II
3. வழுக்கையாறு அபிவிருத்தித் திட்டம்
4. கைவிடப்பட் டிருந்த குடிநீர் திட்டங்களை மீள செயற்பட வைத்தல்.
5. பெரிய யாழ்ப்பாண நகரில் நீர் மேம்பாட்டுத் திட்டம்.
6. வடமராட்சி கடல்நீர் ஏரித் திட்டம் –தொண்டைமானாற்றில் கட்டுப்பாட்டுகதவுகள் அமைத்தல்.
7. யாழ்ப்பாணக் கடல்நீர் ஏரித் திட்டம் – நாவற்குழியில் கட்டுப்பாட்டு கதவுகள் அமைத்தல்.
8. யாழ்ப்பாண நகரப்பகுதி தரைகீழ் நீர் மேம்பாட்டுத் திட்டம்.
9. யாழ்ப்பாண மாவட்ட சிறு குளங்கள் மேம்பாட்டுத் திட்டம்
10. கமநல சேவைத் திணைக்களத்தின் மூலம் முன்னெடுக்கப்பட்ட சிறு குளங்கள் மேம்பாட்டுத் திட்டங்கள்
11. வடக்கின் வசந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பெரிய குளங்கள் அமைப்பும் புனருத்தாரணமும்.

இந்தத் திட்டங்கள் மூலம் முக்கியமாக இரண்டு முக்கிய இலக்குகளை அடையலாம் என எதிர்பார்க்கப்பட்டன.

1. குளங்களில் நீர் கொள்ளளவை அதிகரித்தல் (Increasing Holding Capacity))
2. நீரின் தரத்தை உயர்த்தல் (Improvement of Quality of Water)

எல்லாத் திட்டங்களையும் ஆராய்ந்த பொழுது பொதுவில் முதலாவது இலக்கை எந்தவொரு இடத்திலும் முழுமை யாக அடையவில்லை எனத் தெரிகின்றது. குளங்கள் புனரமைப்புச் செய்த பொழுது மக்களால் பிடித்த குளக் காணிகளை மீட்பதில் நடவடிக்கை எடுக்கவில்லை. மேலும் இக் காணிகளைத் தவிர்த்து அணை அமைக்கப்பட்டதால் குளப்பகுதிகள் சிறிதாகி யுள்ளன. மேலும் குளங்கள் தூர்வாரப்படவில்லை, ஆழப்படுத்தப் படவும் இல்லை, துப்புரவு செய்யப்படவும் இல்லை, இச்சூழ்நிலைகளில் நீர் கொள்ளளவு அதிகரிக்கவில்லை.

நீர்த் தேக்கங்கள், குளங்கள் மக்களின் பாவனைக்கு பாதுகாப்பானதாக இல்லை, குளத்தில் அங்கும் இங்குமாக மண் வெட்டி எடுக்கப்பட்டு இருப்பதும், கீழ் நிலம் மட்டப்படுத்தப்படாமல் இருப்பதால் பலர் ஆழம் தெரியாமல் இறங்கி மரணத்தை தழுவியுள்ளனர்.

உவர் நீர் தடுப்பணைகளின் பலன் அறிய சிறிது காலம் எடுக்கலாம். பல உவர் நீர் தடுப்பணைகள் 1950,1960களில் முதலில் கட்டப்பட்டவை. இவ்வணைகளே அண்மைக் காலங்களில் மீள புனருத்தாரணம் செய்யப்பட்டவை. பல இடங்களில் வேலைகள் தரக் குறைவானவை எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளன.

திருத்தப்பட்ட குளங்களின் நீரின் தரமோ அல்லது சூழலோ மேம்படவில்லை. நீரின் தரமும் உயர்ந்ததாகவோ, புனிதமாக மாறியதாகவும் இல்லை. யாழ்ப்பாண நகரிலுள்ள ஆரியகுளம், பிராமணக்குளம், புல்லுக்குளம் ஆகியவற்றின் இன்றைய நிலையைப் போலவே பல குள ங்களின் நிலைமையும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நீர் மேம்பாட்டு திட்டங்கள் போல் அல்லாது கிளிநொச்சி, மன்னார், வவு னியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் பெரிய நீர்ப்பாசன குளங்கள் புனருத்தாரணம் செய்யப்பட்டன. இரணைமடுக்குளம், கட்டுக் கரைக்குளம், வவுனிக்குளம் போன்றன இக் குளங்களின் புனருத்தாரணத்தால் விவசாய உற் பத்தி பெருகியது. பெருநிலப் பிர தேச மக்களின் வாழ்வாதாரம் மேம்பட்டது. பெருநிலப்பகுதி சிறு குளங்கள் புனருத்தாரண நடவடிக்கைகள் பெரும் வெற்றி பெற்றதாக சொல்ல முடியாது. இங்கும் நீர் கொள்ளளவு ஆற்றல் அதிகரிக்கவில்லை. மற்றும் சிறு குளங்கள் பலவற்றில் தாவர போர் வையும், தாவர அடர்த்தியும் கூடுதலாக இருக்கின்றன.

நீரியியல்திட்டங்கள்மாண், இடை, நுண் மாவட்டங்களில் முன்னெடுத்த பொழுதும், வட மாகாண தளநிலையை நன்கு அறிந்த ஆற்றல் மிகு எந்திரிகள் ஒரு சிலரே இருக்கின்றனர். இவர்களுள் இரணைமடு – யாழ்ப்பாணம் குடிநீர் திட்டத்தை முன்னெடுத்து வரும் எந்திரி பாரதிதாசனின் சேவை பாராட்டுக்குரியது. நீரியியல் திட்டங்களை இணங்காண, திட்டம் தீட்ட, அமுல்படுத்த, பராமரிக்க, பின்னாய்வுகள் செய்ய போதியளவு தரம் மிக்க ஆளணி எல்லா மட்டத்திலும் மிகக் குறை வாகவே இருக்கின்றன. இதனால் இத்துறைக்கு அண்மையானவர்கள் இத்துறை யியல் திட்டங்களுக்கு உள்வாங்கப்பட்டுள்ளார்கள் எனக் காண முடிகின் றது. இதனால் இத் திட்டங்களின் வினைத்திறன், விளை திறன் பல ன்களைப் பெற முடியாது இருந்து வருகின்றது.

நீரியல் துறையில் நன்கு பயிற்சி பெற்றபோதியளவுஆளணியின்மையால் வட பகுதி நீர் வளங்கள் சிறந்த முறையில் விருத்தியாகவோ, முகாமைத்துவம் சரியாக செய்ய முடியாது போயிற்று.

1879 ஆம் ஆண்டு வட மாகாண அதிபராக இருந்த துவைனம் யாழ்ப்பாண கடல் நீரேரித் திட்டத்தை முன்னெடுத்தார். இதன்பின் 1916 ஆம் ஆண்டில் அரசாங்க அதிபராக இருந்த கோர்ஸ் பேர்க் இத்திட்டத்தின் ஒரு பகுதியை முன்னெடுக்கலானார். இத்திட்டத்தின்மூலம் 8500 ஏக்கர் முடிக்குரிய காணிகளும் 3500 தனியாருக்குச் சொந்தமான காணிகளும் விருத்தி செய்யப் படலாம் என உணரப்பட்டது. இத் திட்டத்தின் முன்னோடித் திட்டமாக கரவெட்டி கிழக்கு, துன்னாலைப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளால் உவர் நிலம் நன்னிலமாக மாறியதுடன் மேலும் வீட்டுப் பாவனைக்குரிய நீர் கிடைக்கக்கூடியதாய் இருந்தது. 1930 இல் வெப் வடபகுதின் பிராந்திய பொறியியலாளராக நியமிக்கப் பட்டார். இவரும் அன்றைய சட்ட சபை அங்கத்தவரான திரு.கே. பாலசிங்கம் அவர்களும் இணைந்து பாலசிங்கம் வெப் என்ற அறிக்கை முன்வைக்கப்பட்டது. இத் திட்டத்தின் மூலமும் உப்புநீர் உள் வருவதைத் தடுத்து புதிய 10936 ஏக்கர் நிலப்பரப்புக்களை விவசாயத்திற்கு ஏற்றதாக மீட்கலாம் என்றும் மேலும் 20 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை நிலத்தில் உற்பத்தியைப் பெருக்கலாம் என்றும் திட்டம் முன்மொழிந்தது.

1960 களில் எந்திரி ஆறுமுகம் புதிய திட்டத்தை முன்மொழிந்தார். இவரது திட்டத்தின்படி வடமராட்சி கடல்நீரேரியை ஆனையிறவு கிழக்கு கடல்நீரேரியுடன் மண்டலாய் கால்வாய்மூலம் இணைப்பது. இத்திட்டம் பின்வரும் அம்சங்களைக் கொண்டது.

1. ஆனையிறவு மேற்கையும் ஆனையிறவு கிழக்கையும் புகையிரதப்பாதைஏ–9வீதியில்பிரிப்பது
2. சுண்டிக்குளம் பகுதியில் தடுப்பணை அமைத்தல்
3. மண்டலாய் இரண்டரை [illegible] ஆனையிறவு கிழக்கு [illegible] வடமராட்சி கடல் நீரேரியையும் இணைப்பது.
4. தொண்டைமானாறு கழிமுகத்தில் தடுப்பணை அமைத்தல்
5. கப்பூது பகுதியில் அணை அமைத்து வடமராட்சி கடல்நீரேரியையும் உப்பாற்றையும் பிரிப்பது.

நீண்டகாலமாக துவைனம், போஸ்பேர்க், எந்திரிகள் வெப், எஸ்.ஆறுமுகம், கே.சண்முக நாதன், கே. சண்முகராஜா, என். இரத்தினம், ஏ.சி.வினோதராஜா, மற்றும் கடந்த காலங்களில் கடமையாற்றிய எந்திரிகள், சட்டசபை அங்கத்தவரான பாலசிங்கமும், பாராளுமன்ற அங்கத்தவரான எம். சிவசிதம்பரம் மற்றும் அரசியல் தலைவர்களும் பேராசிரியர்கள் எஸ். டபிள்யூ. தம்பையா, ஜி.நவரட்ணராஜா, துரைராஜா போன்றவர்களும் மற்றும் பல மாவட்ட அர சாங்க அதிபர்கள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் கடந்த நூறாண்டு காலத்திற்கு மேலாக யாழ்ப்பாண கடல்நீரேரியை நன்னீர்த் திட்டத்தை நிறைவேற்ற பல முயற்சிகள் மேற்கொண்டு வந்த பொழுதும் இன்னும் இத்திட்டம் முழுமை பெறவில்லை.

மகாவலி திட்டத்தின் கீழ் இன்று மொரகாகந்தை நீர்த்தேக்க வேலைகள் முடிவு பெற்றுள்ளன. வடக்குக்கு மகாவலி நீர் கொண்டு வரப்படும் என்று சொல்லப்படுகிறது. எனினும் வடமத்திய கால்வாய் வெட்டும் வேலை இன்று வரை ஆரம்பிக்கப்பட வில்லை.

வட மத்திய கால்வாய் வேலை முடிவுற்றதும் மகாவலி நீர் கனகராயன் ஆறு வழியாகவும் யாழ்ப்பாண கடல்நீரேரி திட்டம் வழியாக மகாவலி நீர் குடாநாட்டுக்கு வந்து சேரும் வாய்ப்புண்டு. இதன்மூலம் மகாவலி நீர் வடமராட்சி கடல்நீரேரி வழியாகவும் உப்பாறு வழியாகவும் பாயும் சந்தர்ப்பம் கிட்டலாம். ஏற்கனவே மகாவலி நீர் மாதுறு ஓயா, கலா ஓயா, யான் ஓயா, மல்வத்து ஓயா, அருவியாறு, வழியாகக் கடலை அடைகின் றது.

வட மாகாணத்தில் மகாவலித் திட்டத்தின் கீழ் LKIM ஆகிய திட்டங்கள் விருத்தி செய்யப்பட இருக்கின்றன.

L திட்டத்தில் உள்ளூர் தமிழ் மக்கள் தங்களுக்கு ரிய பங்கை பெறவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

வட மாகாணத்தில் உள்ள சிறு குளங்களின் எண்ணிக்கை 200 இற்கும் மேற்பட்டு இருக்கும். இக் குளங்கள் புதிய பொருளாதார, சுற்றுச் சூழல்,சுற்றுலா போன்ற அபிவிருத்தி இலக்குகளையும் குளங்கள் வழியாக வேலைவாய்ப்பை அதிகரிக்கும் இலக்குகளை உள்வாங்கி சிறு குளங்கள் மேம்பாட்டுத் திட்டங்கள் முன்னெடுக்கப்படின் செல்வப் பெருக்கத்துக்கும் வேலை வாய்ப்பு அதிகரிப்புக்கும் வழிவகுக்கும்.

ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு கிராமங்களில் குளங்கள் அமைத்து நீர் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் விவசாயத்தை பெருக்கவும் பாரிய திட்டத்தை முன்னெடுத்துள்ளார்.

இது போல வட மகாணத்தின் பெரும் எண்ணிக்கையான கிராமியக் குளங்களைப் புனருத்தாரணம் செய்வதன் மூலம் பின் தங்கிய கிராமியப் பொருளாதாரத்திற்கு புது உந்து சக்தி கொடுக்க முடியும்.

வழுக்கையாறு திட்டம் 200 மில்லியன்வரையில்செலவுசெய்து முன்னெடுத்த பொழுதும் இதன் உற்பத்தி பிரதேசத்தில் குறிப்பாக தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவில் வேலைகள் முற்றுப் பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

வட மாகாணத்தின் நீர் வளத்தை உச்சபயன்பாட்டுக்குகொண்டு வர யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைக்க எதிர்பார்க்கப்படும் நீரியல்துறை பெரும் பங்காற்ற முடியும். இத்துறை விஞ்ஞான பீடத்துக்கு கீழோ அல்லது பிரயோக விஞ்ஞான பீடத்துக்கு கீழோ இயங்க முடியும். வட பகுதி மக்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளர்ச்சியிலும் உயர்கல்வியிலும் முன்னர் காட்டிய உற்சாகத்தை இன்றும் காட்ட வேண்டும்.யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தில் நிறுவு வதில் மக்கள் பெரும் பங்காற் றினர்.

வட மாகாணத்தினதும் நாட்டின் வளர்ச்சிக்கும் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்திலும்புதிய பீடங்கள், துறைகள் முன்னுரிமையில் அமைக்கப்பட வேண்டும். இந்துகற்கைகள் பீடம், சட்ட பீடம், நீரியல்துறை, முதியோர் மருத்துவத்துறை ( Geriatrics Medicine ), குற்றவியல் துறை ( Crimonology ) ஆகியவை இன்று தேவைப்படும் பீடங்களும் துறைகளுமாகும்.

பொது மக்களும் சிவில் சமூகமும் தமிழ் அரசியல் தலைவர்கள் அரசிற்கு அழுத்தம் கொடுத்து இத் திட்டங்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனி மாத இராசி பலன்கள்

## 15.06.2017-16.07.2017

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## வாய்ப்புக்கள் வாசல் கதவைத் தட்டும்!



தாழ்வு மனப்பான்மையைத் தகர்த் தெறிய சொல்லும் துலாம் இராசி அன்பர்களே!




உங்களின் ஆனி மாதக் கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது. உங்கள் இராசிநாதன் சுக்ரன் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். சனி 2ஆம் இடத்தில் வக்ர இயக்கத்தில் இருக்கிறார். குரு விரய ஸ்தானத்தில் சஞ்சரித்து 6ஆம் இடத்தைப் பார்க்கிறார். பொதுவாகவே இம்மாதம் பொருளாதார முன்னேற்றம் அதிகரிக்கும் என்றே சொல்லலாம். சுக்ர பலம் கூடுதலாக இருக்கும் பொழுது. வசதி பெருகும். வாய்ப்புகள் வாசல் கதவைத் தட்டும்.

வேலை கிடைக்கவில்லையே என்று வேதனைப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு அமையும். மாலை கிடைக்கவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு மாலை சூடும் வாய்ப்பு கிட்டும். பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்கவில்லையே என்று அங்கலாய்த்தவர்களுக்கு இப்பொழுது தகுந்த பலன் கிடைக்கப் போகிறது. கொடுக்கல்-வாங்கல்களில் ஆதாயம் உண்டு. பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும்.

ஏழரைச் சனியில் எத்தனையாவது சுற்று உங்களுக்கு நடைபெறுகிறது என்பதைப் பார்த்துக் கொள்ளுங்கள். முதல்சுற்று நடைபெற்றால் முன்னேற்றப் பாதையில் சில குறுக்கீடுகள் வந்து சேரும். இரண்டாவது சுற்று நடைபெற்றால் இனிய பலன்கள் ஏராளமாக நடைபெறும். அதை 'பொங்கு சனி' என்று அழைப்பார்கள். மூன்றாவது சுற்று, நான்காவது சுற்று நடைபெறுபவர்கள் ஆரோக்கியத் தொல்லையால் அவதிப்பட நேரிடலாம். என்ன இருந்தாலும் சனி உங்களுக்கு ஓரளவு நன்மைய்ச் செய்பவராகத்தான் இருக்கிறார். எனவே கூடியவரை நல்ல பலன்களையே அவர் வழங்குவார்.

இருப்பினும் மந்தன் எனப்படும் சனி, மந்த கதியில் இயங்குபவர். காரியங்களில் தாமதம் ஏற்பட்டாலும் கடைசி நேரத்தில் கைகூடி விடும். சனிக்குரிய கவசத்தைப் பாடி, சனிபகவானுக்கு எள்தீபம் ஏற்றி வழிபடுவது நல்லது. சனி பகவானுக்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்குச் சனிக்கிழமை அல்லது புதன்கிழமை சென்று, கரு நீல வண்ணத்தில் வஸ்திரம் அணிவித்து, சுகந்த வாசமுள்ள மலர் மாலையைச் சூட்டி வழிபடுவதன் மூலம் பிரச்சினைகள் நீங்கும்.

இம்மாதம் ஆனித் திருமஞ்சனம் வருகிறது. அன்றைய தினம் நடராஜர் சந்நிதியில் சிவபுராணம் பாடி வழிபடுவதன் மூலம் நன்மைகளை அதிகம் பெறலாம். மாதத்தின் மையப் பகுதியில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள்.

ரிஷப சுக்ரன் சஞ்சாரம்

ஜூன் 29ஆம் திகதி ரிஷப இராசிக்குச் சுக்ரன் செல்கிறார். இராசிநாதன் மறைவது அவ்வளவு நல்லதல்ல. குடும்பத்தில் நிம்மதி குறையும். கருத்து மோதல்கள் அதிகரிக்கும். எந்தச் செயலையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து செய்வது நல்லது. மற்றவர்களின் மனநிலையைப் புரிந்து கொண்டு செயற்படுங்கள். அரசு வழியில் தொல்லைகளும், அரசாங்கத்தால் சிக்கல்களும் உருவாகலாம். வெளிநாட்டு வேலையில் இருப்பவர்கள் திடீர் என மாற்றப்படுவர். பணத்தேவைகள் கடைசி நேரத்தில் தான் பூர்த்தியாகும். பெண்வழிப் பிரச்சினைகள் தலைதூக்கும்.

கடக புதன் சஞ்சாரம்

ஜூலை முதல் கடக இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசிக்குப் பத்தாமிடத்திற்கு பயணிக்கும் புதன். முத்தான பலன்களை வழங்கப் போகிறார். மாமன் வழி உறவால் மகிழ்ச்சி ஏற்படும். மன இறுக்கம் அகலும். எதிர்காலம் பற்றிய பயம் மாறும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் விருப்ப ஓய்வில் வெளிவந்து புதிய தொழில் தொடங்கும் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்வர். மாற்று இனத்தவர்களின் ஒத்துழைப்பு உங்களுக்கு கூடுதலாகக் கிடைக்கும்.

கடக செவ்வாய் சஞ்சாரம்

ஜூலை 12ஆம் திகதி கடக இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். தன சப்தமாதிபதியான செவ்வாய், அங்கு நீச்சம் பெறுகிறார். எனவே பணப்புழக்கத்தில் தடை ஏற்படும். பற்றாக்குறை அதிகரிக்கும். ஒரு கடனை அடைக்க மற்றொரு கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகும். சங்கிலித் தொடர் போல கடன்சுமை தொடர்ந்து கொண்டிருக்கிறதே என்று கவலைப்படுவீர்கள். உங்களுக்குரிய பங்கை பிரித்துக்கொடுக்காமல், சகோதரர்கள் கவலை அடைய வைப்பர். போராடி வெற்றி பெறும் நேரமிது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

மாதத் தொடக்கம் முதல் ஜூலை 11ஆம் திகதி வரை, உங்களுக்கு நல்ல பலன்களே வந்து சேரும். இல்லம் தேடி இனிய செய்திகள் வரத்தொடங்கும். தாய்வழி ஆதரவு பெருகும். சகோதர வர்க்கத்தினர் உங்களுக்கு உதவிக்கரமாக இருப்பர். வீண் பழிகளில் இருந்து விடுபடுவீர்கள். கணவன்-மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். பிள்ளைகளுக்கான சுபகாரியங்களைச் செய்து முடிக்க வேண்டுமென்ற ஆசை மேலோங்கும். பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உடன் பிறப்புகள் உங்களை விட்டு விலகலாம். சொத்துப் பிரச்சினைகள் உருவாகலாம். வராகி வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

## தொட்ட காரியங்கள் வெற்றியளிக்கும்!



நினைத்ததை செய்து முடிக்கும் விருச்சிக இராசி அன்பர்களே!




உங்களின் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் அஷ்டம ஸ்தானத்தில் சூரியனோடும், புதனோடும் இணைந்து சஞ்சரிக்கிறார். இராசிநாதனாகவும் 6இற்கு அதிபதியாகவும் விளங்கும் செவ்வாய் 8ஆம் இடத்தில் வலிமையிழந்து சஞ்சரிக்கும் பொழுது இராஜயோக அமைப்பு உருவாகிறது. எனவே தொட்ட காரியங்கள் வெற்றியாகும். தொகை வரவு திருப்திகரமாக இருக்கும். ஆரோக்கியத் தொல்லை அகலும்.

புத ஆதித்ய யோகம் இருப்பதால் பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். அதிகப் பிரயாசை எடுக்காமலேயே அனைத்துக் காரியங்களும் வெற்றியாக முடியும். அரசியல் செல்வாக்கு மேலோங்கும். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். கல்வி மற்றும் கலைத் துறை சம்பந்தமாக நீங்கள் எடுத்த முயற்சி கைகூடும். தன பஞ்சமாதிபதியாக விளங்கும் குரு பகவான், லாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்றவைகள் திடீர் என வந்து சேர்ந்து திக்கு முக்காட வைக்கும்.

வெற்றிப் படிக்கட்டின் விளிம்பில் ஏற வேண்டுமானால், வியாழ பகவானின் அருட்பார்வை வேண்டும். அந்த அருட்பார்வை, உங்கள் இராசியைப் பொறுத்தவரை 3.5.7 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே முன்னேற்றத்தில் இருந்த முட்டுக்கட்டைகள் அகலும். முக்கிய புள்ளிகள் உங்கள் இல்லம் தேடிவந்து உதவிக்கரம் நீட்டுவர். தங்கம், வெள்ளி தானாக வந்து சேரும். விற்பனையான சொத்துகளுக்குப் பதிலாக மீண்டும் புதிய சொத்துகளை வாங்குவீர்கள். வெளிநாட்டில் இருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக் கொள்ளல்ாமா? என்று சிந்திப்பீர்கள். புண்ணிய காரியங்களுக்கு பொருளுதவி செய்வீர்கள்.

ஜென்மச் சனியின் ஆதிக்கம் நடைபெற்றாலும், ஏழரைச் சனி இனி நற்பலன்களைக் கொடுக்கத் தொடங்கும். சனி வக்ரம் பெற்றுச் சஞ்சரிப்பதால் சஞ்சலங்கள் தீரும். சந்தோசம் சேரும். சனிக்கிழமை தோறும் சனீஸ்வர பகவானை, சனி கவசம் பாடி வழிபாடு செய்யுங்கள். கற்பக விநாயகர் வழிபாடும் ஆனந்தமான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும். ஆனித் திருமஞ்சனத்தன்று நடராஜர் தரிசனம் பார்த்தால் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும்.

ரிஷப சுக்ரன் சஞ்சாரம்

ஜூன் 29ஆம் திகதி ரிஷப இராசிக்குச் சுக்ரன் செல்கிறார். சப்தம ஸ்தானத்தில் சுக்ரன் சஞ்சரிப்பது மிகுந்த யோகமாகும். 7இல் சஞ்சரிக்கும் சுக்ரன். உங்கள் இராசியைப் பலமாக பார்க்கிறார். நவக்கிரகத்தில் கிள்ளிக் கொடுக்காமல் அள்ளிக் கொடுக்கும் ஆற்றல் பெற்றவர் சுக்ரன். எனவே நீங்கள் சொல்லும் சொற்கள் எல்லாம் வெல்லும் சொற்களாக மாறும். நல்லவர்களின் தொடர்பால் நலம் காண் பீர்கள். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. புதிய வாகனங்களை வாங்கி மகிழ்வீர்கள்.

கடக புதன் சஞ்சாரம்

ஜூலை 1ஆம் திகதி கடக இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசியைப் பொறுத்தவரை 8.11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். லாபாதிபதியாக விளங்கும் புதன் 9ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, ஒளிமயமான எதிர்காலத்திற்கு உத்தரவாதம் கிடைக்கும். கூட்டாளிகளால் நன்மை உண்டு. மாமன், மைத்துனர்கள் உங்கள் சேமிப்பு உயர வழிவகுத்துக் கொடுப்பர். பூமி வாங்கும் யோகம் முதல் புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் யோகம் வரை படிப்படியாக வந்து சேரும் நேரம் இது. சர்ப்பக் கிரகங்களின் ஆதிக்கமும் உங்களுக்கு நற்பலன்களைத் தரும் விதத்திலேயே இருக்கிறது. 4இல் கேது. 10இல் ராகு இருப்பதால் நாகசாந்திப் பரிகாரங்களைச் செய்து கொள்வதன் மூலம் தொழில் வளர்ச்சி அதிகரிக்கும்.

கடகச் செவ்வாய் சஞ்சாரம்

ஜூலை 12ஆம் திகததி கடக இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். அங்கு அவர் நீச்சம் பெறுகிறார். எனவே ஆரோக்கியத் தொல்லைகள் ஏற்பட வாய்ப்புண்டு. ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துங்கள். அலைச்சல்களை அளவோடு வைத்துக் கொள்ளுங்கள். இற்கு அதிபதியாகவும் செவ்வாய் இருப்பதால், அது நீச்சம்பெறுவது ஒருவழிக்கு நன்மையை வழங்கும். வீட்டுப் பராமரிப்பில் ஆர்வம் காட்டுவீர்கள். சகோதர ஒற்றுமை பலப்படும். அங்காரக வழிபாடு அதிக நன்மையை வழங்கும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

முன்னேற்றங்கள் அதிகரிக்கும் மாதம் இது. மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். உடன்பிறப்புகள் உங்களுக்கு உதவிக்கரமாக இருப்பார்கள். தாய் வழியில் தனவரவு உண்டு. கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். உத்தியோக உயர்வு, சம்பள உயர்வு போன்றவை பற்றிய சந்தோசத் தகவல் வந்து சேரும். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். வாகன யோகம் உண்டு. குழந்தைகளின் கனவுகளை நனவாக்குவீர்கள். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். ஜென்மச் சனிக்குப் பரிகாரமாக சனிக்கிழமை தோறும் சனிபகவான் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். பிரதோசம் அன்று நந்தீஸ்வரரையும், உமா மகேஸ்வரரையும் வழிபட்டு நலங்களை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.4 கோடி இழப்பீடு

(கொழும்பு)

இயற்கை அனர்த்தங்களினால் அழிவடைந்த வயல்களுக்கான நெல், உரம் என்பனவற்றை இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய காப்புறுதிச் சபையின் தலைவர் சிட்னி கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட ஐந்து இலட்சத்து 20 ஆயிரம் விவசாயிகளுக்கு நான்கு கோடி ரூபா இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது. இதற்காக திறைசேரி 520 கோடி ரூபாவை ஒதுக்கியிருந்தது. கமநல சேவைகள் மத்திய நிலையத்தின் ஊடாக இவை வழங்கப்படவுள்ளது என விவசாய காப்புறுதி சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

உரக் கூட்டுத்தாபனமும், விவசாயத் திணைக்களமும் இணைந்து இந்த வேலைத் திட்டத்தை அமுல்படுத்துகின்றன. இந்த வாரத்திற்குள் விநியோகப் பணிகள் பூர்த்தியாகும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# சம்பிக்க- றிசாத் இடையில் அமைச்சரவையில் தர்க்கம்




(கொழும்பு)

அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர்களான சம்பிக்க ரணவக்கவிற்கும், றிசாத் பதியுதீனுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

கொழும்பில் சேர்க்கப்படும் கழிவுகளை புத்தளம் அருவக்காறு பிரதேசத்தில் கொட்டுவதற்கு அனுமதிக்குமாறு அமைச்சர் சம்பிக்க ரணவக்க கோரியுள்ள நிலையில் இந்தக் கோரிக்கைக்கு அமைச்சர் றிசாத் பதியுதீன் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

புத்தளம் பிரதேசத்தில் சீமெந்து தொழிற்சாலை, மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அந்தப் பகுதிகளில் குப்பைகளை கொட்ட வேண்டாம் எனவும் றிசாத் பதியூதீன் கடுமையான தொனியில் அமைச்சர் சம்பிக்கவிற்கு தெரிவித்துள்ளார்.

சீமெந்து தொழிற்சாலை, மின் உற்பத்தி நிலையங்கள் போன்றன அபிவிருத்தி நோக்கில் உருவாக்கப்பட்டவை எனவும், தேசியப் பிரச்சினையாக மாறியுள்ள குப்பை அகற்றும் பிரச்சினைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க, றிசாத் பதியுதீனிடம் கோரியுள்ளார்.

குறித்த பகுதியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து வாழ்ந்து வருவதாகவும் இதனால் அந்த இடத்தை வழங்க முடியாது எனவும் அமைச்சர் றிசாத் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் இந்த விடயம் குறித்து புத்தளம் மாவட்டச் செயலாளருடனும், மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் பேசி தீர்மானம் எடுக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். (இ-7)

**நாட்டின் வளர்ச்சி குறித்து எவ்வித அக்கறையும் இல்லை**

# ஞானசாரரின் கதைகளைக் கூறி அரசாங்கம் மழுப்புகின்றது

## கூட்டு எதிரணி விசனம்

ஞானசார தேரர், ஏனைய சில சிறிய சம்பவங்கள் பக்கம் மக்களது கவனத்தைத் திருப்பி, நாட்டில் தற்போது காணப்படும் நெருக்கடியான சூழ்நிலையை, அரசாங்கம் மறைத்து வருவதாக, ஒன்றிணைந்த எதிரணியினர், நேற்று முன்தினம் குற்றஞ்சாட்டினர்.

"நாட்டின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி குறித்து, தற்போதுள்ள அரசாங்கத்துக்கு எந்தவொரு அக்கறையும் இல்லை" என்று, ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

"நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய பிரச்சினைகள் தொடர்பில், சரியான முறையில் வெளிப்படுத்தாமல் அல்லது அதை மறந்தே, இந்த அரசாங்கம் செயற்படுகின்றது. நாட்டின் சொத்துக்களை, வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்து, நாடு உறுதியாக உள்ளது என்பதை வெளிக்காட்ட முனைகின்றது. ஆனால், அது உண்மையல்ல." என்று அவர் கூறினார். மேலும், பொதுத் துறையை சரியான முறையில் நிர்வகிப்பதற்கு அரசாங்கம் தவறிவிட்டதாகவும், எனவேதான் அரசாங்க முகவர் நிறுவனங்களை, தனியார்மயப்படுத்துவதற்கு முயற்சிக்கின்றது என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, நாட்டின் பொருளாதாரம் தவறாக நிர்வகிக்கப்படுகின்றமையால், நாட்டின் பொருளாதாரமும் வளர்ச்சியும் வீழ்ச்சியடைந்துள்ளதாக, அநுராதபுரம் மாவட்டத்துக்கான ஒன்றிணைந்த எதிரணியின் எம்.பி, ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

மேலும், அரசாங்கத்தின் போதிய உதவிகள் வழங்கப்படாமையாலும், பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளமையாலும், நாட்டின் விவசாயத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

"தமிழ்ப் புத்தாண்டுக்கு முன்னர், வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, 10,000 ரூபாய் வழங்கப்படும் என்று ஜனாதிபதி உறுதியளித்திருந்த போதிலும், சரியான தொகை வழங்கப்பட்டிருக்கவில்லை. விவசாயிகளுக்கு, 8,500 ரூபாயே வழங்கப்பட்டுள்ள என்பதை நான் முழுப்பொறுப்புடன் தெரிவித்துக்கொள்கின்றேன்" என்று அவர் கூறினார். (இ-7)

# பள்ளிவாசல் மீது தாக்குதல் தேடப்பட்டு வந்த மாணவன் சி.சி.டி.யினரால் கைது!

பாணந்துறை நகரிலும் எலுவில பகுதியிலும் இரு பள்ளிவாசல்கள் மற்றும் இரு கடைகள் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்திய கும்பலின் உறுப்பினர்கள் நால்வரை தேடி வரும் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் பல்கலைக்கழக மாணவன் ஒருவனை கைது செய்துள்ளனர்.

ஏற்கனவே இந்த விவகாரம் தொடர்பில் கடந்த வாரம் பொதுபல சேனா அமைப்புடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்த தேரர் ஒருவர், கொழும்பு வாழைத்தோட்டம் பொலிஸ் நிலைய பொலிஸ் கான்ஸ்டபிள் உள்ளிட்ட நால்வர் கைது செய்யப்பட்டிருந்த நிலையிலேயே தற்போது பல்கலைக்கழக மாணவன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளான்.

கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் பொலிஸ் அத்தியட்சகர் நிசாந்த சொய்ஸா தலைமையிலான பொலிஸ் குழு முன்னெடுத்துள்ள இந்த விசாரணைகளில் மேலும் மூவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இவ்வாறு தேடப்படுபவர்களில் தேரர் ஒருவரும் அடங்குவதாக பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன. (இ-7)



கேலிச்சித்திரம்

# வெள்ளைவான் கடத்தல் கோத்தபாயவுக்கு எதிராக ஊடகவியலாளர் முறைப்பாடு



(கொழும்பு)

தன்னைக் கடத்திச் சென்று, கொடூரமான முறையில் தாக்கியதாகவும் இது தொடர்பில் விசாரணை நடத்தப்படல் வேண்டும் எனவும் கூறி, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக, சிரேஷ்ட ஊடகவியலாளர் பொத்தல ஜெயந்தவால், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடொன்று பதிவுசெய்யப்பட்டது.

இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர்கள் சங்கம், மேலும் சில அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் சென்றே, அவர் இந்த முறைப்பாட்டைப் பதிவு செய் தார்.

கடந்த 2009ஆம் ஆண்டு ஜூன் மாதம், வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்ட ஊடகவியலாளர் பொத்தல ஜயந்த, கடுமையாகத் தாக்கப்பட்டு, வீதியில் தூக்கியெறியப்பட்ட நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். மேலும், அவரது தலைமுடி, தாடி, மீசை என்பனவும் முற்றாக வழிக்கப்பட்டிருந்தன.

இச்சம்பவத்தை அடுத்து நாட்டை விட்டு வெளியேறிய பொத்தல ஜெயந்த, வெளிநாடு ஒன்றில் தஞ்சமடைந்திருந்தார். ஆட்சி மாற்றத்தை அடுத்து, தற்போது நாடு திரும்பியுள்ள அவர், நேற்று முன்தினம், மேற்படி முறைப்பாட்டைப் பதிவு செய்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தின்போது, கோத்தபாய ராஜபக்ஷ தன்னை அழைத்து "நடப்பதை பார்த்துக்கொள்" எனக் கூறி அச்சுறுத்தியதாகவும் அதற்கு அடுத்த சில தினங்களில் தன்னை வெள்ளை வானில் கடத்திச் சென்று தாக்கி, கை, கால்களை உடைத்ததாகவும், தன்னைக் கடத்திச் சென்று தாக்கியமைக்கான பொறுப்பை ராஜபக்ஷ அரசாங்கமே ஏற்கவேண்டும் எனவும், கடந்த 2015 ஆம் ஆண்டில், ஊடகங்கள் முன்னால் பொத்தல ஜெயந்த தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், மீண்டும் இச்சம்பவம் குறித்து விசாரணை செய்யுமாறு கோரி, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் அவர் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | கொடிகாமம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 120 | 70 | 120 | 120 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 110 | 100 | 100 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 300 | 400 | 300 | 400 | 300 | 300 | 350 |
| தக்காளி | 100 | 200 | 120 | 160 | 150 | 110 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 80 | 80 | 70 | 60 | 60 |
| கோவா | 150 | 200 | 130 | 200 | 150 | 100 | 120 |
| கரட் | 200 | 400 | 200 | 320 | 240-320 | 250 | 250 |
| பூசணி | 100 | 100 | 80 | 80 | 100 | 80 | 70 |
| புடோல் | 50 | 100 | 80 | 80 | 50 | 40 | 80 |
| வாழைக்காய் | 60 | 80 | 60 | 80 | 50 | 40 | 60 |
| சின்னவெங்காயம் | 280 | 400 | 300 | 240 | 300 | 300 | 250 |
| பெரியவெங்காயம் | 90 | 120 | 90 | 120 | 100 | 90 | 100 |
| பாகற்காய் | 120 | 200 | 130 | 160 | 160 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 120 | 70 | 160 | 80 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | -- | 160 | 100 | 50 | 120 |
| பயற்றங்காய் | 100 | 100 | 80 | 120 | 100 | 50 | 100 |
| லீக்ஸ் | 100 | 160 | 120 | 120 | 100 | 80 | 120 |
| பீற்றூட் | 100 | 140 | 80 | 120 | 100 | 80 | 120 |
| கறிமிளகாய் | 300 | 400 | -- | 300 | 180 | 150 | 200 |
| முருங்கைக்காய் | 250 | 150-250 | 250 | 200 | 240 | 200 | 250 |
| போஞ்சி | 180 | 250 | 150 | 240 | 140 | 150 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 100 | -- | 100 | 100 | 70 | 100 |
| கீரை - 1பிடி | 10 | 30 | 20 | 30 | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 100 | 50 | 70 | 120 | 100 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 40-60 | 50 | 40-60 | 70 | 60 | 70 |
| இராசவள்ளி | 250 | 400 | -- | 300 | 300 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 300 | 300 | -- | 180 | 200 | 200 | 200 |
| முள்ளங்கி | 80 | 120 | 80 | 120 | 80 | 50 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 40 | 40 | 30 | 10 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 20 | 10 | 10 | 20 |
| ஈரப்பலா | 80 | 150 | -- | 120 | 100 | -- | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட மழை விட்டாலும் செடி மழை விடவில்லை.
– மலையக பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மாவை சேனாதிராசாவுக்கு ஓர் அவசர மடல்

தமிழரசுக் கட்சியின் தலைவர் அன்புமிகு மாவை சேனாதிராசா அவர்களுக்கு வணக்கம்.

கடந்த ஒரு வாரமாக தங்களின் அரசியல் பணி மிகுந்த சிரமமுடையதாக இருந்திருக்கும்.

போதாக்குறைக்கு சம்பந்தர் ஐயாவும் உங்கள் தலையில் பாரத்தை ஏற்றிவிட்டு, தமிழரசுக் கட்சியின் சாதாரண உறுப்பினன் நான், மாவை சேனாதிராசாதான் அக்கட்சியின் தலைவர் என்று ஒதுங்கிக் கொண்டார்.

ஒரு சம்பிரதாயத்துக்கேனும் சம்பந்தர் ஐயா யாழ்ப்பாணம் வந்திருந்தால் அது உங்களுக்கு சற்று ஆறுதலைக் கொடுத்திருக்கும்.

என்ன செய்வது! காலம் பிழைக்கும் போது முதலில் அருகில் இருப்பவர்கள்தான் விலத்திச் செல்வர்.

எதுவாயினும் தமிழரசுக் கட்சியின் வரலாற்றில் இப்படியொரு சோதனையை அக்கட்சி முன்பு ஒருபோதும் சந்தித்திருக்கவில்லை.

அதற்குக் காரணமும் உண்டு. முன்பெல்லாம் தமிழரசுக் கட்சியில் அடிமட்டத் தொண்டர்களாக இருந்து அந்தக் கட்சி மீது உயிரை வைத்திருந்தவர்களே அதன் முக்கிய பிரதானிகளாக இருந்தனர். ஆனால் இப்போது அப்படி எதுவும் கிடையாது.

உங்களைப் போன்ற ஒரு சிலரைத் தவிர, மற்றையவர்கள் காய்த்த மரத்தில் கனி பறிக்க வந்தவர்கள். கனியின் சுவை கண்ட அவர்கள் பவிசு வந்தவர்களாக மரத்தை அடியோடு தறித்து தம் வீட்டுக்கு எடுத்துச் சென்றால் என்ன? என்று நினைப்பவர்கள்.

இல்லையென்றால் வடக்கு மாகாண முதலமைச்சர் மீது அவர்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருபவர்களா என்ன?

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை அழைத்து வந்துவிட்டு, அவரின் பதவியைப் பறிக்க நினைத்தமை மிகப்பெரும் கபடத்தனம்.

அதைவிட தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய தலைவனாக இருக்கக்கூடிய விக்னேஸ்வரனை முதலமைச்சர் பதவியில் இருந்து நீக்குவதென்பது தமிழ் மக்களை உதாசீனப்படுத்தும் செயலாகும்.

இவையெல்லாம் நடப்பதற்கு தாங்கள் ஒருபோதும் இடம்கொடுத்திருக்கக்கூடாது.

தமிழரசுக் கட்சி அடியோடு கவிழ்ந்து விடப்போகிறதோ என்றிருந்த நிலையில் தாங்கள் எடுத்த சில முடிவுகள் மிகப்பெரும் தவறில் இருந்து கட்சியையும் தங்களையும் காப்பாற்றி விட்டது.

அதேவேளை இனிவரும் காலங்களில் நீங்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

ஏனெனில் வடக்கு மாகாண சபைக்குள் இருக்கக்கூடிய பிரச்சினை முற்றுமுழுதாக நீங்கி விட்டதென்று ஒருபோதும் கூறிவிட முடியாது.

இப்போது வடக்கு மாகாண சபையில் நீதிக்கான உறுப்பினர்கள் என்ற அணி உருவாகியுள்ளது. இது எதற்கானது.

ஆளும் கூட்டமைப்பில் இருக்கக்கூடிய தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் நீதிக்கான உறுப்பினர்கள் என்ற அணியை உருவாக்குவதாக இருந்தால் இதற்கு நீங்கள் அனுமதி வழங்கினீர்களா?

ஆளுங்கட்சியே இப்படியொரு அணியை உருவாக்குமாக இருந்தால் சபையில் அநீதிகளை இழைப்பது யார்?

உங்கள் கட்சியில் இப்படியான அணியை உருவாக்குவதற்கு சட்டங்களும் நடைமுறைகளும் இடம் தருகிறதா? அல்லது ஆளும் கூட்டமைப்புத்தான் இடம்கொடுக்கிறதா?

நீதிக்கான உறுப்பினர்கள் என்ற அணி முதலமைச்சருக்கு எதிரானதா? தொடர்ந்தும் இந்த அணி முதலமைச்சருக்குத் தொந்தரவு கொடுக்குமா? அல்லது ஆளுநரைச் சந்தித்து முதல்வர் மீது நம்பிக்கையில்லை என்று கூறுமா?

இதென்ன இது? இதெல்லாம் தேவைதானா? இதுபற்றி நீங்கள் சிந்தித்து தமிழரசுக் கட்சி என்ற கூட்டமைப்புக்குள் – உங்கள் தலைமைக்குள் அனைத்தையும் கொண்டு வாருங்கள். எழுந்தமானமாக கட்சி உறுப்பினர்கள் செயற்படுவதைக் கட்டுப்படுத்துங்கள்.

இதை கூறவே இவ் அவசர கடிதத்தை எழுதினோம்.

# முஸ்லிம்களின் பிரச்சினைகள் குறித்து சர்வதேச சமூகத்திடம் எடுத்துரைப்பு

மக்கா ஹரம் ரியில் நடைபெற்ற பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அரசியல் பிரமுகர்கள், மார்க்க அறிஞர்கள் ஆகியோருக்கிடையிலான விசேட கலந்துரையாடலில் இலங்கை சார்பில் கலந்து கொண்ட புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லாஹ், இலங்கை முஸ்லிம்களின் சமகால பிரச்சினைகள் தொடர்பில் எடுத்துரைத்தார்.

சவுதி அரேபியாவின் மன்னருடைய சிரேஷ்ட ஆலோசகர் அய்க் அந்நாசர் காலித் அல் சித்ரி தலைமையில் நேற்று முன்தினம் மக்கா ஹரம் ரியில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில், பல்வேறு நாடுகளில் இருந்து உம்ரா கடமைகளை நிறைவேற்ற மக்கா சென்றுள்ள அரசியல் பிரமுகர்கள், மார்க்க அறிஞர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இலங்கை சார்பில் கலந்து கொண்ட இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் தலைமையிலான தூதுக் குழுவில் ஸ்ரீலங்கா ஹிரா பௌண்டேசன் பிரதித் தலைவர் அல்ஹாஜ் பௌசுல் ஜிப்ரி, மட்டக்களப்பு கெம்பஸ் நிறைவேற்றுப் பணிப்பாளர் பொறியியலாளர் ஹிராஸ் ஹிஸ்புல் லாஹ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது, சர்வதேச தலைவர்கள் மத்தியில் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ், இலங்கையில் முஸ்லிம்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை சுட்டிக்காட்டியதுடன், அவற்றுக்குத்தீர்வினைப் பெற்றுக் கொடுக்க முஸ்லிம் நாடுகள் முன்வர வேண்டும் என அழைப்பு விடுத்தார். அத்துடன், சர்வதேச ரீதியில் முஸ்லிம்கள் எதிர்நோக்கியுள்ள சவால்களை முறியடிக்க ஒற்றுமைப்பட்டு செயலாற்ற வேண்டும் எனவும் வலியுறுத்தினார். (இ-7)

## சிவஞானத்தை மன்னிக்கவும்; சிவாஜிலிங்கம் கோரிக்கை

ஒரு பக்கச் சார்பாக நடந்து கொண்ட அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்தை மன்னிக்குமாறும் வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

மேலும் தமிழ் மக்களின் எழுச்சியை முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்தவர்கள் உணர்ந்திருப்பார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழ் மக்கள் அனைவரும் எங்களை பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை நாங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்ற விடயத்தையும் இந்த மக்கள் எழுச்சி எடுத்துக் காட்டியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

வடமாகாண சபையின் ஆயுட்காலம் முடிவடைய இன்னும் 15 மாத காலப் பகுதியே இருக்கின்றது. இந்நிலையில், தமிழர்கள் எதிர்பார்க்கின்ற தீர்வுகளை முடிந்தளவிற்கு பெற்றுக் கொடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-4)

## ஐ.நா.செயலாளர் நாயகத்தின் இளம் தூதுவராக இலங்.பெண்

(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த ஜயத்மா விக்கிரமநாயக்க என்ற இளம் பெண் ஐக்கிய நாடுகள் அமைப்பின் உயர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் இளம் தூதுவராக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

27 வயதான ஜயத்மா விக்கிரமநாயக்க இளைஞர் அபிவிருத்திக்காக முக்கிய பங்களிப்பை செய்துள்ளார்.

இலங்கை நிர்வாக சேவை அதிகாரியான இவர், இலங்கை நாடாளுமன்ற செயலாளரின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

இளையோர் சம்பந்தமான பல திட்டங்களில் இணைந்து பணியாற்றியுள்ள இவர், 2013 ஆம் ஆண்டில் இருந்து 2015 ஆம் ஆண்டு வரை இலங்கை இளைஞர் நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்துள்ளார்.

மேலும், கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டதாரியான ஜயத்மா, தற்போது பட்டப்பின் படிப்பை மேற்கொண்டு வருகிறார். (இ-7)

## முறைப்பாடு கிடைப்பின் ஹக்கீமை கைது செய்ய அரசாங்கம் தயங்காது

(கொழும்பு)

கிறிஸ்தவ மதத்தலங்களும் தாக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் வெளியிட்டுள்ள கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கும் நிலையில் அவருக்கு எதிராக எவராவது முறைப்பாடு தெரிவிக்கும் பட்சத்தில் அவரை கைது செய்யவும் அரசாங்கம் தயங்காது எனவும் நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அண்மைக்காலமாக நாட்டில் இனவாதம் தலைதூக்க ஆரம்பித்துள்ளது. இனவாதம் நாட்டில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை எமது நாட்டின் வரலாற்றை நோக்கும்போது தெளிவாகப் புரியும்.

அது மட்டுமல்லாமல் கடந்த 30 வருடகாலமாக ஏற்பட்ட யுத்தமும் இனவாத ரீதியிலேயே முன்னெடுக்கப்பட்டது.

இதனால் மக்களின் வாழ்வியலில் பாரிய பாதிப்பு ஏற்பட்டதுடன் நாட்டின் அபிவிருத்தியிலும், பொருளாதாரத்திலும் நாம் பாரியதொரு பின்னடைவை எதிர்நோக்க வழிவகுத்தது.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் 160 கிறிஸ்தவ மதத்தலங்கள் தாக்கப்பட்டுள்ளதாக அன்மையில் சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்டதாகவும் அவ்வாறான சம்பவங்கள் இடம்பெறவில்லை எனவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இது குறித்து முறைப்பாடுகள் தெரிவிக்கும் பட்சத்தில் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மன்னார் பிரதேசத்தில் பள்ளாங் கோட்டை ஆகிய பிரதேசத்திலும் மின் தடைப்படும். (இ-9)

## அகதிகள் தினத்தை முன்னிட்டு

# வீட்டுத் திட்டத்தை உறுதிப்படுத்தி பயனாளிகளுக்கு கடிதம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச அகதிகள் தினத்தை முன்னிட்டு , அகதிகளாக இந்தியாவில் இருந்து இலங்கைக்கு திரும்பி வந்த வடக்கு மாகாணத்தை சேர்ந்த பயனாளிகளுக்கு வீட்டுத் திட்டத்தை உறுதிப்படுத்தும் கடிதம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில்,

இந்தியாவில் அகதிகளாக இருந்து இலங்கைக்கு திரும்பி வந்த மக்களுக்கு எட்டு இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய வீட்டுத்திட்டம் மீள்குடியேற்ற அமைச்சினால் வழங்கப்படுகிறது.

இவ்வருடம் வீட்டுத் திட்டத்தை பெறும் பயனாளிகளுக்கு வீட்டுத் திட்டத்தை வழங்குவதற்கான உறுதிப்படுத்தல் கடிதம் வழங்கப்பட்டது.

அதேவேளையில் யாழ். மாவட்டத்தை சேர்ந்த 125 பயனாளிகளுக்கும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த தலா 10 பயனாளிகளுக்கும் வீட்டுத்திட்ட உறுதிப்படுத்தல் கடிதம் வழங்கப்பட்டது.

இதில் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி நா. சாந்தி, பிர தேச செயலர்கள், யாழ்.மாவட்ட செயலக அதிகாரிகள், வடக்கு மாகாணத்தை சேர்ந்த வீட்டுத்திட்ட பயனாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)

## அரசியல்வாதிகள் சிலருக்கு எதிராக 21 முறைப்பாடுகள்

(கொழும்பு)

இனம் மற்றும் மதங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தை சீர்குலைக்கின்ற சம்பவம் தொடர்பில் 21 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் பிரியந்த ஜயகொடி இதனைத் தெரிவித்துள்ளார்.

முக்கிய அரசியல்வாதிகள் சிலருக்கு எதிராகவே இந்த முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் தனது தகவலில் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோலிக்கும் எனக்கும் சுமுகமான உறவு இல்லை
# பயிற்சியாளர் கும்ப்ளே பகிரங்கமாக தெரிவிப்பு




கப்டனான விராட் கோலிக் கும் பயிற்சியாளரான எனக்கும் சுமுக மான உறவு இல்லை என இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளர் கும்ப்ளே தெரிவித துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகிய கும்ப்ளே ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். டுவிட் டரில் வெளியிட்டுள்ள இந்த அறிக் கையில் அவர் கூறியிருப்பதாவது.

இந்திய அணியின் தலைமை பயிற்சியாளராக என்னை நீடிக்கு மாறு கிரிக்கெட் வாரியம் கேட்டுக் கொண்டது. இது என் மீது உள்ள நம்பிக்கையின் காரணமாகும். இதை கௌரவமாக கருதுகிறேன்.

கடந்த ஒரு ஆண்டாக என்னால் சிறப்பாக சாதிக்க முடிந்ததற்காக கப்டன். அணி வீரர்கள் மற்றும் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

முதல் முறையாக என்னி டம் கிரிக்கெட் வாரியம் கப்டன் பதவிக் குரிய தனித்தன்மைகள் பற்றி தெரிவித்தது. இது எனக்கு ஆச்சரி யத்தை அளித்தது. கப்டனுக்கும். பயிற்சியாளருக்கும் இடையே உள்ள எல்லை பற்றி நான் எப்போதுமே மதிக்கக்கூடியவன்.

ஆனாலும் கப்டனுக்கும். பயிற் சியாளருக்கும் இடையே நிலவிய தவறான புரிதல்கள் குறித்து தீர்த்து வைக்க கிரிக்கெட் வாரியம் முயற் சித்தது. கப்டனான விராட் கோலிக் கும். பயிற்சியாளரான எனக்கும் சுமுகமான உறவு இல்லை.

இருவரும் இணைந்து செயற் படுவது என்பது ஏற்றுக்கொள்ள இயலாது. இது வெளிப்படையா கவே தெரிந்தது. இதனால் நான் சிறந்த முடிவை எடுத்து இருக்கி றேன். கடந்த 1 ஆண்டாக பயிற்சியா ளர் பதவியில் இருந்ததற்காக கிரிக்கெட் வாரியத்துக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு ஆதரவு அளித்த ரசிகர்களுக்கும் நன்றியை கூற கடமைப்பட்டுள்ளேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார். இதற்கிடையே பயிற்சியாளர் பத வியில் இருந்து கும்ப்ளே விலகியது தொடர்பாக கிரிக்கெட் வாரியம் கருத்து தெரிவிக்க மறுத்துவிட் டது. (க)

## ஸ்ரீஅம்பாள் விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது யங்கம்பன்ஸ்





அல்வாய் நண்பர்கள் விளை யாட்டுக்கழகம் நடத்தும் வட மராட்சி லீக் மற்றும் பருத்தித் துறை லீக் அங்கத்துவ கழகங்களுக்கு இடையிலான அணிக்கு 9 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

20.06.2017 அன்று நடை பெற்ற போட்டியில் யங்கம்பன்ஸ் விளை யாட்டுக் கழகத்தை எதிர்த்து ஸ்ரீ அம்பாள் விளையாட்டு கழகம் மோதியது. பரபரப்பாக நடை பெற்ற போட்டியில் யங்கம்பன்ஸ் வீரர் நிரேசன் முதல் கோலினை 5 : 0 நிமிடத்தில் போட்டார்.

இடைவேளையின் பிற்பகுதி யில் யங்கம்பன்ஸ் வீரர் கமலேஸ் வரன் 23.29 நிமிடத்தில் கஜனான் 35.40 நிமிடத்தில் கோல்களை போட்டனர்.

5:0 என்ற முறையில் யங்கம் பன்ஸ் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தெரிவானது. (க)

வலம்புரி SPORTS
விளையாட்டுச் செய்திகள்

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

கோண்டாவில் இந்திரா விளை யாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்து போட்டிக்கு விண்ணப்பம் கோரப் பட்டுள்ளது.

அணிக்கு 6 பேர் 5 பந்துப் பரி மாற்றம் கொண்ட போட்டியானது எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இந் திரா விளையாட்டுக்கழக மைதா னத்தில் நடைபெறும்.

வெற்றிபெறும் அணிக்கு வெற் றிக் கிண்ணமும் 25 ஆயிரம் ரூபாய் பணப்பரிசும் வழங்கப்படும்.

மேற்படி போட்டிக்கு விண்ணப் பிக்கும் விண்ணப்பதாரர்களை உடனடியாக விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. தொடர்பு களுக்கு - 077 177 2705, 077 182 9243. (க)

## வரி ஏய்ப்பு புகார்
# நீதிமன்றத்தில் ஆஜராக ரொனால்டோவிற்கு உத்தரவு



வரி ஏய்ப்பு தொடர்பாக விளக் கம் அளிப்பதற்காக கிறிஸ்டியானோ ரொனால்டோ ஜுலை 31 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராக உத் தரவிடப்பட்டுள்ளது.

போர்ச்சுக்கல் நாட்டின் தலை சிறந்த கால்பந்து வீரர் கிறிஸ் டியானோ ரொனால்டோ. இவர் கடந்த 2009ஆம் ஆண்டில் இருந்து ஸ்பெயின் நாட்டின் முன்னணி கால்பந்து கிளப் அணியான ரியல் மாட்ரிட் அணிக்காக விளையாடி வருகிறார்.

இவரின் சிறந்த ஆட்டத்தால் இந்த சீசனில் லா லிகா கோப் பையும், ஐரோப்பிய சம்பியன்ஸ் கோப்பையும் ரியல் மாட்ரிட் கைப் பற்றியது.

ரொனால்டோ கடந்த 2011 ஆம் ஆண்டில் இருந்து 2014 வரை அவரது படத்தின் உரிமம்.சம்பா தித்த வருமானத்தில் வரிஏய்ப்பு நடத்தியதாக ஸ்பெயின் நாட்டின் வருமான வரித்துறை கடந்த 13 ஆம் திகதி வழக்குப்பதிவு செய் தது.

அதில் சுமார் 14.7 மில்லியன் யூரோக்கள் வரை வரிஏய்ப்பு நடந்ததாக கூறப்பட்டுள்ளது.

இந்த வழக்கு குறித்து விளக் கம் அளிப்பதற்காக அடுத்த மாதம் 31 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படி ரொனால்டோவிற்கு சம்மன் அனுப்பப்பட்டுள்ளது. (க)

# டோனி, யுவராஜ் எதிர்காலம் குறித்து தேர்வுக்குழு முடிவு செய்ய வேண்டும்
## டிராவிட் வலியுறுத்து



இந்திய மூத்த வீரர்கள் டோனி, யுவராஜ்சிங்கின் எதிர்காலம் குறித்து தேர்வுக்குழு முடிவு செய்ய வேண்டும் என்று ராகுல் டிராவிட் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் ராகுல் டிராவிட் இணையத்தளம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது,

2019ஆம் ஆண்டு உலக கோப்பை கிரிக்கெட் போட்டியை நோக்கி இந்திய அணியை முழு அளவில் தயார்படுத்த டோனி, யுவராஜ்சிங் (தலா 35 வயது) ஆகி யோரின் சர்வதேச கிரிக்கெட் எதிர் காலம் குறித்த முடிவை அணித் தேர்வுக்குழுவும், நிர்வாகமும் எடுக்க வேண்டும். அதற்கு இதுவே சரியான தருணமாகும்.

அடுத்த சில ஆண்டுகளில் இவர்களின் பங்களிப்பு என்னவாக இருக்கும்? அணியில் இருவருக் குமே இடம் இருக்கிறதா, அல்லது ஒருவருக்கு மட்டும் தானா? இதற் கான மதிப்பீட்டை ஒரு ஆண்டு காலத்தில் செய்யப்போகிறோமா அல்லது 6 மாத காலத்தில் செய்யப் போகிறோமா? அதற்கு முன்பாக திறமையான புதிய வீரர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்போகிறோமா? அது ற்றி எல்லாம் முடிவு செய்ய வேண்டியது அவசியமாகும்.

மேற்கிந்தியத்தொடருக்கு வலு வான இந்திய அணி அனுப்பப் படுகிறது. இதில் குறைந்தது ஆடும் லெவன் அணியில் வேறு சிலருக்கு வாய்ப்பு அளித்து பரிசோதனை முயற்சியை மேற்கொள்வார்கள் என்று நம்புகிறேன். அதை செய்ய வில்லை என்றால், 'நாம் மற்ற வீரர்களுக்கு வாய்ப்பு அளிக்க வில்லை. இவர்கள் இருவர் மட் டுமே நம்மிடம் இருக்கிறார்கள்' என்று கூறும் நிலைமை ஏற்பட்டு விடும். அது சரியான அணுகுமுறையாக வும் இருக்காது. 'நிறைய பேருக்கு வாய்ப்பு அளித்து பார்த்தோம். எது வும் கைகொடுக்கவில்லை. யுவ ராஜ சிங், டோனி தான் அந்த வரிசைக்கு பொருத்தமானவர் களாக தெரிகிறார்கள். தொடர்ந்து நன்றாகவும் ஆடுகிறார்கள்' என்று சொல்லும் நிலைமையை உரு வாக்கினால்தான், யாரும் தேர்வு குழு குறித்து கேள்வி எழுப்ப மாட்டார்கள். இவ்வாறு டிராவிட் கூறியுள்ளார்.

இதற்கிடையே இந்திய ஜுனியர் மற்றும் இந்திய 'ஏ' அணியின் பயிற் சியாளரான ராகுல் டிராவிட்டின் ஒப் பந்தத்தை மேலும் இரண்டு ஆண் டுக்கு நீட்டிக்க கிரிக்கெட் ஆலோசனை குழு முடிவு செய்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகன விபத்து...

ப்பாணத்திற்கு பயணித்த படி ரக வான் அதே வீதி வழியாக கிளிநொச்சி நோக்கி பயணித்த உழவு இயந்திரத்துடன் மோதி விபத்துக் குள்ளானதில் இரண்டு வாகனங்களின் சாரதிகளும் படுகாயமடைந்துள்ளனர். படுகாயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு உள்ளதாக மாங்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று புதன்கிழமை காலை 6:50 மணியளவில் நடைபெற்றுள்ளது.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பயணித்த படி ரக வாகனத்தின் சாரதியின் கவனக்குறைவு காரணமாக விபத்துச் சம்பவம் நடைபெற்றுள்ளதாக மாங்குளம் பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இச்சம்பவத்தில், பாலைப்பாணி வன்னிவிளான்குளத்தைச் சேர்ந்த சிவனேசன்-சந்திரகுமார் (வயது 35) என்ற குடும்பஸ்தரும், படிரக வாகனத்தின் சாரதியான தென்பகுதியைச் சேர்ந்த சுமார் 25, வயதுடைய இளைஞர் ஒருவருமே இச்சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துச் சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு சென்ற மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (செ-15)

## கசிப்பு உற்பத்தி...

ளுடன் 420 லீற்றர் கசிப்புக் கோடாவும், 25 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சம்பவ இடத்தில் வைத்து 03 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று புதன்கிழமை பிற்பகல் 05 மணியளவில் நடைபெற்றுள்ளது.

தருமபுரம் பொலிஸ் நிலையத்திற்கு பொது மகன் ஒருவர் வழங்கிய இரகசிய தகவலையடுத்து தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம். எம். என். டீ.சதுரங்கவின் உத்தரவுக்கு அமைய தருமபுரம் பொலிஸார் திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டபோதே கசிப்பு உற்பத்தி நிலையம் கைப்பற்றப்பட்டு நிர்மூலமாக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப்பொருட்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப்பொருட்களுடன் சந்தேக நபர்களை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் இன்று வியாழக்கிழமை முற்படுத்தப்படவுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-15)

## கல்வி, விவசாய...

வடக்கு மாகாண விவசாயம் மற்றும் கல்வி அமைச்சுக்களின் தற்காலிக அமைச்சராக வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே முன்னிலையில் நேற்றையதினம் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொண்டுள்ளார்.

வடக்கு மாகாண அமைச்சர்களுக்கு எதிரான ஊழல் குற்ற விசாரணை அறிக்கையில் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மற்றும் வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா இருவரும் பதவி விலக வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அந்த வகையில் குறித்த இரு அமைச்சர்களையும் தாமாக பதவியிலிருந்து விலகுமாறு முதலமைச்சர் தெரிவித்திருந்தார்.

அதனடிப்படையில் அமைச்சர்கள் இருவரும்தமது பதவியை இராஜினாமா செய்ததையடுத்து குறித்த இரு அமைச்சுக்களுக்கு புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படாத காரணத்தினால் குறித்த இரு அமைச்சுப் பதவிகளையும் வட மாகாண முதலமைச்சர் தற்காலிகமாக பொறுப்பேற்றுக் கொண்டு சத்தியப் பிரமாணம்செய்துகொண்டுள்ளார். (செ-4.9)

## நம்பி...

சுக்கட்சி உறுப்பினர்களால் வடக்கு மாகாண ஆளுநரிடம் கையளிக்கப்பட்டிருந்த நம்பிக்கையில்லா பிரேரணை நேற்றைய தினம் குறித்த உறுப்பினர்களால் மீளப்பெற்றுக் கொள்ளப்பட்டது.

வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தலைமையில் வடமாகாண சபையில் உள்ள தமிழரசுக்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் இணைந்து வடக்கு முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை தயாரித்து கடந்த 14 ஆம்திகதிவடமாகாண ஆளுநரிடம் கையளித்திருந்தனர்.

வடமாகாண அமைச்சர்களுக்கு எதிராக முதலமைச்சரால் வழங்கப்பட்ட தீர்மானத்தை கண்டித்து குறித்த பிரேரணையை கையளித்ததனால் மக்கள் மத்தியில் பாரிய எதிர்ப்பினை குறித்த தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் எதிர்நோக்கியிருந்தனர்.

இது குறித்து பல்வேறு அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள் சமரசம் பேசியிருந்த நிலையில், அண்மையில் இணக்கப்பாடு ஒன்று எட்டப்பட்டிருந்தது.

குறித்த இணக்கப்பாட்டின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரின் உறுதிமொழிக்கமைய முதலமைச்சருக்கு எதிராக கையளிக்கப்பட்டிருந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தை வடமாகாண சபை உறுப்பினர்களான கே.சயந்தன், அ.அஸ்மின் ஆகியோர் ஆளுநரிடம் நேரில் சென்று மீளப்பெற்றுள்ளனர். இந்த நிலையில் இன்றைய தினம் வடக்கு மாகாண சபையின் மாதாந்த அமர்வு நடைபெறவுள்ளது. (செ-4-9)

## காணாமல் ஆக்கப்...

மூலத்தை தாம் எதிர்ப்பதாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் அவர்கள் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கையில்,

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் 100 நாட்களையும் தாண்டி போராட்டத்தை மேற்கொண்டு வருகிறோம். இந்த நிலையில் அண்மையில் ஜனாதிபதியை சந்தித்து 5 கோரிக்கைகளை முன்வைத்திருந்தோம் ஆனால் இதுவரை அரசிடம் இருந்து பதில் கிடைக்கவில்லை. எனவே குறித்த விடயம் தொடர்பில் எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றில் ஜனாதிபதியிடம் அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டும்

அத்துடன் குறித்த சட்டமூலம் தொடர்பில் பாதிக்கப்பட்ட உறவுகளுடன் கலந்தாலோசிக்கவில்லை. குற்றங்களை விசாரித்து தண்டனை கொடுக்கும் அதிகாரம் இந்த சட்ட மூலத்துக்கு இல்லை, எம்மால் பிரேரிக்கப்பட்ட சர்வதேச பொறிமுறையோ அல்லது கலப்பு பொறிமுறையோ விசாரணையில் கடைப்பிடிக்க வழிசெய்யப்படவில்லை என்ற மூன்று காரணங்களுக்கான குறித்த சட்டமூலத்தை நாம் எதிர்க்கிறோம். எனவே எமது கோரிக்கைக்கு அமைவாக வட-கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் குறித்த சட்டமூலத்தை எதிர்த்து வாக்களிக்க வேண்டும் என காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் தமது கடிதத்தில் கோரியுள்ளனர். (செ-9)

## அமைச்சர் எஸ்.பி...

டம் நேற்று மன்னிப்பு கேட்டுக்கொண்டார்.

பௌத்த தேரர் தன் மீது அதிருப்தி கொண்டிருந்தால், அதற்கு வருத்தம் தெரிவித்து மன்னிப்பு கோருவதாக அமைச்சர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் இதனை கூறியுள்ளார்.

அஸ்கிரிய மாநாயக்க தேரர் உட்பட சங்க சபை நேற்றுமுன்தினம் கூடிய போது வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில், தனக்கு எதிராக சில விடயங்களை முன்வைத்துள்ளதால், தான் அவர்களிடம் இந்த மன்னிப்பை கோரியதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஞானசார தேரரின் பெயரை மாத்திரம் பயன்படுத்தி, மரியாதை இன்றி பேசுவதாக மாநாயக்க தேரர் தன் மீது குற்றம் சுமத்தியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

எது எப்படி இருந்த போதிலும் கடந்த காலத்தில் ஞானசார தேரர், வெளிநாடுகளிலும் இலங்கையிலும் நடந்து கொண்ட விதத்தை எண்ணிப் பார்த்தால், அவர் மீது இருந்த மரியாதை குறைந்து போனது என்றும் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க சுட்டிக் காட்டியுள்ளார். (செ-11)

## சுகாதார அமைச்சு...

நேற்று மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்ட பேரணியின் போது பொலிஸார் மேற்கொண்ட தடியடி, கண்ணீர்ப் புகை பிரயோகம் மற்றும் தாரை பிரயோகத்தினால் 80 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பேரணியில் ஈடுபட்ட மாணவர்கள் சுகாதார அமைச்சுக்குள் அத்துமீறி நுழைய முற்பட்டமையினை தடுக்க பொலிஸார் தடியடி, கண்ணீர்ப் புகை பிரயோகம் மற்றும் தாரை பிரயோகங்கள் மேற்கொண்டு மாணவர்களை விரட்டியடித்த போதே இவ்வனர்த்தம் மாணவர்களுக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


### கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு

# கேள்வி அறிவித்தல்

தவிசாளர் மாவட்ட பெறுகைக்குழு கமநல அபிவிருத்தித் திணைக்களம் முல்லைத்தீவு சார்பாக உதவி ஆணையாளரால் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் உள்ள குளங்கள், வாய்க்கால் புனரமைப்பு வேலைக்காக தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

1. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளக்கப்பட்டுள்ளது.

3. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக் கேள்வியாளர்கள் கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு எனும் முகவரியில் 20.06.2017 தொட்க்கம் முற்பகல் 10.00 மணியளவில் இருந்து மாலை 3.00 வரை விலைக்கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம் என்பதுடன் மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளலாம்.

4. ஆங்கில மொழி மூலமான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியினை முல்லைத்தீவு கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 20.06.2017 முதல் 03.07.2017 வரை வேலைநாட்களில் காலை 9 மணியிலிருந்து மாலை 3 மணி வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000.00 கட்டணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளளாம்.

5. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர், மாவட்ட பெறுகைக்குழு, கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு 04.07.2017ஆம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தினை தபால் உறையின் இடதுமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேற்குறிப்பிட்ட முகவரியில் நேரடியாக வருகை தரவிரும்பும் விலைக்கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் 04.07.2017ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு திறக்கப்படும். கேள்விகளின் மூலப்பிரதி தனியாகவும் நகல் தனியாகவும் இரு உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.

6. கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

7. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கேள்வியானது (Bid) கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியில் இருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் விதத்திலும் கேள்விப்பிணை பொறுப்பு (Bid Security) 04.10.2017ஆம் திகதி வரை செல்லுபடியானதாகவும் இருத்தல் வேண்டும்.

| கேள்வி இல. | வேலைவிபரம் | மதிப்பீட்டு தொகை (மில்லியன்) | கேள்விப் பிணைத் தொகை செல்லுபடிக் காலம் | தேவையான தரம் | கேள்விப் பிணைத் தொகை | கமநல சேவை நிலையம் |
|---|---|---|---|---|---|---|
| MU/DAD/Tender/2017/39-04 | குஞ்சுகோடாலிக் குளக்கால்வாய் | 2.48 Mn | 04/10/2017 | C7 அல்லது அதற்கு மேல் | 25,000.00 | ஒட்டுசுட்டான் |
| | கற்சிலைமடுக் குளக்கால்வாய் | 1.26 Mn | | | 13,000.00 | ஒட்டுசுட்டான் |
| | பிராமணன் குளக்கால்வாய் | 2.49 Mn | | | 25,000.00 | ஒட்டுசுட்டான் |
| | சின்னச்சாளம்பன் கால்வாய் | 1.47 Mn | | | 15,000.00 | ஒட்டுசுட்டான் |
| | குடிதாங்கியகுளம் | 2.54 Mn | | | 26,000.00 | ஒட்டுசுட்டான் |
| | புளியங்குள கலிங்கு, கால்வாய் | 2.48 Mn | | | 25,000.00 | ஒட்டுசுட்டான் |
| | ஒலுமடுக்குள கால்வாய் | 1.64 Mn | | | 17,000.00 | ஒட்டுசுட்டான் |
| | மணவாளனபட்ட முறிப்புக்குளம் | 2.48 Mn | | | 25,000.00 | ஒட்டுசுட்டான் |
| | கரிப்பட்டமுறிப்புக்குளம் | 2.48 Mn | | | 25,000.00 | ஒட்டுசுட்டான் |
| | அம்பகாமம் குளகலிங்கு | 0.96 Mn | | | 10,000.00 | ஒட்டுசுட்டான் |
| | முறியாகுளம் கால்வாய் | 1.16 Mn | | | 12,000.00 | ஒட்டுசுட்டான் |
| | பழம்பாசிக்குளகலிங்கு | 1.64 Mn | | | 17,000.00 | ஒட்டுசுட்டான் |
| | கருணாட்டுக்கேணி கால்வாய் | 0.77 Mn | | | 8,000.00 | கொக்குத்தொடுவாய் |
| | நாயடிச்சான்முறிப்பு கமப்பாதை | 1.90 Mn | | | 20,000.00 | கொக்குத்தொடுவாய் |

உதவி ஆணையாளர்,
கமநல அபிவிருத்தித் திணைக்களம்,
முல்லைத்தீவு.

(C-8847)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடனடி வேலை வாய்ப்பு**
**V2 TRAVELS**
UK-550/=Kg
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
நீண்ட காலமாக வேலை தேடுபவரா?
எமது அலுவலகத்திலேயே இலவசமாக கற்பித்து வேலையும் கொடுக்கின்றோம்
5,000/= (பயிற்சியின் போது) //15,000/= (பயிற்சியின் பின்னர்)
தகுதி :-40 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
இதுவரை சரியான வாய்ப்புக்கள் மற்றும் தொழில் அனுபவங்கள் கிடைக்காத வாழ்க்கையில் முன்னேற துடிக்கும் கடின உழைப்பாளிகளை எதிர்பார்க்கின்றோம்.
நேர்முகத்தேர்வு - 21-06-2017 புதன்கிழமை காலை 10 மணி
49A சப்பல்லேன், யாழ்ப்பாணம். (யாழ் பொது நூலகம் முன்னால்)
**0768226236**



**With or Without O/L or A/L or Degree**
**மாதம் 25,000/-க்கு மேல் சம்பாதிக்கக்கூடிய**
**100** சதவீதம் உத்தரவாதமான க்கணக்கான வேலைவாய்ப்புக்கள்!



Receptionist - Telephone Operator - Cashier
Waiter - Storekeeper - Salesperson - Tour Guide
Room Boy - Supervisor - Marketing Officer
Assistant Manager - Manager
Dip. in Business / Tourism / Hotel
**Management**
விரும்பிய துறையில் வேலைவாய்ப்பு பெறலாம்
FREE 3 மாத ஆங்கில கற்கைநெறி
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு
Student Visa - Work Visa - Skilled Migration to UK / Australia / New Zealand Canada & Malaysia
அனுமதிகளுக்கு www.sikaram.lk 077 3616 798 021 222 0011
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
175, 1ஆம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி), யாழ்ப்பாணம்.
(9-885)



**நடமாடும் மிருகவைத்திய சேவை**
சுன்னாகத்துக்கு அண்மையில் மிருக வைத்திய தேவைகளுக்கு தொடர்பு கொள்ளவும். Dr.K.கிருபாகரன்
0779738802
முருகேச பண்டிதர் வீதி, சுன்னாகம்.
(9523)



**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
2018 ஜனவரி பரீட்சைக்கான
**aat [Sri Lanka]**
**[AA1, AA2, AA3]**
Qualification:- G.C.E. O/L 6 Passes
Medium - Tamil & English
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
0212223382 / 0212229149


## யானை...

நபரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த நபர் பழங்களை விற்பனை செய்து வாழ்க்கை நடத்தி வந்தவர் எனவும், காட்டில் பழம் பறிக்க சென்றிருந்த போது யானையின் தாக்குதலுக்கு உள்ளாகி இருப்பதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர். (செ-11)


**எவரெஸ்ட் குமாரிக்கா சந்தனாதி தைலம்**



- நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கும்
- இளநரையை போக்கவும்
- பொடுகிலிருந்து நிவாரணம் பெறவும்
- கண் எரிச்சல், தலை வலியை நீக்கவும்
- ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யவும்
- ஏழு வகையான மூலிகைகள் உள் அடங்கிய சிறப்பு தைலம்

100 வீதம் இயற்கையானது
(கற்றாழை, வல்லாரை, நெல்லிக்காய், கரிசலாங் கண்ணி, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, அவுரி மற்றும் விற்றமின் E)
(9447)
எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்
தயாரிப்பு: எவரெஸ்ட் மருந்தகம், உசன், மிருசுவில், யாழ்ப்பாணம்.
ஏக விநியோகஸ்தர்: பிரமநாதன் & Co எண்.28, 26, பேரின்பநாயகம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
கைபேசி எண்: 0776389356, 0777153571



**பொருளியல் கருத்தரங்கு**
**A/L 2017**
**S.JEYAKUMAR**
[B.A (Hons) Econ spl, MA in Econ, PGDE]
- ஒவ்வொரு தேர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டவை (கையேடுகள் வழங்கப்படும்)
- எதிர்பார்க்கை வினாக்களும் புள்ளித்திட்ட விளக்கங்களும்
- எட்டு கருத்தரங்குகள்.

(9529)
ஆரம்பம் : 26.06.2017
திங்கள் 1.00pm - 5.00pm
**D.C.M யாழ்.நகர்**
(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
தொடர்பு : 077 723 8597, 077 956 5245
- வெளிமாணவர்களும் கலந்துகொள்ள முடியும்
- பதிவுகளை 24.06.2017க்கு முன் மேற்கொள்ளவும்


## ரூபாய் 100க்கு கடவு...

இதன்படி வெள்ளம், மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களினால் வெளிநாட்டு கடவுச்சீட்டை தொலைத்தவர்கள், அதனைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்கள் வசிக்கும் பிரதேச செயலாளர் பரிந்துரையின் படி, விண்ணப்பதாரர் செலுத்த வேண்டிய கட்டணங்களை குறைந்த விலையில் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

2017ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியின் பின்னர் வெளிநாட்டு கடவுச்சீட்டு பெற்றுக் கொண்டாலும், இதுவரை வெளிநாடு செல்லாத நபராக இருந்தால், அந்த நபரிடம் 100 ரூபாய் என்ற சாதாரண கட்டணத்தை மாத்திரம் பெற்றுக்கொண்டு புதிய வெளிநாட்டு கடவுச்சீட்டை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிவாரணம் ஓகஸ்ட் மாதம் 30ஆம் திகதி வரை மாத்திரம் செயற்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதித்துள்ளது.

தற்போது காணப்படுகின்ற சட்டரீதியான நிலைமையின் கீழ் வெளிநாட்டு கடவுச்சீட்டு செல்லுபடியாகும் காலப்பகுதி முடிவதற்கு முன்னர் காணாமல் அல்லது சேதமடைந்திருந்தால் புதிய கடவுச்சீட்டு பெற்றுக் கொள்ளும் போது 10ஆயிரம் ரூபாய் அறவிடப்படுகின்றது.

எனினும் அண்மையில் நாட்டில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக குறிப்பிடத்தக்க அளவு மக்களின் வெளிநாட்டு கடவுச்சீட்டு பாதிக்கப்பட்டுள்ளது. இதனை கருத்திற் கொண்டு அரசாங்கத்தினால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. (செ-11)


**வீடு வாடகைக்கு உண்டு**
இணுவில் மத்திய கல்லூரி முன்பாக கே.கே.எஸ் வீதியில் சகல வசதிகள் கொண்ட வீடு ஒன்று வாடகைக்கு கொடுக்கப்படும். நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொடர்பு :
**076 914 1301**
(9526)



**தரமான மணல் விற்பனை**
கட்டடத்திற்கு பயன்படுத்தப்படும் அரித்தெடுத்து கழுவிய தூய்மையான பெருக்கன், Nice மண் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு.
Note: அரச வேலைகளுக்கு மிகவும் விரும்பக்கூடிய மணல்.
எமது நிறுவனத்துக்கு கட்ட உப ஒப்பந்தகாரர் தேவைப்படுகின்றனர். உடனடியாக தொடர்பு கொள்ளவும்
(9524)
**தொடர்பு : 0779487659**


## 25-வது ஆண்டு மறவா நினைவில்



### அமரர் வைத்தியர்
### சு.இராமலிங்கம்

*தாய்மடியில்: 28.02.1909*
*சிவனடியில்: 27.06.1992*

"உங்கள் நினைவில் வாழ்கின்றோம்
உங்கள் பெயர் சொல்லி வாழ்கின்றோம்"

உங்களைப் பற்றி பண்டிதர் வித்துவான் இ.திருநாவுக்கரசு அவர்கள் தந்த இரங்கல் செய்தியை நினைவு கூருகின்றோம்.

"ஆவரங்கால் சின்னத்தம்பி வைத்தியசாலை - இணுவில் ஸ்தாபகரும் ஆயுள்வேத - விசேட வாதரோக வைத்தியரும் ஆகிய டாக்டர் சுப்பிரமணியம் இராமலிங்கம் அவர்கள் ஒரு பூரண வாழ்வு வாழ்ந்தவர். இணுவில் கந்தசுவாமி கோயில் தர்மகர்த்தா சபைத் தலைவராகவும், இணுவில் இந்து சமய அபிவிருத்திச் சங்கத் தலைவர்களில் ஒருவராகவும் இருந்தவர். மேலும் இணுவில் கந்தசுவாமி கோவில் ஸ்தாபகர் குழந்தையர் வேலாயுதர் பரம்பரையினர் மணியகாரரான அம்பலவாணர் சுப்பிரமணியத்தின் திருக்குமாரர் ஆவார். தவத்திரு க.வடிவேல் சுவாமிகளைக் குருவாகக் கொண்டவர். இன்னும் இணுவில் கந்தசுவாமி கோயில் இடைக்கால தர்மகர்த்தா சபை தலைவராக இருக்கும் வேளை மஹோற்சவ புண்ணிய நாளான கார்த்திகை திருவிழா அன்று சிவபதம் அடைந்தார். அவர் ஆத்மா சாந்தி பெறுவதாக."

கே.கே.எஸ் வீதி,
இணுவில்.

குடும்பத்தினர்

(9525)

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 · 07 · 1930



மறைவு 22 · 06 · 2009

### அமரர் சுப்பிரமணியம் நாகராஜா
(Retired MSO Jaffna Post office)

திதி: சதுர்த்தசி [22.06.2017]

*ஆண்டுகள் எட்டு கடந்தாலும்*
*உங்கள் நினைவுகள் நீங்குவதில்லை*

மோகன் குடும்பம் (யாழ்ப்பாணம்)
பாபு குடும்பம் (பிரான்ஸ்)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.